www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

ஜனவரி 2010
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 10.00




## துரோகிகளின் மவுனத்தில் துடிக்கும் முள்ளிவாய்க்கால்

படிப்பகம்

www.padippakam.com

# புவனேசுவரி தலைமையில் தொண்டைமான் குரு பூஜை!

**வா**சகர்களுக்கு புவனேசுவரியைத் தெரியாமலிருக்க வாய்ப்பில்லை. விபச்சார வழக்கில் போலிசாரால் கைது செய்யப்பட்ட அந்த அம்மையார் சொன்னதாகச் சில பிரபல நடிகைகளின் பெயர்களை தினமலர் வெளியிட்டதைத் தொடர்ந்து, பத்திரிகை உலகத்துக்கு எதிராக கலை உலகம் கொதித்தெழுந்தது.

தமிழ்ச் சமூகத்தை தாங்கி நிற்கும் மூன்று தூண்களில் சினிமா, பத்திரிகை ஆகிய இரண்டு தூண்கள் மோதிக் கொண்டு வீழ்ந்து விட்டால், டாஸ்மாக் என்ற மூன்றாவது தூணின் மீது தமிழ்ச் சமூகத்தின் மொத்த வெயிட்டும் இறங்கி, அந்தத் தூணும் தள்ளாடி நிலைகுலைந்து விடக்கூடும் என்ற அபாயத்தை தொலைநோக்குடன் புரிந்து கொண்ட கலைஞர், உடனே தலையிட்டு அவ்விரு தூண்களுக்கிடையில் போர் நிறுத்தம் செய்து வைத்தார். அப்புறம் புவனேசுவரியைப் பற்றி நாம் எல்லோருமே மறந்து விட்டோம்.

இப்படி தனியொரு பெண்ணாக நின்று தமிழகத்தையே திரும்பிப் பார்க்க வைத்த புவனேசுவரி 'யார்' என்பதை அறிந்து கொள்ளும் அக்கறை, மூவேந்தர் முன்னேற்றக் கழகத் தலைவர் டாக்டர் சேதுராமனுக்கு மட்டுமே இருந்திருக்கின்றது. அந்த அம்மையார் யார் என்று புரிந்து கொண்ட மறுகணமே, அவரை மூவேந்தர் முன்னேற்றக் கழகத்தின் மகளிர் அணித் தலைவியாக நியமித்து விட்டார் டாக்டர் சேதுராமன். அந்த அம்மையார் தேவர் குருபூசைக்கும் சென்று வந்து விட்டார். தமிழகத்தையே கட்டி ஆண்ட மூவேந்தர் பரம்பரையில் வந்தவர்தான் புவனேசுவரி என்ற தெரிந்த பிறகு, இனி அவர் மீது கைவைக்கும் தைரியம் போலிசுக்கு வருமா என்று பார்ப்போம்.

ஒரு வேளை வெள்ளைக்காரன் மட்டும் நம் நாட்டைப் பிடிக்காமல் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும், யோசித்துப் பாருங்கள்!

மன்னர் சேதுராம பாண்டியர், இளவரசி புவனேஸ்வரி, இளவரசர் கார்த்திக், தளபதி ஸ்ரீதர் வாண்டையார் போன்ற மாணிக்கங்களின் ஆட்சியின் கீழ் நாம் குடிமக்களாக இருந்திருப்போம். காந்தி கிடையாது, சுதந்திரம் கிடையாது, அரசியல் சட்டம் கிடையாது, அம்பேத்கரும் கிடையாது. எனவே பாப்பாபட்டி, கீரிப்பட்டியும் கிடையாது. அம்பேத்கர் சட்டக்கல்லூரியில் அரச பரம்பரையினர் படிக்க வேண்டிய கட்டாயமோ, தேவர் குரு பூசைக்கு போஸ்டர் அடிக்க வேண்டிய தேவையோ, அப்புறம் அடிபட வேண்டிய அவசியமோ கூட கிடையாது. என்ன செய்வது, வரலாறு என்பது வேந்தர் பரம்பரைகள் விரும்பும் வழியில் செல்வதில்லையே!

சென்னை சட்டக்கல்லூரி பிரச்சினையையே எடுத்துக் கொள்ளுங்களேன். புவனேசுவரி என்ற 'மாதர் குல மாணிக்க'த்தை மகளிர் அணித் தலைவியாகவும், கார்த்திக் போன்ற 'தெளிந்த சிந்தனை'யாளர்களை கட்சித் தலைவர்களாகவும் கொண்டாட முடிந்த மூவேந்தர் வாரிசுகளான மாணவர்களுக்கு, அம்பேத்கர் பெயரைப் போட்டு போஸ்டர் அடிப்பது கவுரக் குறைச்சலாக பட்டிருக்கின்றது. எது கவுரவம் என்பதில் இரு வேறு கருத்துகள் இருக்கக்கூடாதா என்ன?

வெள்ளையனை எதிர்த்துப் போராடித் தூக்கில் தொங்குவது மருது சகோதரர்களுக்கு கவுரவமாகப் பட்டிருக்கின்றது. அந்த மருது சகோதரர்களைத் தோற்கடிப்பதற்கு வெள்ளைக்காரனுக்கு வழி சொல்லிக் கொடுத்து, படை கொடுத்து, அவன் படைகளுக்கு சோறும் ஆக்கிப் போட்ட புதுக் கோட்டை தொண்டைமானுக்கு, வெள்ளைக்காரன் கொடுத்த மெடலைக் கழுத்தில் தொங்கவிட்டுக் கொள்வது கவுரவமாக இருந்திருக்கின்றது. வெள்ளைக்கார துரையால் வளர்க்கப்பட்ட இந்த தொண்டைமானின் இளவல், அந்த துரையைத்தான் அப்பா என்று கூப்பிடுவானாம். அவன் மகனுக்கு அதுதான் கவுரவமாகப்பட்டிருக்கின்றது. இப்படி வெள்ளைக்காரனிடம் அப்பன் பதவியையே பறிகொடுத்த தொண்டைமான், சின்ன மருதுவை நாய் என்று ஏசியிருக்கிறான். இவையெல்லாம் கவுரவப் பிரச்சினை குறித்த சில வரலாற்று விபரங்கள்.

சரி நிகழ்காலத்துக்கு வருவோம். புவனேசுவரியை மகளிரணித் தலைவியாகக் கொண்ட மூவேந்தர் முன்னேற்றக் கழகத்தினர், தேவர் குருபூசைக்கு ஒட்டுவால் மாதிரி மருதிருவர் குரு பூசை என்று ஒரு கூத்தையும் கடந்த 5 ஆண்டுகளாக அரங்கேற்றத் தொடங்கியிருக்கின்றனர். பசும்பொன் முத்துராமலிங்கம் படம் பொறித்த மஞ்சள் கொடிகளுடன், ''தேவர் வாழ்க! தேவர் படை போதுமா! இன்னும் கொஞ்சம் வேணுமா! பனமரத்துக்கே வவ்வாலா! தேவருக்கே சவாலா!'' என்ற தேவர் குருபூசையின் கொள்கை முழக்கங்கள் தான் மருதிருவர் குருபூசைக்கும்!

மருது சகோதரர்கள் அகமுடையார் சாதியில் பிறந்தவர்கள். எனினும் உடம்பில் ஐரோப்பிய ரத்தம் ஓடும் ஆங்கிலேய கைக்கூலிகளைத் தவிர மற்ற அனைவரையும் ஒரே மக்களாகக் கருதி, அணி திரட்டியவர்கள். மேலும் வேலைக்காரர்களாக இருந்து பாளையக்காரர்களாக மாறியவர்கள் என்பதால், அவர்கள் மூவேந்தர் பரம்பரைக்குரிய தகுதி இல்லாதவர்கள். எனவே வேந்தர் பரம்பரையில் வந்த சேதுராமன், புவனேசுவரி அம்மையார் போன்றவர்கள் மருதிருவருக்கு குருபூசை நடத்துவது தங்களுடைய கவுரவத்துக்கு இழுக்கு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். பக்கத்திலேயே இருக்கிறது புதுக்கோட்டை! விஜரகுநாத தொண்டைமான், முக்குலத்தில் ஒரு குலமான புதுக்கோட்டை கள்ளர் சாதியைச் சேர்ந்தவர். ஒரிஜினல் ஆண்ட பரம்பரை. மூவேந்தர் பரம்பரையின் கவுரவத்துக்கு ஏற்றவர்.

எனவே அடுத்த ஆண்டு முதல் மருதிருவர் குருபூசையைக் கைவிடுமாறும், புவனேசுவரி அம்மையார் தலைமையில் தொண்டைமான் குருபூஜையை துவக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம். சிறப்பு விருந்தினர்களாக மன்மோகன் சிங்கையும், சிதம்பரத்தையும் அழைக்கலாம். தட்டாமல் வருவார்கள்.

• புதூர் இராசவேல்



படிப்பகம்

www.padippakam.com

**கலை இலக்கியம் யாவும் மக்களுக்கே!**

- புதிய கலாச்சாரம்
- மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

- போர் : **27**
- குரல் : **4-8**
- செப்.-டிச. 09, ஜன. - 10

உள்நாடு: ரூ. 10.00
ஆண்டுச் சந்தா: ரூ. 150.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா ரூ. 750.00

*சந்தா, படைப்புகள் அனுப்பவும் தகவல்களுக்கும்*

இரா. சீனிவாசன்,
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
(15-ஆவது தெரு அருகில்),
அசோக் நகர்,
சென்னை - 600 083.

தொலைபேசி: 044-23718706
9941175876

மின் அஞ்சல் முகவரி:
pukatn@gmail.com.

அலுவலக நேரம்:
காலை 10 முதல் மாலை 5 மணி வரை.

*அட்டை வடிவமைப்பு:*
ஸ்பார்ட்டகஸ்

# செம்மொழி மாநாடு:
# சக்கரவர்த்தியின் வெட்டி விழா!

**ச**க்கரவர்த்திகளின் பெருமை தம்மை உலகறிய பறைசாற்றிக் கொள்வதில் தங்கியிருக்கிறது. கருணாநிதிச் சக்கரவர்த்தியின் அந்திமக் காலமிது. காந்தி, நேரு, காமராஜ் வரிசையில் தானும் இந்திய அரசியலில் காவிய நாயகனாக நிலைபெற வேண்டும் என்ற ஆசை, அவரை வெறியாய் அலைக்கழிக்கிறது. தள்ளாத வயதிலும் குத்தாட்ட நடிகைகள் முக்கால் நிர்வாணத்துடன் அவரை போற்றிப் பாடும் நிகழச்சிகள் எதையும் அவர் தவறவிட்டதில்லை. அப்படி வருடா வருடம் பாராட்டிய ஜெகத்ரட்சகனுக்கு மத்திய அமைச்சர் பதவியே கிடைத்திருக்கிறது.

குடும்பச் சொத்தையும், கட்சிச் சொத்தையும் தனது வாரிசுகள் மனம் நோகாமல் பிரித்துக் கொடுக்க வேண்டும் எனற கவலை சக்கரவர்த்தியை வாட்டாமல் இல்லை. தென் மாவட்டங்களை ஆயுள் குத்தகைக்கு எடுத்திருக்கும் மூத்த இளவரசர் கட்சியில் முக்கியப் பொறுப்பைக் கேட்கிறார். இளைய இளவரசரோ துணை முதலமைச்சரிலிருந்து, முதலமைச்சராக முடிசூடக் காத்திருக்கிறார். இளவரசி கனிமொழிக்கு வெறும் நாடாளுமன்ற உறுப்பினர்தானா, அமைச்சர் பதவி இல்லையா என்று இரண்டாவது பட்டத்து ராணி நெருக்குகிறார்.

பேரன் பேத்திகளெல்லாம், தொலைக்காட்சி, படத்தயாரிப்பு என்று செட்டிலாகி விட்டனர். கூடிய விரைவில் பாகப்பிரிவினைகளை சுமுகமாக முடித்துவிட்டு தனது ஓய்வையே ஒரு வரலாற்றுப் பிரகடனமாக அறிவிப்பதற்கு செம்மொழி மாநாடு.

மற்றவர்கள் கணிப்பது போல ஈழப்படுகொலைக்குக் காரணமான கறைபடிந்த கைகளை கழுவுவதற்கு மட்டுமல்ல இந்த மாநாடு. சென்ற தேர்தலில் செல்லுபடியாகாத ஈழம் அடுத்த தேர்தலில் பேசாப் பொருளாகி விடும் என்பது சக்கரவர்த்தி அறியாததல்ல. ஆனால் தனது வரலாற்றுப் பெருமைகளை நினைவுகூர்ந்து முடித்து விட அவருக்கு ஒரு பிரம்மாண்டமான களம் தேவை. இதுவரையிலும் அவரது அரசியலுக்கு செருப்பாய் உழைத்த தமிழ், இன்று அவரது இறுதி அத்தியாயத்துக்கு சேவை செய்வதற்கும் காத்து நிற்கிறது.

கோவையில் செம்மொழி மாநாடு என்று அறிவித்தவுடனே, முழு அரசு எந்திரமும் அங்கே சென்றுவிட்டது. எல்லா அமைச்சர்களும் ஆளுக்கொரு பணிக் குழுவின் தலைவராய் முடுக்கி விடப்பட, கோவை மாவட்ட ஆட்சியர் மாநாட்டுக்கான அதிகாரியாகவே மாறியிருக்கிறார். அடுக்கு மாடிக் குடியிருப்புகள், செப்பனிடப்படும் சாலைகள், பிரம்மாண்டமாய் மாநாட்டின் கட்டமைப்பு பணிகள் எல்லாம் முழு வீச்சில் செயல்படத் துவங்கிவிட்டன.

சுனாமி வந்து ஆண்டுகள் சில கழிந்தும் அதன் நிவாரணப் பணிகள் முடியாத நாட்டில், இம்மாநாட்டுக்கான நிர்மாணப் பணிகள் கால இலக்கோடு முடுக்கி விடப்படுகின்றன. விலைவாசி உயர்வு, கல்விக் கட்டண உயர்வு, வேலையின்மையால் கவ்வப் பட்டுள்ள மக்களை, தமிழின் பெயரால் திசைதிருப்ப பல நூறுகோடிகள் கொட்டப்படுகின்றன.

சரி, போகட்டும். சக்கரவர்த்தியின் இந்த மாநாட்டால் தமிழுக்கு என்ன கிடைக்கும்? குடும்பத் தொலைக்காட்சிகளான சன்னும், கலைஞரும் தமிழைக் கொன்றுவரும் காலத்தில், கல்வி-வேலை வாய்ப்பில் தமிழுக்கு இனி எப்போதும் இடமில்லை என்று தீர்ப்பெழுதப்பட்ட காலத்தில், இந்த மாநாட்டின் பயன் என்ன? கணநேர வாண வேடிக்கையின் கணிப்பைத் தவிர எஞ்சப்போவது சாம்பல் மட்டுமே.

உழைக்கும் தமிழர்கள் கிராமங்களிலிருந்து விரட்டப்பட்டு நாடோடிகளாய் நகரங்களை நோக்கிப் படையெடுக்கும் காலத்தில், வன்னித் தமிழர்கள் விடுதலையை எதிர்பார்த்து வதை முகாம்களில் கண்ணீர் விடும் காலத்தில் செம்மொழி மாநாடு என்ன செய்யும்?

சக்கரவர்த்தியின் குடும்பத் தொலைக்காட்சிகள் தவிர்க்கவியலாமல் செம்மொழி மாநாட்டை ஒளிபரப்ப வேண்டியிருக்கும் என்பதால், 24 மணிநேர குத்தாட்டக் கொடுமையிலிருந்து சில மணிநேரங்களுக்காவது தமிழனுக்கு விடுதலை கிடைக்கும் என்று ஆறுதல் கொள்ளலாம். ஆயினும் சக்கரவர்த்தியிடம் தமிழ் சிறைப்படும் - அதைத் தவிர்க்கவோ தப்பிக்கவோ தமிழால் ஏலாது.

•

படிப்பகம்

www.padippakam.com

# துரோகிகளின் மவுனத்தில் துடிக்கும் முள்ளிவாய்க்கால்!

**மே** 2009-இல் ஈழப்பிரச்சினை தொடர்பாக புதிய ஜனநாயகம் இதழின் சார்பில் மூன்று வெளியீடுகள் கொண்டுவரப்பட்டன. தமிழக ஓட்டுக் கட்சிகள் தமது தேர்தல் சந்தர்ப்பவாதத்துக்கு ஈழப் பிரச்சினையைப் பகடைக்காயாகப் பயன்படுத்துவதையும், தமிழ்நாட்டின் தமிழ்த் தேசியவாதிகள் எனப்படுவோரும் புலிகளும் இந்திய மேலாதிக்கத்துக்கு ஈழப் போராட்டத்தைப் பலியிட்டிருப்பதையும், ஈழப்போராட்டம் குறித்த ஒரு மீளாய்வின் அவசியத்தையும் அந்த மூன்று வெளியீடுகளும் பேசின. இந்த வெளியீடுகளுக்கு புலிகள் இயக்க ஆதரவாளர்கள் பலரும் வெளிப்படுத்திய எதிர்வினை - பகையுணர்வு, மவுனம்.

புலிகள் பெரும் பின்னடைவைச் சந்தித்திருந்த ஒரு சூழலில், அரவணைத்து ஆறுதல் கூறுவதற்குப் பதிலாக, விமரிசிப்பது என்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் வேலை என்பது அவர்களுடைய கருத்து. பாராட்டுபவனே நண்பன், விமரிசிப்பவன் எதிரி என்ற ஓட்டுக் கட்சி அரசியலின் பண்பாடு இவர்களுடைய பார்வையின் மீது செலுத்தும் செல்வாக்கு இத்தகைய கருத்து உருவாவதற்குக் காரணமாக இருக்கின்றது.

ஒரு போராட்டத்தின் தவறுகளைச் சுட்டிக்காட்டி விமரிசிப்பதென்பது, அந்தப் போராட்டத்தின் வெற்றிக்குச் செய்யப்படும் உதவி. குறிப்பிட்ட இயக்கங்கள் அல்லது தலைவர்களின் கவுரவத்தையும் நலனையும் காட்டிலும், மக்களுடைய போராட்டத்தின் நலன் மேம்பட்டது. வெளிப்படையான அரசியல் விமரிசனங்களும் விவாதங்களும்தான் தவறுகளிலிருந்து மீள்வதற்கும், சரியான வழியைக் கண்டறிவதற்கும் வழி - என்பது எங்களுடைய பார்வை.

விமரிசனங்கள் முடக்கப்படும் இடத்தில்தான் துரோகிகள் பெருகுகின்றார்கள். வெளிப்படையான அரசியல் விவாதம் மறுக்கப்படும் இடத்தில், திரைமறைவுச் சதிகள் மூலம் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. கருத்து வேறுபாடுகளின் இடத்தை அவதூறுகளும், முத்திரை குத்துதல்களும் பிடித்துக் கொள்கின்றன.

இவையெல்லாம் நன்னெறிப் போதனைகள் அல்ல. எமது விமரிசனங்களைக் கண்டு முகம் சுளித்த புலிகள் இயக்க ஆதரவாளர்களைக் கேட்கிறோம்: முள்ளிவாய்க்கால் கொலைக்களத்தின் பின்னால், திரைமறைவில் நடைபெற்றிருக்கும் பேரங்கள் - நாடகங்கள், பிரபாகரன் குறித்த மர்மங்கள், யார் புலிகள் இயக்கத்தின் உண்மையான பிரதிநிதி, யார் நண்பன், யார் உளவாளி என்று புரிந்துகொள்ள முடியாத குழப்பங்கள்.. இவையெல்லாம் உங்களுக்கு அதிர்ச்சியூட்டவில்லையா? இந்த நிலைமைகள் திடீரென தோன்றியவையென்று கருதுகின்றீர்களா?




நேர்மையான சந்தர்ப்பவாதம் என்று எதை நாங்கள் குறிப்பிட்டோமோ அது, பச்சையான துரோகமாக அம்பலமாகி நிற்கின்றபோதும், புலிகளும் புலி ஆதரவாளர்களும் அதைப் புரிந்து கொள்ளும் திராணியற்றவர்களாக, புரிந்தாலும் புலம்புவதைத் தவிர வேறு வழி தெரியாதவர்களாக மாறியிருப்பதன் காரணம் என்ன என்பதைக் காலம் கடந்த பின்னராவது பரிசீலிப்பீர்களா? பார்ப்போம்.

•••

**தே**ர்தல் நாளன்று எழுதி முடிக்கப்பட்ட ''ஈழம் நேர்மையான சந்தர்ப்பவாதமும், நேர்மையற்ற சந்தர்ப்பவாதமும்'' என்ற எமது வெளியீடு கீழ்க்கண்ட வரிகளுடன் முடிந்திருந்தது:

''நோக்கத்தில் நேர்மை இருப்பதால் வழிமுறையின் நேர்மையின்மை குறித்து கவலைப்படத் தேவையில்லை என்று இதுகாறும் நீங்கள் இறுமாந்து இருந்திருக்கலாம். நேர்மையான சந்தர்ப்பவாதமும், நேர்மையற்ற சந்தர்ப்பவாதமும் தோற்றுவிக்கும் விளைவு ஒன்றுதான் என்பதை விரைவிலேயே காண்பீர்கள். அப்போதும் நாங்கள் எழுப்பிய கேள்விகளைப் புறக்கணிக்கவே விரும்புவீர்கள். எனினும், அவை உங்களுக்குள்ளிருந்தே எழும் கேள்விகளாகவும் மாறியிருக்கும்.''

எதிர்பார்த்ததைப் போலவே அந்த வெளியீடுகள் எழுப்பிய கேள்விகள் அன்று புறக்கணிக்கப்பட்டன. பிரபாகரன் உயிரோடு இருக்கின்றார் என்பதற்குப் புகைப்பட ஆதாரத்தை வெளியிட்ட நக்கீரன் தான் அந்த நாட்களின் நாயகன். அந்த நக்கீரன் அட்டைப்படம் ஒரு கிராபிக்ஸ் வேலை என்பதைப் புரிந்து கொள்வதொன்றும் கடினமல்ல. ஆனால் உண்



படிப்பகம்

www.padippakam.com

மையை எதிர்கொள்வதைக் காட்டிலும் பொய்யில் இளைப் பாறுவதையே புலி ஆதர வாளர்கள் விரும்பினார்கள். எனவே நக்கீரன் அட்டைப் படம் உண்மையாக இருக்க வேண்டுமே என்று விரும்பி, பின்னர் தம் விருப்பத்தையே நம்பிக்கையாகவும் மாற்றிக் கொண்டு ஆறுதல் பெற்றார்கள்.

**களத்தில் இறங்குகிறார் கஸ்பர்!**

இதனைத் தொடர்ந்து அதே கிராபிக்ஸ் வேலையைத் தனது எழுத்தில் காட்டத் தொடங்கி னார் ஜெகத் கஸ்பர். புலிகளின் தியாகம், இறுதிப் போரின் அவலம், பிரபாகரனின் நற்கு ணங்கள், தளபதிகளின் திறமை கள் ஆகியவற்றை விவரிக்கும் போதே, புலிகள் இயக்கத் தலைமையுடன் தான் கொண்டி ருந்த நெருக்கத்தையும் தனது கட்டுரை யில் ஊடும் பாவுமாகச் சேர்த்து நெய் தார். நற்செய்திகளை விசுவாசிகளின் மண்டைக்குள் இறக்கும் கலையை முறைப்படிக் கற்றுத்தேர்ந்த அருட்தந்தை என்ற தகுதியின் காரணமாகவும், சி.ஐ.ஏ-வால் ஸ்பான்சர் செய்யப்பட்ட ''வெரித்தாஸ்'' வானொலியில் பணியாற் றிய அனுபவத்தின் காரணமாகவும், உண்மை எது பொய் எது என்று பிரித்த றிய முடியாத ஒரு மொழி நடையில் புலி ஆதரவாளர்களைத் தனது கஸ்டடிக் குள் கொண்டு வந்தார் கஸ்பர்.



ஜெகத் கஸ்பர்ராஜ்: அருட்தந்தையா, உளவாளியா?

நடேசன், பூலித்தேவன் மற்றும் 300 பேர் இந்தியத் தூதரிடமோ ஐ.நா.வி டமோ ஆயுதங்களை ஒப்படைப்பதற்குத் தயாராக இருந்ததாகவும், இதற்கு கனி மொழி மூலம் காங்கிரசு பெரியவரைத் தொடர்பு கொண்டு தான் ஏற்பாடு செய் ததாகவும், பிறகு அந்தக் காங்கிரசு பெரி யவர், காலம் கடந்து விட்டதால் இனி இலங்கை ராணுவத்திடம் சரணடைவது தான் ஆகக்கூடிய காரியம் என்று கூறிய தாகவும், அதனை ஏற்றுக்கொண்டு, புலி கள் இலங்கை ராணுவத்திடம் சரணடைந் ததாகவும் எழுதினார் கஸ்பர். சரணடைந் தவர்களைச் சுட்டுக் கொல்லும் முடிவை எடுக்க கோத்தபய ராஜபக்சேதான் கார ணம் என்றும் அக்கட்டுரையில் கஸ்பர் குறிப்பிட்டிருந்தார். அப்போது புலிகள் இயக்கத் தலைமையுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட தலைவர்கள் யாரும் இதற்கு மறுப்பேதும் தெரிவிக்கவில்லை என்பதும் இங்கே குறித்துக் கொள்ளத் தக்கது.

பிறகு, கஸ்பரின் நல்லேர் பதிப்பகத் தின் சார்பில் வெளியிடப்பட்ட 'மௌனத் தின் வலி' எனும் கவிதை நூலையும் அந்த வெளியீட்டு விழாவையும் விமரி சித்து, 'வினவு' இணையதளம் வெளி யிட்ட கட்டுரை, இந்தச் சரணடைவு நாட கத்தில் கஸ்பரின் பாத்திரத்தை அம்பலப் படுத்தியது. இதனைத் தொடர்ந்து குமு தம் ரிப்போர்ட்டரில் வெளிவந்த பேட்டி யில் அருட்தந்தை ஆத்திரத் தந் தையாகி வெடித்திருந்தார்.

**போர் நிறுத்தத்தை ஏற்பாடு செய்ய இந்தியா முன்வந்ததாக கஸ்பர் கூறுகிறாரே, இதில் உண்மை இருக்க முடியுமா? போரில் பங்கேற்றது மட்டுமின்றி, அதனை இறுதிவரை உடனிருந்து வழிகாட்டிய இந்திய அரசு, 'இறுதி நேரப் பேரழிவைத் தடுக்க முயன்றதாக' கஸ்பர் கூறுவது பச்சையான பித்தலாட்டம்.**

இதற்குப் பிறகு குமுதம் இணையதளத்தில் கஸ்பரின் பேட்டி வெளிவந்தது. கடைசிக் கட்ட பேரிழப்புகளைத் தடுக் கும் விதமாகப் போர் நிறுத் தத்தை ஏற்பாடு செய்ய இந் தியா முன் வந்ததாகவும், புலி கள் அதனை நிராகரித்து விட் டதாகவும் குறிப்பிட்ட கஸ்பர், வைகோ, நெடுமாறன் போன் றோரின் தவறான வழிகாட்டு தலே இதற்குக் காரணம் என் றும் குற்றம் சாட்டியிருந்தார்.

வைகோ-வையும், நெடு மாறனையும் இழுத்த பிறகு தான் புலி ஆதரவாளர்கள் பல ருக்கு கஸ்பரின் மீதிருந்த விசு வாசம் விலகத் துவங்கியது. கஸ்பரின் எழுத்துகளைச் சந்தே கிக்கத் தொடங்கினார்கள். கஸ்பர் ஒரு இந்திய உளவுத்துறை ஏஜெண்டு என்றும், புலி ஆதரவு இணையதளங்கள் குற்றம் சாட்டத் தொடங்கின.

**புலிகளைக் காப்பாற்ற முயன்றதா இந்திய அரசு?**

கடைசிக்கட்ட பேரிழப்புகளைத் தடுக் கும் விதமாக, ஒரு போர் நிறுத்தத்தை ஏற்பாடு செய்ய இந்தியா முன்வந்ததாக கஸ்பர் கூறுகிறாரே, இதில் உண்மை இருக்க முடியுமா? அந்த நாட்களை நினைவு படுத்திப் பாருங்கள். தேர்தல் நெருங்கியவுடன் கருணாநிதி நடத்திய உண்ணாவிரத நாடகத்தைத் தொடர்ந்து, கனரக ஆயுதங்களைப் பயன்படுத்த மாட் டோமென்று ஒரு பதில் நாடகத்தை நடத் தியது இலங்கை அரசு. அதற்கு 'போர் நிறுத்தம்' என்று கொண்டு கூட்டிப் பொருள் விளக்கம் கொடுத்தார் ப.சிதம் பரம். உடனே 'நாங்கள் போர் நிறுத்த மெல்லாம் செய்யவில்லை' என்று மறுப்பு வெளியிட்டது இலங்கை அரசு. 'இல்லையில்லை இது போர்நிறுத்தம் தான்' என்று சிதம்பரமும் கருணாநிதியும் சாதித்தார்கள்.

தமிழகத்தில் வாக்குப்பதிவு முடியும் வரை இந்த நாடகத்தை நடத்தி விட்டு, அதன்பின் மூர்க்கமாக இறுதித் தாக்கு தலை நடத்தி முடிப்பது என்பதுதான் இந்திய - இலங்கை கூட்டுத் திட்டமாக இருந்திருக்கின்றது. அதனால்தான் புலி கள் பலமுறை போர்நிறுத்தம் கோரியும், போர்நிறுத்தம் என்ற பேச்சுக்கே இட மில்லை என்று இலங்கை அரசு நிராகரித்



படிப்பகம்

www.padippakam.com

தது. அதனை இந்திய அரசு வழிமொழிந்தது.

போரில் பங்கேற்றது மட்டுமின்றி, அதனை இறுதிவரை உடனிருந்து வழிகாட்டிய இந்திய அரசு, ‘இறுதி நேரப் பேரழிவைத் தடுக்க முயன்றதாக’ கஸ்பர் கூறுவது பச்சையான பித்தலாட்டம். அது மட்டுமல்ல, எல்லாம் முடியும் நேரத்தில் போர்நிறுத்தம் செய்து, புலித் தலைவர்களைச் சரணடைய வைத்து, அவர்களை உயிரோடு பிடித்துக் கொண்டு வந்து, புதிய அரசியல் நெருக்கடிகளையும் வில்லங்கங்களையும் உருவாக்கிக் கொள்வதற்கு இந்திய அதிகார வர்க்கமொன்றும் அடி முட்டாளல்ல.



நக்கீரன் அட்டை – பொய்யென்று தெரிந்தாலும் அதையே புலி ஆதரவாளர்கள் நம்ப விரும்பினார்கள்.

### கஸ்பரை யூதாஸ் என்று சொல்ல முடியுமா?

அப்படியானால் நடேசனும் பிற புலித் தலைவர்களும் இலங்கை ராணுவத்தால் கொல்லப்படுவார்கள் என்று தெரிந்தேதான் அவர்களையெல்லாம் இந்தச் சதி வலையில் கஸ்பர் சிக்க வைத்தாரா? புலிகளைக் காட்டிக் கொடுத்து ஆதாயம் பெற்ற யூதாஸ்தான் அருட்தந்தை கஸ்பர் என்ற முடிவுக்கு நாம் வந்து விடலாமா? அப்படி அவர் அடைந்த ஆதாயத்தை நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் எதுவும் நம்மிடம் இல்லை. அல்லது ஒரு தீய உள்நோக்கத்துடன்தான் (malafide intention) புலிகளை இந்தச் சதிவலையில் அவர் சிக்க வைத்தார் என்றும் நம்மால் நிரூபிக்க முடியாது.

எனினும் இந்தக் குற்றத்திலிருந்து கஸ்பரை விடுதலை செய்யவும் முடியாது.

கஸ்பரும் கனிமொழியும் புலித்தலைவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற நல்லெண்ணத்தால் உந்தப்பட்டே இந்த முயற்சியில் இறங்கியிருக்கக் கூடும். கருணாநிதியை அவமதித்த புலிகள், ராஜீவ் கொலை மூலம் தி.மு.க.வினரை அடி வாங்க வைத்து விட்டு, தற்போது தேர்தலில் ஜெ.வை ஆதரித்தவர்கள்.. இப்படி ‘எண்ணற்ற மனவருத்தங்களையும், வலிகளையும் மவுனமாக விழுங்கிக் கொண்டு, தனது பெருந்தன்மை குறித்து தானே நெகிழ்ச்சி கொண்ட நிலையில்தான்’ சிதம்பரத்திடம் பேசியிருப்பார் கனிமொழி. கனிமொழியே கவனிக்கத் தவறிய கனிமொழியின் பெருந்தன்மைகளை அந்த இக்கட்டான தருணத்திலும் கஸ்பர் நினைவுபடுத்தியிருப்பார்.

எனினும், புலித் தலைவர்களைக் காப்பாற்றும் இவர்களுடைய நல்ல நோக்கத்தை உளவுத்துறை தனது தீய நோக்கத்திற்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கலாம். இந்திய உளவுத்துறை - உள்துறை மேல்மட்டங்களால், அல்லது அந்தக் காங்கிரசு பெரியவரால் கஸ்பர் ஏமாற்றப்பட்டிருக்கலாம். அவ்வாறாயின், ‘‘இன்னின்னார் என்னை ஏமாற்றி விட்டார்கள்’’ என்று கஸ்பர் நேர்மையாகச் சொல்லியிருக்க வேண்டும். ‘‘உங்களுடைய வாக்குறுதியை நம்பித்தானே அவர்களைச் சரணடையச் சொன்னேன். இந்தப் படுகொலைக்குப் பதில் சொல்லுங்கள்!’’ என்று சிதம்பரத்தைச் சந்திக்கு இழுத்திருக்க வேண்டும்.

இந்தப் போர்க் குற்றத்தை நாம் நிரூபிக்க முடியாது. ஆனால் அருட்தந்தை கஸ்பரோ இதற்கு நேரடி சாட்சி. கொடுத்த வாக்குறுதியை மீறி நிராயுதபாணிகளைப் படுகொலை செய்த இலங்கை அரசை இந்திய அரசு விசாரிக்க வேண்டும் என்று கஸ்பர் கோரிக்கை எழுப்பலாமே, உண்ணாவிரதம் இருக்கலாமே!

கஸ்பர் இப்படியெல்லாம் செய்திருந்தால் அவர் காங்கிரசு அரசின் கோபத்துக்கு இலக்காக நேர்ந்திருக்கும். கனிமொழி, கருணாநிதி ஆகியோரின் பகைமையைத் தேடிக்கொள்ள நேர்ந்திருக்கும். அந்த நள்ளிரவில் நடைபெற்ற இந்தத் திரைமறைவு நாடகத்தில், நாம் இதுவரை அறிந்திராத நிழல் மனிதர்கள் பலரும் சந்திக்கு வர நேர்ந்திருக்கும். அதன் விளைவுகள் விபரீதமாக இருக்கும்.

பொன்சேகாவின் அறிக்கை வெளிவந்தவுடன் பிரணாப் முகர்ஜி பதறிப் போய் இலங்கைக்கு ஓடியதை நாம் பார்க்கவில்லையா? கோத்தபயவைக் குற்றம் சாட்டிய பொன்சேகா, மறுநாளே பல்டியடித்ததையும் நாம் பார்க்கவில்லையா? ஆனானப்பட்ட இராணுவ ஜெனரலுக்கே இந்தக் கதி என்றால் கேவலம் ஒரு அருட்தந்தையின் நிலை பற்றி என்ன சொல்ல?

ஈழம் செத்தபிறகும் ரத்தம் கறக்கிறார் ஜெகத் கஸ்பர்.



பழியிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இந்திய அரசை ஒருவேளை கஸ்பர் சந்திக்கு இழுத்திருந்தால், அதிகாரத் தாழ்வாரங்களில் அவர் பெற்றிருக்கும் செல்வாக்கை அந்தக் கணமே இழந்திருப்பார் - அது குறைந்த பட்ச இழப்பு. அதிகபட்ச இழப்பு அகால மரணமாகக் கூட இருக்கலாம்.



படிப்பகம்

www.padippakam.com

என்ன செய்வது? நாயுடன் படுத்தவன் உண்ணியுடன்தான் எழுந்திருக்க வேண்டும். உளவுத்துறையுடனும் அதிகார வர்க்க மேல் மட்டங்களுடனும் சல்லாபிப்பவர்கள் பாதிவழியில் தமது விசுவாசத்தை முறித்துக் கொண்டால் அவர்களுக்கு நேரும் கதி இதுதான்.

ஆனால் உறுதியான விசுவாசிகளை உளவுத்துறை இயன்றவரை கைவிடுவதில்லை. பிரச்சினை புகையத் தொடங்கிவிட்டது என்று தெரிந்தவுடனே, கொலைப்பழியிலிருந்து கஸ்பரையும் காப்பாற்றி, இந்திய அரசையும் சேர்த்துக் காப்பாற்றிக் கொள்வதற்கு ஏற்ற மாதிரியான ஒரு கதையை உளவுத்துறையே கஸ்பருக்குச் சொல்லிக் கொடுத்திருக்கும் போலும்!

### வேறெப்படிச் சொல்வது?

‘‘சண்டை நிறுத்தத்துக்கு வாய்ப்பிருந்தது. ஆயுதங்களை ஒப்படையுங்கள் என்பது கட்டாயமாகக் கூட கூறப்படவில்லை. இருப்பினும் புலிகள்தான் அதனை நிராகரித்து விட்டார்கள்’’ என்று குமுதம் டாட் காம் பேட்டியில் கஸ்பர் கூறுகிறாரே, இதை நாம் நம்ப வேண்டுமாம்.

கொண்டுபோய் கொள்ளி வைத்துக் கொளுத்திவிட்டு வந்தபிறகு, ‘‘தனியா இருந்து கஷ்டப்படாதீங்கப்பா, என்னோட மெட்ராஸ் வந்துடுங்கன்னு போனவாரம் கூடச் சொன்னேன், அவரு கேக்கலியே’’ என்று பெத்த அப்பனுக்குச் சோறு போடாமல் விரட்டிய பிள்ளை எழவு வீட்டில் அங்கலாய்த்து அழுவான். கஸ்பரும் அழுகிறார். இந்த உருக்கமான கதை, குற்றத்திலிருந்து தன்னைத் தப்புவித்துக் கொள்ள உகந்ததாக இருப்பதால் கஸ்பர் இதை நம்புகிறார். நம்மையும் நம்பச் சொல்கிறார்.

கஸ்பரின் குற்றம் அடுத்த படிக்குத் தாவி ஏறுகிறது. நல்லெண்ணத்துடன் கூடிய முட்டாள்தனமாக இருந்திருக்கக் கூடிய ஒரு தவறை (இந்தியாவை நம்பி புலிகளை சரணடையச் சொன்னது) மறைக்க அவர் செய்யும் முயற்சி, கிரிமினல் சதித்திட்டத்தை நோக்கி அவரை அழைத்துச் செல்கிறது. பாட்டியிடமிருந்து பணத்தைத் திருடிய பேரன், திருட்டை மறைக்கும் நோக்கத்துக்காக பாட்டியையே கொலை செய்கிறானே, அந்தத் திசையை நோக்கித்தான் போகிறார் கஸ்பர்.

இருப்பினும், கஸ்பரோ, கனிமொழியோ புலிகளுக்கு நேர்ந்த இந்த முடிவை எண்ணி வருத்தப் பட்டிருக்க மாட்டார்கள் என்று சொல்ல முடியாது. நிச்சயமாக வருந்தியிருப்பார்கள். இருப்பினும் அந்தக் கோரமான முடிவுக்குத் தாங்கள்தான் பொறுப்பு என்பதை மட்டும்தான் அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தம்முடைய ஆலோசனையைக் கேட்டுச் சரணடைவதற்குப் பதிலாக, அவர்கள் தொடர்ந்து சண்டை போட்டிருந்தால் மட்டும் என்ன நடந்திருக்கப் போகிறது? எப்படியும் போரில் கொல்லப்பட்டிருப்பார்கள் என்பதுதானே எதார்த்தம். ஆகவே, ‘‘கொலைக்கு உடந்தையாகிவிட்டதாக எண்ணி, தாங்கள் குற்றவுணர்வு கொள்ளத் தேவையில்லை’’ என்று அவர்கள் தமக்குள் பேசித் தெளிவு அடைந்திருப்பார்கள்.

> **அருட்தந்தை ஜெகத் கஸ்பர் என்ற புலிகள் இயக்க ஆதரவாளர் துரோகியாக மாறிய கதை இதுதான். அல்லது நேர்மைக்குள் கயமையும், நல்லெண்ணத்துக்குள் நயவஞ்சகமும் குடியேறுவது இப்படித்தான். நோக்கத்தில் நேர்மை இருப்பதால் வழிமுறையின் நேர்மையின்மை குறித்து கவலைப்படத் தேவையில்லை என்று கருதுவோர் யாராக இருந்தாலும், அவர்கள் அனைவரும் வந்தடையும் இடம், தற்போது கஸ்பர் வந்தடைந்திருக்கும் இடம்தான்.**

இந்தத் திரைமறைவு விவகாரங்களையெல்லாம் வெளியில் சொல்லாமல் கஸ்பர் மவுனமாகவே இருந்திருந்தால் உங்களுக்கு இதெல்லாம் தெரிந்திருக்கவா போகிறது என்று சில புத்திசாலிகள் குயுக்தியாக கேள்வி கேட்கலாம். நக்கீரன் தொடரில் கஸ்பர் இதையெல்லாம் எழுதக் காரணம் விவரமறியாத வெகுளித்தனமும் அல்ல, பிரபலமடையும் ஆசையும் அல்ல. இத்தகைய திரைமறைவு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள், சிக்கிக் கொள்வதற்கான வாய்ப்புகளையும், தப்பிப்பதற்கான வழிகளையும் தீர்க்கமாக யோசித்துத்தான் அதற்கு ஏற்ற புனைவுகளை உருவாக்குகிறார்கள். புலி ஆதரவாளர்களுடைய மனத்துயரையும், அவர்களுடைய ஏக்கங்களையும், அரசியல் அறிவின்மையையும், ரசிக மனோபாவத்தையும் நன்றாகப் புரிந்து கொண்டு, அவர்களை வீழ்த்தும் விதத்தில் எழுதப்படும் தரம் தாழ்ந்த ஒரு புனைவுதான் - நக்கீரன் தொடர்.

அருட்தந்தை ஜெகத் கஸ்பர் என்ற புலிகள் இயக்க ஆதரவாளர் தன்னை அறியாமல் துரோகியாக மாறிய கதை இதுதான். அல்லது நேர்மைக்குள் கயமையும், நல்லெண்ணத்துக்குள் நயவஞ்சகமும் குடியேறுவது இப்படித்தான். தன்னைக் காப்பாற்றிக் கொள்வதும் தன்னை நியாயப்படுத்திக் கொள்வதும் தான் இதன் ஒரே நோக்கம்.

நோக்கத்தில் நேர்மை இருப்பதால் வழிமுறையின் நேர்மையின்மை குறித்து கவலைப்படத் தேவையில்லை என்று கருதுவோர் யாராக இருந்தாலும், (அவர்கள் நல்லெண்ணம் கொண்ட, நேர்மையான, தூய்மையான, எளிமையான சந்தர்ப்பவாதிகளாக இருந்தாலும்) அவர்கள் அனைவரும் வந்தடையும் இடம், தற்போது கஸ்பர் வந்தடைந்திருக்கும் இடம்தான்.

### நேர்மையான குறுக்குவழி - கஸ்பரின் பங்காளிகள்!

கஸ்பரோடு ஒட்டாதவர்களும், அதே நேரத்தில் கஸ்பருக்கு இணையாகப் புலிகளை ஆதரிப்பவர்களுமான நெடுமாறன், வைகோ முதலானோர் இந்தத் துரோகப் பாதையின் இன்னொரு தண்டவாளமாகக் கருதப்படவேண்டியவர்கள். புலிகள் மீதான அதீதமான புகழுரைகளுடன் கப்ஸாக்களையும் கலந்து, நக்கீரன் இதழில் கஸ்பர் பிரசங்கம் செய்து கொண்டிருந்தபோது, எது உண்மை, எது புருடா என்று சாதாரண வாசகனுக்கு வேண்டுமானால் புரியாமல் இருந்திருக்கலாம். ஆனால் புலிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த நெடுமாறன், வைகோ உள்ளிட்ட புலி ஆதரவாளர்களுக்கு இதன் பொய்மை நிச்சயம் புரிந்திருக்கும். ஆனால் ஏன் யாரும் மூச்சுவிடவில்லை? அரசியல் நாகரீகமா? எனில், கஸ்பர் இவர்களைச் சந்திக்கு இழுத்த போதும் அந்த நாகரீகத்தையும் மவுனத்தையும் பேண வேண்டியதுதானே! உடனே இவர்களது ஆதரவாளர்கள் களத்தில் இறங்கி கஸ்பரைக் கிழிப்பது ஏன்?

‘‘மக்களைக் காப்பாற்றுவதற்காகத்தான் நடேசன் தலைமையில் சிங்கள இராணுவத்திடம் சரணடைவது என்ற முடிவைப் புலிகள் எடுத்தார்கள்’’ என்று மே 21 ஆம் தேதி நக்கீரனில் கஸ்பர் எழுதியபோது, நெடுமாறன், வைகோ,



படிப்பகம்

www.padippakam.com

சீமான், மணியரசன் போன்ற யாரும் அதனை மறுக்கவில்லையே! கேள்விக்கு உள்ளாக்கவில்லையே!

கொடூரமான சிங்கள இனவெறி இராணுவம் எந்த யுத்த தருமத்துக்கும் கட்டுப்படாது என்ற உண்மை புலித் தலைவர்களுக்குத் தெரியாதா? தெரிந்தும் இப்படி ஒரு தற்கொலைப் பாதையைப் புலிகள் தேர்ந்தெடுத்ததாக கஸ்பர் எழுதிய போது, வைகோ, நெடுமாறன் போன்றோரால் அதனை எப்படி நம்ப முடிந்தது?



முள்ளிவாய்க்கால் படுகொலை: இரத்தத்தில் 'கை கழுவியவர்'கள்!

300 பேர் சரணடைவது என்ற முடிவை எடுக்கு முன்னர் புலிகள் நெடுமாறனையோ, வைகோவையோ கலந்தாலோசிக்கவில்லையா? அல்லது ஆலோசனை கேட்ட புலிகளிடம், சரணடைந்து விடுங்கள். எங்களுக்கு வேறு வழி எதுவும் புலப்படவில்லை என்று ஒப்புதல் கொடுத்தார்களா? அவ்வாறாயின், இந்தக் குற்றத்தில் இவர்களும் கஸ்பரின் கூட்டாளிகள் ஆகவில்லையா?

கஸ்பரின் கதை ஒருபுறம் இருக்கட்டும். ஜெயலலிதா வெற்றி பெற்றால் போர்நிறுத்தம் என்பது நெடுமாறன், வைகோ முதலானோரின் கணக்கு. அந்தக் கணக்கு பிசகிவிட்டதுதென்பது மே 16 அன்றே தெளிவாகிவிட்டது. 'இலை மலர்ந்தால் ஈழம் மலரும்' - இலை மலரா விட்டால் என்ன செய்வது என்று பதிலளிக்க வேண்டிய கடமை வைகோவுக்கும், நெடுமாறனுக்கும், சீமானுக்கும் உண்டா இல்லையா? எமது முந்தைய வெளியீட்டில் இதே கேள்வியை நாங்கள் கேட்டோம். எங்களுக்கு பதில் சொல்லவில்லை. இவர்களை நம்பி உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நின்ற புலிகளுக்காவது பதில் சொல்லும் கடமை இவர்களுக்கு உண்டா இல்லையா? மே-16 தேர்தல் தோல்விக்குப் பிறகு... இனி என்ன செய்வது என்று இவர்கள் புலிகளுக்குச் சொன்ன யோசனை என்ன? போரிட்டுச் சாகச் சொன்னார்களா? இவர்கள் பேச்சைக் கேட்காமல்தான் புலிகள் சரணடைந்து விட்டார்களா? சொல்லட்டும்.

வைகோ, நெடுமாறனின் மவுனத்துக்கு என்ன பொருள்?

இந்தக் கேள்விகள் எதையும் புலி ஆதரவாளர்கள் இவர்களைக் கேட்கவில்லை என்பது வெட்கக் கேடு! இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் மவுனம் சாதிக்கும் உரிமை இவர்கள் யாருக்கும் கிடையாது.

இவர்களுடைய 'மகா மவுனம்' நமக்குத் தெளிவுபடுத்தும் செய்தி இதுதான். தங்கள் ஆயுதங்களை மவுனிக்கச் செய்வது என்ற முடிவை புலிகள் மேற்கொள்வதற்கு நெடுநேரம் முன்னதாகவே, இந்த தொப்புள் கொடி உறவுகள் தங்கள் கைபேசிகளை மவுனிக்கச் செய்திருக்க வேண்டும். எங்கள் கணக்கு பிசகி விட்டது. இனி உங்கள் பாடு என்று கை கழுவியிருக்க வேண்டும். கை கழுவியதற்குப் பின்னர் உட்கார்ந்துக் கதறி அழுதிருக்கலாம். ஆனால் அந்தக் கண்ணீர், அறம் கொன்ற கண்ணீர்!

'என் கணக்கு பிசகி விட்டதே' என்று கஸ்பரும்தான் அழுதிருக்கக் கூடும்.

**புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்களே,**

குண்டு வீச்சின் இரைச்சலுக்கும், மக்களின் ஓலத்துக்கும் இடையே, ரத்தமும் கண்ணீரும் ஆறாய்ப் பெருகிக் கொண்டிருந்த அந்தக் கொலைக் களத்தின் மத்தியிலிருந்து தொலைபேசியில் பேசிய சூசையின் குரல் உங்கள் காதிலிருந்தும் மறைந்து விட்டதா? பட்டினியும், தூக்கமின்மையும், மனச்சோர்வும் வாட்ட, கதறுகின்ற மக்களுக்குப் பதில் சொல்லத் தெரியாமல், தமது தலைமைத்துவத்தின் கவுரவம் நொறுங்கி, உடைந்து போன மனிதர்களாய் தத்தளித்த புலிகள் ஒரு ஆதரவுக் குரல் தேடி தொலைபேசியில் இவர்களை அழைத்திருக்க மாட்டார்களா? அழைத்திருப்பார்கள். மீண்டும் மீண்டும் அழைத்திருப்பார்கள். ஸ்விட்ச்டு ஆஃப் என்பதுதான் புலிகளுக்கு கிடைத்த பதில் என்றால் அந்த பதிலின் பொருள் என்ன?

'கை கழுவுகிறவர்கள் தம் கையை இரத்தத்தில் கழுவுகிறார்கள்' என்றார் பிரெக்ட். குற்றத்தை ஒப்புக் கொண்டவன் மன்னிப்புக் கேட்கிறான். தண்டனைக்கு தன்னை ஒப்புக் கொடுக்கிறான். குற்றத்திலிருந்து தப்பிக்க விரும்பும் மனமோ கொடூரமானது. தீர்மானகரமான இத்தகைய தருணங்களில் தான் அது அம்பலமாகிறது. இவர்களுடைய மவுனம் தோற்றுவித்த வலியை நாம் உணர வேண்டும் என்றால் கொல்லப்பட்ட புலித் தலைவர்கள் எழுந்து வந்து நமக்கு சாட்சி சொல்ல வேண்டும். அல்லது புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்களே, நீங்கள் கேள்வி கேட்க வேண்டும்.

ஏன் மவுனம் சாதிக்கிறார்கள்? பேசட்டும். பேசினால்தானே இவர்களுடைய மவுனத்தின் வலியையும் நாம் புரிந்து கொள்ள முடியும்.

இருபதாயிரம் உயிர்களுக்கு இவர்கள் பொறுப்பில்லையா?

கடைசி கட்டப் பேரிழப்புகளைத் தடுக்க ஒரு போர்நிறுத்தத்துக்கு காங்கிரசு அரசு வாய்ப்பளித்தது என்று கஸ்பர் கூறுவது இமாலயப் பொய் என்றால், அம்மாவும் அத்வானியும் வெற்றி பெற்ற மறு கணமே போர்நிறுத்தம் வந்திருக்கும் என்று நெடுமாறனும் வைகோவும் கூறுவது ஒரு ஆகாசப் புளுகு.

அந்த நாட்களை நினைவுபடுத்திப் பாருங்கள்! இங்கே இவர்கள் ஜெயலலி

**முள்ளிவாய்க்காலின் அழிவு கருணாநிதி எதிர்பார்த்ததுதான்!**





படிப்பகம்

www.padippakam.com

தாவுக்கு சுற்றிச் சுழன்று சூறாவளிப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தபோது, அங்கே ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான பிணங்கள் விழுந்து கொண்டிருந்தன. சிங்கள இராணுவம், தான் விரும்பிய திசையில் புலிகளையும் மக்களையும் நெட்டித்தள்ளி, முள்ளி வாய்க்கால் எனும் தூக்குமேடையில் கொண்டு நிறுத்தியிருந்தது.

தப்பிக்கவோ தற்காத்துக் கொள்ளவோ எந்த வழியும் இல்லாத அந்த நிலையில், ஆயுதங்களை மவுனிக்கச் செய்கிறோம் என்ற முடிவை சில நாட்களுக்கு முன்னரே புலிகள் எடுத்திருந்தால், ஒருவேளை, ஆயிரக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கும்.

ஒபாமா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் கோரிக்கைகளை நிராகரித்து விட்டு, மே 13 அன்று தமிழகத்தில் வாக்குப்பதிவு முடிந்தவுடனேயே சிங்கள இராணுவம் வெறிகொண்ட தாக்குதலைத் தொடங்கிவிட்டது. 'ஆயுதங்களை மவுனிக்கிறோம்' என்ற தங்களது முடிவினைத் தள்ளி வைப்பதற்கு வேறு எந்த முகாந்திரமோ நம்பிக்கையோ அவர்களிடம் கிடையாது — இந்தியத் தேர்தல் முடிவுகள் குறித்து நெடுமாறன், வைகோ போன்றோர் கொடுத்த நம்பிக்கையைத் தவிர.

இந்த 4 நாட்களில் கொல்லப்பட்ட புலிப்படையினரின் உயிர்களும் பொது மக்களின் உயிர்களும் யாருடைய கணக்கில் எழுதப்படவேண்டும்?

''அதற்கு நாங்கள் எப்படிப் பொறுப்பேற்க முடியும்? எதிர்பார்ப்புகள் நிறைவேறுவது நம் கையில் மட்டுமா இருக்கிறது?'' என்று புத்திசாலித்தனமாக மடையடைக்கலாம். ஆனால் இந்த மடையடைப்பின் அந்தப் பக்கம் தேங்கியிருப்பது 20,000 மக்களின் இரத்தம்.

சில ஆயிரம் புலிகள் மற்றும் மக்களின் உயிரைப் பணயம் வைத்து இவர்கள் இந்தச் சூதாட்டத்தை நடத்தியிருக்கிறார்கள். அத்வானியின் மீதும் அம்மாவின் மீதும், அவர்களுடைய வெற்றியின் மீதும் இவர்களுக்கு அவ்வளவு நம்பிக்கை இருந்திருக்கிறது! கஸ்பருக்கோ சிதம்பரத்தின் மீது நம்பிக்கை!

கர்த்தரை நம்பி கஸ்பர் ஏமாறட்டும், சிவபிரானை நம்பி நெடுமாறன் ஏமாறட்டும் - அது அவர்களின் தனிப்பட்ட உரிமை. ஆனால் தங்களுடைய அரசியல் நம்பிக்கையின் மீது, ஆயிரம் பதினாயிரம் மக்களின் உயிரை இவர்கள் பணயம் வைக்கும்போது, அதன் விளைவுகளுக்கு அரசியல் ரீதியாகவும், தார்மீக ரீதியாகவும் பொறுப்பேற்றுப் பதில் சொல்லியாக வேண்டும்.

இன்று எல்லாம் முடிந்து விட்டது. ஈழப்பிரச்சினை ஓட்டுக்கு உதவாது என்று புரிந்து கொண்ட ஜெயலலிதா, பிரச்சாரத்தின் இறுதி நாட்களிலேயே ஈழம் பற்றிப் பேசுவதை நிறுத்திவிட்டார். பாரதீய ஜனதாவோ ஈழமா, கிலோ என்ன விலை என்று கேட்கிறது.

''இப்படிப்பட்டவர்களை நம்பியா இத்தனை ஆயிரம் உயிர்களைப் பணயம் வைக்கச் சொன்னோம்?'' என்று வைகோ நெடுமாறன் அணியினர் யாரேனும் எங்கேனும் வருத்தம் தெரிவித்துப் பேசியிருக்கிறார்களா?

> **'இலை மலர்ந்தால் ஈழம் மலரும்' என்றார்கள். மலரா விட்டால் என்ன செய்வது என்று பதிலளிக்க வேண்டிய கடமை வைகோவுக்கும், நெடுமாறனுக்கும், சீமானுக்கும் உண்டா இல்லையா? மே–16 தேர்தல் தோல்விக்குப் பிறகு... இனி என்ன செய்வது என்று இவர்கள் புலிகளுக்குச் சொன்ன யோசனை என்ன? போரிட்டுச் சாகச் சொன்னார்களா? இவர்கள் பேச்சைக் கேட்காமல்தான் புலிகள் சரணடைந்து விட்டார்களா?**

''ஜெயலலிதாவும் பாரதீய ஜனதாவும் வென்றிருந்தால் 17-ஆம் தேதி போர்நிறுத்தம் வந்திருக்கும். ரா-வின் அதிகாரிகளும், ஐ.பி.-யின் அதிகாரிகளும், புலிகளை ஒழிப்பதற்காக இலங்கை அரசுடன் கூட்டாகப் போட்ட திட்டங்கள் அனைத்தையும் 16-ஆம் தேதி இரவே கிழித்துப் போட்டிருப்பார்கள்'' என்ற கதையைத்தான் இந்தக் கணம் வரை இவர்கள் கடை விரித்து வருகிறார்கள்.

### ஜெயலலிதா வென்றிருந்தால்...?

உண்மை என்ன? பா.ஜ.க. வென்றிருந்தாலும் முள்ளிவாய்க்காலில் இப்போது என்ன நடந்ததோ அதுதான் நடந்திருக்கும். ஆனால், பாத்திரங்கள் இடம் மாறியிருப்பார்கள். வைகோவும் நெடுமாறனும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருப்பார்கள். கஸ்பரும் கருணாநிதியும் அவர்களைக் குற்றம் சாட்டிக் கொண்டிருந்திருப்பார்கள்.

தன்னைத் தற்காத்துக் கொள்ள தேவையான கதையை வை.கோ நமக்குச் சொல்லியிருப்பார். ''அத்வானி அவர்களே, நீங்கள் இடுகின்ற முதல் ஆணை என் ஈழத்தமிழனைக் காப்பாற்ற வேண்டும். இதற்காக என் தமிழினம் என்றென்றைக்கும் உங்களுக்குக் கடன் பட்டிருக்கும் என்று கூறினேன். என் கண் முன்னே சிவசங்கர மேனனை அழைத்து அவர் ஆணையிட்டார். இந்திய உளவுத்துறை அதிகாரிகள் நேரில் விரைந்தார்கள். ஆனால் ஐயகோ, மாபாவி கோத்தபய ராஜபக்சே அதற்கு முன்னே சதி செய்து கொன்றுவிட்டான்'' என்று பேசிவிட்டு கருப்புத் துண்டால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருப்பார்; இன்று ப.சிதம்பரத்தை கஸ்பர் நியாயப்படுத்துவதைப் போலவே, நெடுமாறன் அம்மாவை நியாயப்படுத்தியிருப்பார். இந்தக் காட்சிகளையெல்லாம் காணமுடியாமல், தமிழ்நாட்டு மக்கள் இவர்களைக் காப்பாற்றி விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

இவர்களுடைய அரசியல் நிலைப்பாடு அறியாமையிலிருந்து பிறந்தது அல்ல. பச்சையான சந்தர்ப்பவாதம். தங்களுடைய அரசியல் ஆதாயத்துக்கு ஈழ மக்களையும் புலிகளையும் பகடைக் காயாக்கிவிட்டு, இன்று பரிதாபத்துக்குரிய அவல நிலைக்கு அந்த இனமே தள்ளப்பட்ட சூழலிலும் கூட, கடுகளவும் குற்றவுணர்வு கொள்ளாத கல்நெஞ்சக் காரர்கள் இவர்கள்.

தேர்தல் புறக்கணிப்பு என்ற முழக்கத்தை நாம் வைத்தபோது, ''உங்கள் கொள்கையெல்லாம் சரிதான். ஆனால் இது நடைமுறை சாத்தியமான தீர்வு எதையும் ஈழத்தமிழ் மக்களுக்கு வழங்காது'' என்று ஒரு ஏளனப்புன்னகையால் எங்களை ஒதுக்கி விட்டு, கம்பீரமாக இரட்டை இலைக்கு ஓட்டு கேட்கப் போனார்கள். தேர்தல் தோல்வியை விட்டுத் தள்ளுவோம். நடைமுறை சாத்திய மான தீர்வை வழங்கும் அம்மாவும் அத்வானியும் போர்க்குற்றங்களை எதிர்த்துக் குரல் கொடுக்கிறார்களா? போராடுகிறார்களா? இவர்களுடைய வெற்றிதான் ஈழத்தமிழர்களை வானமேற்றி வைகுந்தம் சேர்த்திருக்குமா?



படிப்பகம்

www.padippakam.com

**அந்த நாட்களை நினைவுபடுத்திப் பாருங்கள்! இங்கே இவர்கள் ஜெயலலிதாவுக்கு சுற்றிச் சுழன்று சூறாவளிப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தபோது, அங்கே ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான பிணங்கள் விழுந்து கொண்டிருந்தன. இந்த நாட்களில் கொல்லப்பட்ட புலிப்படையினரின் உயிர்களும் பொதுமக்களின் உயிர்களும் யாருடைய கணக்கில் எழுதப்படவேண்டும்?**

இந்தக் கேள்விகள் எல்லாம் இவர்களுடைய சிந்தனைத்திறனுக்கு அப்பாற்பட்ட கேள்விகள் அல்ல. இந்தத் தேர்தல் சூதாட்டம் குறித்து இவர்கள் நெஞ்சில் இருக்கின்ற, ஆனால் வாயில் வராத ஒரு பதில் இருக்கிறது. ''மயிரைக் கட்டி மலையை இழுப்போம். வந்தா மலை, போனா மசிரு'' என்பதுதான் அது. போன உயிர்களைப் பற்றி இதைவிட மேம்பட்ட வேறு மதிப்பீடுகள் எதுவும் இவர்களுக்கு இருக்குமாயின், குறைந்த பட்சம் அந்தக் கடைசி நாட்களில் நடந்த திரைமறைவு நாடகங்கள் பற்றி ஒளிவு மறைவின்றி இவர்கள் பேசியிருப்பார்கள்.

### மவுனம் சாதிக்க இவர்களுக்கு உரிமை உண்டா?

ஈழப்பிரச்சினைக்காகத் தமிழகத்தில் தீக்குளித்தவர்கள், சிறை சென்றவர்கள், பட்டினி கிடந்தவர்கள், தடியடி பட்டவர்கள் எத்தனை பேர்? ஐரோப்பாவின் வீதிகளில் நின்ற புலம் பெயர் தமிழர்கள் எத்தனை இலட்சம் பேர்? யாருக்காகப் போராடினோமோ அவர்களுடைய தலைவிதியை ஒரு பாதிரியும், மந்திரியும், சில அதிகாரிகளும் இரகசியமாகத் தீர்மானிப்பார்களாம். கடைசி நாட்களில் நடந்தது என்ன என்பது பற்றி வைகோவும் நெடுமாறனும் பேசவே மாட்டார்களாம். எல்லாம் முடிந்துவிட்ட பிறகும் நடந்ததைச் சொல்ல மாட்டார்களாம்.

''சம்மந்தப்பட்டவர்களின் ஒப்புதலைப் பெற்றுக் கொண்டுதான் எதையும் நான் பேச முடியும்'' என்று குமுதம் பேட்டியில் கூறுகின்றார் கஸ்பர். ஈழத்துடன் சம்மந்தப்பட்டவர்கள் யார்? தமிழக மக்களா, யாரோ சில உளவுத்துறை அதிகாரிகளா?

சில அரசியல் தரகர்களும், பிழைப்புவாதிகளும், சந்தர்ப்பவாதிகளும் உருட்டும் தாயக்கட்டையாக ஒரு இனத்தின் விடுதலைப் போராட்டமே மாறிப்போனதற்கும், உலகில் வேறு எங்கும் காணாத வகையில் ஒரு முற்றான துடைத்தொழிப்பு நடந்து முடிந்திருப்பதற்கும் காரணம் ஒரு பாதிரியும், தமிழகத்தில் சில மாவீரர்களும் மட்டுமல்ல.

### துரோக நாடகத்தின் பாத்திரங்கள்!

இந்தப் பக்கம் கஸ்பர், அந்தப்பக்கம் நெடுமாறன், வைகோ என்று ஒட்டாமல் பிரிந்திருக்கும் இந்தத் தண்டவாளங்கள் இரண்டும் ஒரே திசையை நோக்கித்தான் புலிகளை இட்டுச் சென்றன. ஆனால் 'ஒன்றுக்கு இன்னொன்று மாற்று' என்று கருதி இந்தத் தண்டவாளங்களின் மீது சவாரி செய்தார்கள் புலிகள். எஞ்சினுக்கு என்னதான் ஆற்றல் இருந்தாலும், செல்லும் திசையைத் தண்டவாளங்கள்தானே தீர்மானிக்கின்றன.

இது புலிகளும், பல்வேறு தரப்புகளைச் சார்ந்த அவர்களது அபிமானிகளும் தெரிந்தே தேர்ந்தெடுத்துக் கொண்ட பாதையின் முடிவு. இந்தக் கசப்பான உண்மைக்கு ஒரு நீண்ட வரலாறு இருக்கின்றது. அதனை விவரிக்க இது இடமல்ல. நடப்பு நிகழ்வுகளுக்கு வருவோம். இந்தத் துரோக நாடகத்தின் பார்வையாளர்களான புலி ஆதரவாளர்கள் தம்மையும் அறியாமல் இதன் பாத்திரங்களாகவும் இருந்து வருகிறார்கள்.

கிளிநொச்சியின் வீழ்ச்சிக்குப் பிறகாவது தாங்கள் ஆபத்தின் விளிம்பில் நிற்பதை புலிகள், தமது தமிழக ஆதரவாளர்களுக்கு உணர்த்தினார்களா, அல்லது தாங்கள் உருவாக்கிக் கொண்ட நாயக பிம்பத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக உண்மையை அவர்களிடமிருந்தும் மறைத்தார்களா - தெரியவில்லை.

புலிகளே சொல்லியிரா விட்டாலும் சொந்த அறிவு உள்ளவர்கள் யாரும் கிளிநொச்சி வீழ்ச்சிக்குப் பின்னர் புலிகளின் அரசியல், ராணுவப் பின்னடைவைப் புரிந்து கொண்டிருக்க முடியும். ஆனால், கிளிநொச்சியின் வீழ்ச்சியை 'மாபெரும் பின்வாங்கும் போர்த்தந்திரம்' என்றும், 'சிங்கள ராணுவத்தை உள்ளே இழுத்து ரவுண்டு கட்டி அடிப்பதற்காகத்தான் புலிகள் பின்வாங்குகின்றார்கள்' என்றும் புலி ரசிகர்கள் இங்கே ராணுவ ஆய்வுகளை வெளியிட்டார்கள். வேறு சிலர் 'புலிகளையாவது வெல்வதாவது' என்று பொதுக்கூட்டம் போட்டு நமக்குத் தைரியம் சொன்னார்கள்.

புலி ஆதரவாளர்களின் மனோநிலை கொஞ்சம் விசித்திரமானதுதான். 'ஏசு கிறிஸ்துவின் கடைசி ஆசை' என்ற திரைப்படத்தில் வரும் ஒரு காட்சியை அது நினைவூட்டுகின்றது. சிலுவையில் அறையப்பட்டு அரை மயக்க நிலையில் கனவு காணும் ஏசு, தான் சிலுவையிலிருந்து தப்பி காதலியை மணந்து குடும்பம்

மௌனத்தின் வலி அல்ல! துரோகத்தின் வலி!






படிப்பகம்

www.padippakam.com

நடத்துவதாகக் கனவு காண்பார். அந்தக் கனவுக்குள் ஒரு காட்சி - 'ஏசு நமக்காக சிலுவையில் மரித்தார்' என்று சந்தையில் நின்று பிரச்சாரம் செய்து கொண்டிருப்பார் ஒரு மதபோதகர். அவரிடம் சென்று ''நான்தான் ஏசு, நான் மரிக்கவில்லை. பெண்டாட்டி, பிள்ளைகளுடன் சந்தோசமாக இருக்கிறேன்'' என்று கூறுவார் ஏசு. மதபோதகரோ, ''நீ ஏசுவாகவே இருந்தாலும் சரி, எங்களைப் பொருத்தவரை ஏசு சிலுவையில் மரித்து விட்டார்'' என்று தீர்க்கமாகப் பதிலளிப்பார்.

'பாரியதொரு தோல்வி' என்று புலிகள் இயக்கத்தினரே கூறியபின்னரும், இது 'தோல்வியே அல்ல, பின்வாங்கும் போர்த்தந்திரம்' என்று கடந்த டிசம்பர் 26-ஆம் தேதி தஞ்சாவூரில் மாநாடு போட்டு பேசுகின்றார்கள் புலி ஆதரவாளர்கள். கூடியிருக்கும் ஆயிரம் பேர் இந்த மாபெரும் உண்மையைக் கைதட்டி வரவேற்கிறார்கள். இவர்களையெல்லாம் எந்தக் கணக்கில் சேர்ப்பது?

கஸ்பர் நக்கீரன் இதழில் புலிகளை வானளாவப் புகழ்ந்து தள்ளியபோது, நிகழ்காலத்தை மறந்து அந்தக் கதகதப்பில் புலி ஆதரவாளர்கள் கண் மயங்கினார்கள். இப்போது கஸ்பரை ''உளவாளி, இயக்கத்தால் ஒதுக்கி வைக்கப்பட்டவர்'' என்றெல்லாம் சாடுகின்றார்கள். இயக்கத்தால் ஒதுக்கி வைக்கப்பட்டவரை நடேசன் ஏன் தொடர்பு கொண்டார் என்ற கேள்வியோ, போரை நடத்தும் எதிரியின் (காங்கிரசு) அணிக்காரரை எதற்காக நடேசன் தொடர்பு கொண்டார் என்ற கேள்வியோ அவர்களுக்கு எழவே யில்லை. கஸ்பரின் ஆலோசனைப்படி ''இலங்கை ராணுவத்திடம் சரணடைவது என்ற பாரிய முடிவை எடுத்த நடேசன், உங்களைக் கலந்தாலோசிக்கவில்லையா?'' என்று நெடுமாறன், வைகோ போன்றோரை இவர்கள் கேட்பதுமில்லை.

பொதுவாக, அரசியல் தரத்தில் தி.மு.க. தொண்டனைவிடத் தங்களைப் பெரிதும் உயர்ந்தவர்களாகத்தான் கருதிக் கொள்கிறார்கள் புலி ஆதரவாளர்கள். திருமண உதவி, ஒரு ரூபாய் அரிசி, கலர் டிவி என்று என்னென்னவோ கொடுக்கிறார் கலைஞர். ''யார் தாலியை அறுத்து இந்த தருமம் நடக்கிறது?'' என்ற கேள்வியை எந்த தி.மு.க. தொண்டனும் கேட்பதில்லை. ''கொடுக்கிறாரா வாங்கிக் கொள்!'' - அவ்வளவுதான். காங்கிரசோடு சேர்ந்தாலும், பாரதிய ஜனதாவோடு சேர்ந்தாலும் தி.மு.க. தொண்டனைப் பொருத்தவரை, அதெல்லாம் அவருடைய ராஜதந்திரம். ''ஜெயிக்கிறாரா, அதுதான் முக்கியம்''. - இதுதான் சராசரி தி.மு.க. தொண்டனின் பார்வை. கலைஞரின் கொள்கை என்ன என்று தி.மு.க. தொண்டன் கேட்பதில்லை. அவனுக்கு கலைஞர் தான் கொள்கை. புலிகள் குறித்த புலி ஆதரவாளர்களின் பார்வையும் இதுதான்.

**புலிகள் ஆடிய ஆடு-புலி ஆட்டம்!**

புலிகள் இயக்கமோ அனைத்துக்கும் இடமளிக்கின்றது. ஆளும் வர்க்க அரசியல், ஜனநாயகமே இல்லாத அமைப்பு முறை, அணிகளால் தேர்ந்தெடுக்கப்படாத தலைவர்கள், மக்கள்திரள் அரசியலை வெறுத்தொதுக்கும் ராணுவவாத நடைமுறை இவையனைத்தும் கலந்த இவ்வமைப்பு, சிங்கள இனவெறியின் மூர்க்கத்தனம் காரணமாக தனது உறுதியைப் பேண முடிந்தது.

**புலிகளைப் பொருத்தவரை விடுதலை என்பது ஒரு பாதி ஆயுதப் போராட்டம், மறுபாதி லாபியிங் வேலை. அதற்காக இந்தப் பக்கம் நெடுமாறன்– அந்தப் பக்கம் கஸ்பர். இந்த சந்தர்ப்பவாத அரசியலை புலிகள் ஆடுகின்ற 'ஆடு–புலி ஆட்டம்' என்று கூறி புலி ஆதரவாளர்கள் வியந்து கொண்டிருந்தார்கள். இந்த விபரீத ஆட்டத்தில் புலிகளும் வெட்டுப்படக் கூடும் என்பதை அவர்கள் நம்பத்தயாராக இல்லை.**

புலிகளைப் பொருத்தவரை விடுதலை என்பது ஒரு பாதி ஆயுதப் போராட்டம், மறுபாதி லாபியிங் வேலை. அதற்காக இந்தப் பக்கம் நெடுமாறன், வைகோ, பாஜக - அந்தப் பக்கம் கஸ்பர், கனிமொழி. அப்புறம் அமெரிக்காவை சரிக்கட்ட ஒபாமாவுக்கான தமிழர்கள், ஐரோப்பிய நாட்டு அரசுகளுக்குத் தனி ஆட்கள், இலங்கை அரசியலைச் சமாளிக்க துரோகிகள், பிழைப்புவாதிகள் அனைவரையும் அள்ளிக்கட்டிய ஒரு தமிழர் கூட்டணி.... 'யாரை வேண்டுமானாலும் தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளலாம்' என்பதுதான் அவர்களது அரசியல்.

இந்த சந்தர்ப்பவாத அரசியலை ராஜதந்திரம் என்றும், எல்லோரையும் காய்களாகப் பயன்படுத்தி புலிகள் ஆடுகின்ற 'ஆடு-புலி ஆட்டம்' என்றும் கூறி புலி ஆதரவாளர்கள் வியந்து கொண்டிருந்தார்கள். இந்த விபரீத ஆட்டத்தில் புலிகளும் வெட்டுப்படக் கூடும் என்பதை, வெட்டுப்படும் வரை அவர்கள் நம்பத் தயாராக இல்லை.

கூடாத கொள்கைகள் மட்டுமல்ல, கூடாத நட்பும்தான் புலிகளை முள்ளிவாய்க்காலுக்குத் தள்ளிக் கொண்டு வந்தது. அந்த இறுதி நாட்களில் முள்ளிவாய்க்கால் கடற்கரையில் புலித்தலைமையும் ஆயிரக்கணக்கான மக்களும் தப்பிக்கவே முடியாமல் சுற்றி வளைக்கப்பட்டிருந்தபோது, தமிழகத்தின் இரு அரசியல் அணிகளையும் சேர்ந்த புலிகளின் ஆதரவுத் தலைவர்களும் பிரமுகர்களும், தாங்கள் தப்பிக்கும் வழியைத்தான் தேடிக் கொண்டிருந்தார்கள்.

''ஏதாவது செய்யுங்கள்'' என்று முள்ளிவாய்க்காலிலிருந்து எத்தனை தொலைபேசி அழைப்புகள்! எங்களுக்கும் தெரியும். புலி ஆதரவுப் பிரமுகர்களுடைய கைபேசிகள், வெடிகுண்டுகளைப் போல அவர்களை அச்சுறுத்திக் கொண்டிருந்தன.

அந்த நாட்களில் நடேசனுடனோ, பூலித்தேவனுடனோ, பிரபாகரனுடனோ நிகழ்த்தப்பட்ட உரையாடல்கள், வழங்கப்பட்ட ஆலோசனைகள் ஆகிய எவையும் யாருடைய தனிப்பட்ட விவகாரமும் அல்ல. அவை இலட்சக்கணக்கான ஈழத் தமிழ் மக்களின் உயிருடனும் உரிமையுடனும் தொடர்புள்ளவை. அவர்களுடைய தலைவிதியைத் தீர்மானிப்பதில் பாத்திரமாற்றியவை. அவற்றை அறிந்து கொள்ளும் உரிமை தமிழ் மக்கள் அனைவருக்கும் உண்டு. கண்ணுக்கெட்டிய வரை மாவீரர் கல்லறை நீள்வதைக் காட்டி அதனைத் தமிழ் வீரத்துக்கு சான்றாக்கி கொட்டி முழக்கியவர்கள், தமிழகத்தில் தீக்குளித்து இறந்த ஒவ்வொரு இழவு வீட்டுக்குள்ளும் புகுந்து புறப்பட்டு மலர் வளையம் வைத்து விளம்பரம் தேடியவர்கள் - முள்ளி வாய்க்கால் சுடுகாட்டைக் கண்டு மட்டும் முகத்தை மூடிக்கொள்வது ஏன்?

நாங்கள் எழுப்பும் இந்தக் கேள்விகளும் வெந்த புண்ணில் பாய்ச்சப்படும் வேல்களே என்று வியாக்கியானம் செய்யலாம். வெறுப்பை உமிழலாம். எமது



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் ரீதியான விமரிசனங்களால் மனம் புண்பட்டுப் போன 'அனிச்ச மலர்'களைக் கேட்கிறோம். வன்னி மக்களைக் காட்டிலும் நீங்கள் புண்பட்டு விட்டீர்களா? உங்களுடைய தலைவர்களின் இந்தக் கள்ள மவுனம் உங்களைப் புண்படுத்தவே இல்லையா? விசித்திரம் தான்!

**இன்று எல்லாம் முடிந்து விட்டது. ஈழப்பிரச்சினை ஓட்டுக்கு உதவாது என்று புரிந்து கொண்ட ஜெயலலிதா, பிரச்சாரத்தின் இறுதி நாட்களிலேயே ஈழம் பற்றிப் பேசுவதை நிறுத்திவிட்டார். பாரதீய ஜனதாவோ ஈழமா, கிலோ என்ன விலை என்று கேட்கிறது.**

**''இப்படிப்பட்டவர்களை நம்பியா இத்தனை ஆயிரம் உயிர்களைப் பணயம் வைக்கச் சொன்னோம்?'' என்று வைகோ நெடுமாறன் அணியினர் யாரேனும் எங்கேனும் வருத்தம் தெரிவித்துப் பேசியிருக்கிறார்களா?**

அரசு மருத்துவமனையில் தவறான சிகிச்சையால் செத்துப் போன அநாதைப் பிணத்துக்கு, வைத்தியம் பார்த்த மருத்துவரைக் கேள்வி கேட்கக் கூட நாலு பேர் வருகிறார்கள். முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட உங்கள் அபிமான புலித் தலைவர்களும் 20,000 மக்களும் காற்றோடு கரைந்து விட்டார்களே, ஈழத்துக்கு 'வைத்தியம்' சொன்ன உங்கள் தலைவர்களை நீங்கள் ஒரு கேள்வி கூட கேட்கவில்லையே.

எல்லாக் கேள்விகளுக்கும் ஒரே பதில்தான்: இருக்கிறார். உடனே விசில் சத்தம் கூரையைப் பிளக்கிறது. இருக்கட்டும். நாங்கள் இல்லாமல் போன 20,000 பேரின் இறுதி நாட்களுக்கு விளக்கம் கேட்கிறோம். அதற்கும் 'விசில்'தான் பதிலா?

### யார் நண்பன்? யார் துரோகி? யார் தலைவர்?

விடுதலைப் போராட்டத்தில் தோல்வியும், பின்னடைவும் அதிசயமல்ல. ஒரு இயக்கம் அந்தத் தோல்வியை எப்படி எதிர்கொள்கின்றது என்பதுதான் அதன் தரத்துக்கு உரைகல். எது சரி, எது பிழை என்று கொள்கைகளின் மீது இங்கு விவாதம் நடைபெறவில்லை. மாறாக யாரை நம்புவது, யாரை நம்பக்கூடாது என்பது தான் இன்று விவாதப் பொருள்.

'பிரபாகரன் இறந்துவிட்டார்' என்று பத்மநாதன் சொன்னதுமே, 'அவன் துரோகி' என்று பிரகடனம் செய்தார் நெடுமாறன். ''ஆயுதப் போராட்டம் தளபதி ராம் தலைமையில் மீண்டும் தொடங்கவிருக்கிறது'' என்கிறது ஒரு தரப்பு, ''ராம் சிங்கள அரசின் கைக்கூலி'' என்கிறது இன்னொரு பிரிவு. ''நாடு கடந்த தமிழ் ஈழம்'' என்று ஒரு பிரிவு, ''அவ்வாறு பேசுபவர்கள் துரோகிகள்'' என்று இன்னொரு பிரிவு.

'துரோகி' என்ற சொல் ஈழ விடுதலைப் போராட்டத்தில் புழங்கிய அளவிற்கு வேறு எங்கும் புழங்கியிருக்குமா என்று தெரியவில்லை. துரோகி பட்டத்தை வழங்கும் அதிகாரம் படைத்த திருச்சபை இப்போது இல்லையென்பதால், சுயேச்சையான சபைகள் உலகெங்கும் முளைத்து விட்டன. கையில் 'துரோகி' என்ற முத்திரைக் கட்டையுடன் மெய் உலகிலும், மெய் நிகர் உலகிலும் நூற்றுக்கணக்கானோர் அலைகின்றார்கள். முதுகு இருப்பவன் ஒவ்வொருவனும் முத்திரையை சுமந்தாக வேண்டும் என்ற நிலை. அடுத்தவனைத் துரோகியாகவும் தங்களைப் புனிதவானாகவும் சித்தரித்துக்




கொள்ளும் இந்த நாடகம், தவிர்க்கவியலாதபடி ''நீ பத்தினியா - நீ பத்தினியா'' என்ற குழாயடிச் சண்டையில் வந்து நிற்கின்றது.

### திருமாவின் இறுதி ஆயுதம்!

ஜெயலலிதாவினால் பொடாவில் கைது செய்யப்பட்டு, நெடுமாறன் பிணையில் வெளியே வந்த போது, 'அரசியல் பேசக்கூடாது' என்று நீதிமன்றம் போட்ட அநீதியான நிபந்தனையை மீறி, ''பேசுங்கள் ஐயா'' என்று பலரும் வற்புறுத்திய போதிலும், நெடுமாறன் பேசாததற்குக் காரணம் அவருடைய ஜெயலலிதா சார்புநிலைதான் என்கிறார் சுப.வீ.

''தேர்தலில் தோற்றாலும் சரி, ஈழத்துக்காக மூன்றாவது அணி அமைப்போம் என்று நான் சொன்னதை நிராகரித்து என்னை ஜெயலலிதா அணியில் சேர்ப்பதிலேதான் நெடுமாறன் அணியினர் குறியாக இருந்தனர். அ.தி.மு.க.வுக்கு கூட்டணி சேர்ப்பது தான் இவர்களது நோக்கமேயன்றி, ஈழம் அல்ல'' என்கிறார் திருமாவளவன்.

காங்கிரசு அணியில் சேர்ந்தது மட்டுமின்றி, இலங்கைக்கும் போய்விட்டு வந்ததால், திருமாவை நெடுமாறன் அணியினர் விமரிசிக்கத் தொடங்கவே அவர் இறுதி ஆயுதத்தையும் கையில் எடுத்து விட்டார்.

''நடேசன் பூலித்தேவனுடன் பிரபாகரனும் சரணடைந்தார். அதன் பின்னரே கொல்லப்பட்டார்'' என்று தீவிர புலி ஆதரவாளரான ஒரு நண்பர் கூறியதாகவும் அந்த நண்பர் சொன்னதைச் சலனமில்லாமல் கேட்பதைத் தவிர தன்னால் வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை என்றும் எழுதியிருக்கிறார் திருமா. (ஜூ.வி - டிச. 27, 2009).

திருமாவளவனை 'துரோகி' என்று புலி ஆதரவாளர்கள் சாடலாம். ஆனால் அந்தச் சொல் வீரியம் இழந்து நைந்து விட்டது. வெல்லப்பட முடியாத வீரம், சரணடையாத சயனைடு குப்பி என்பனவற்றையே தாயத்தாகக் கொண்டு அரசியல் விமரிசனங்கள் அனைத்தையும் புலிகள் அண்ட விடாமல் விரட்டி வந்த



படிப்பகம்

www.padippakam.com

காலம் முடிந்து விட்டது. இந்தச் சூழ்நிலையிலாவது அறிவுப்பூர்வமான பரிசீலனையை நோக்கி புலி ஆதரவாளர்கள் திரும்பியிருக்க வேண்டும்.

மாறாக, கடவுள் இல்லை என்று நிரூபித்த பெரியாரின் வாதத்துக்கு செருப்பையே தமது பதிலாக எறிந்தார்களே பக்தர்கள், அந்த மனநிலையில்தான் இருக்கிறார்கள் புலிகளின் ஆதரவாளர்கள் பலர். இந்த மனநிலைதான் அருட்தந்தை ஜெகத் கஸ்பரின் கப்சாக்களுக்கான சந்தை. அய்யா நெடுமாறன் அணியினரின் அரசியல் சந்தர்ப்பவாதங்களைப் பாதுகாக்கும் கவசமும் இந்த மனநிலைதான்.

'பிரபாகரன் இல்லை என்று சொல்வதே தமிழ் மக்களின் தார்மீகபலத்தைக் குலைப்பதற்கு சிங்கள அரசு செய்யும் சதி' என்றும் இதற்கு விளக்கமும் கூறுகின்றார்கள். சதி கிடக்கட்டும், இன்று தமிழ் மக்களின் விதிக்கு வழிகாட்டப் போகும் தலைவர் யார்?

எந்தவொரு பிரச்சினையிலும் 'எது சரி' என்ற கேள்விக்கு ''புலி என்ன சொல்கிறதோ அதுதான் சரி'' என்று மட்டுமே பதிலளித்துப் பழகியிருக்கும் புலி ஆதரவாளர்கள், இந்தச் சூழ்நிலையிலும் ஒரு தலைவரையே தேடுகிறார்கள். ஆனால் அவர்கள் முன் 'தலைவர்' இல்லை. 'தலைவர்கள்' அணிவகுத்து நிற்கிறார்கள். நெடுமாறன், வைகோ, ராமதாசு, மணியரசன், மகேந்திரன் இன்ன பிறரில் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும் தலைவர் யார்? தரவரிசைப் பட்டியல் எது?

**உங்களுக்குள்ளிருந்தே எழும் கேள்விகள்!**

ஒரே தலைவர் என்ற நிலை இல்லாததால், சரி பிழையைத் தீர்மானிப்பதற்கு, தவிர்க்கவியலாமல் ஒரு கொள்கை தேவைப்படுகின்றது. எது அந்தக் கொள்கை?

''இந்திய அரசை அனுசரித்து, நமக்கு ஆதரவாகத் திருப்புவதுதான் சிறந்த கொள்கை'' என்கிறார் கஸ்பர். ''அது இந்திய மேலாதிக்கத்துக்கு ஈழத்தைக் காவு கொடுக்கும் சதி'' என்கிறது தமிழர் கண்ணோட்டம். இந்தச் சதியைத்தான் ''இந்திய ராஜதந்திரத்தின் தோல்வி'' என்ற தலைப்பில் தினமணியில் நடுப்பக்கக் கட்டுரையாகவே எழுதியிருந்தார் நெடுமாறன். ''இந்தியா என்ற அச்சில்தான் ஈழம் சுழலும்'' என்று தங்களது வெளியுறவுக் கொள்கையைப் பிரகடனமே செய்திருந்தார் பாலசிங்கம். எந்தக் கொள்கை நமது கொள்கை?

''எல்லா தமிழரையும் ஒன்றிணைப்பது என்று பேசுவதே மோசடி'' என்கிறது தமிழர் கண்ணோட்டம். ஆனால், இல.கணேசன், சசிகலா நடராசன், அர்ஜுன் சம்பத், அம்மா என்று அத்தனைத் தமிழர்களையும் ஒன்றிணைத்த அத்தகையதொரு மோசடிக்கு அடிக்கல் நாட்டியவரோ, அய்யா நெடுமாறன்தான். எனில், தமிழர்களை எந்த அடிப்படையில் ஒன்றிணைப்பது?

நாளை இலங்கையில் நடைபெறவிருக்கும் அதிபர் தேர்தலில் தமிழ் மக்கள் செய்யவேண்டியது என்ன? கஸ்பரை துரோகி என்று சாடும் தீவிர புலி ஆதரவு இணையதளங்கள் பொன்சேகாவுக்கு வாக்களிக்குமாறு தமிழர்களைக் கோருகிறது. ''சிவாஜிலிங்கம் தமிழர் ஓட்டுகளைப் பிரிப்பதற்காக நிறுத்தப்பட்டுள்ள ராஜபக்சேவின் கையாள்'' என்கின்றது. ''பொன்சேகா (ரணில்) வெற்றி பெறுவதுதான் தமிழர்களுக்கு நல்லது'' என்று நக்கீரன் கட்டுரையில் கஸ்பரும் இதையே மறைமுகமாக வழிமொழிகிறார். அய்யா நெடுமாறனோ ராஜபக்சேவின் கையாள் என்று தூற்றப்படும் சிவாஜிலிங்கத்துடன் கைகோர்த்து நிற்கிறார். தமிழர்கள் என்ன செய்வது?

**நாங்கள் எழுப்பும் இந்தக் கேள்விகளும் வெந்த புண்ணில் பாய்ச்சப்படும் வேல்களே என்று வியாக்கியானம் செய்யலாம். வெறுப்பை உமிழலாம். எமது அரசியல் ரீதியான விமரிசனங்களால் மனம் புண்பட்டுப் போன 'அனிச்ச மலர்'களைக் கேட்கிறோம். வன்னி மக்களைக் காட்டிலும் நீங்கள் புண்பட்டு விட்டீர்களா? உங்களுடைய தலைவர்களின் இந்தக் கள்ள மவுனம் உங்களைப் புண்படுத்தவே இல்லையா? விசித்திரம்தான்!**

சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் சோனியாவுக்கும், கருணாநிதிக்கும் எதிராக ஜெயலலிதாவையும், அத்வானியையும் ஆதரித்த புலி ஆதரவாளர்களின் நிலைப்பாட்டின்படி, உலகத் தமிழர்கள் பொன்சேகாவின் பின்னால் அணிதிரள வேண்டும். ஆனால் உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் அய்யா நெடுமாறன் ஆசிபெற்ற சிவாஜிலிங்கத்தை ஆதரிப்பதாயின், உலகத் தமிழர்கள் ராஜபக்சேயின் பின்னால் அணிதிரள வேண்டியிருக்கும். இதில் சரி தவறு பற்றி நாங்கள் பேசுவது, புலிகள் இயக்க ஆதரவாளர்களின் மனதை மீண்டும் புண்படுத்தக் கூடும் என்பதால், இந்த விசயத்தில் இப்போதைக்கு நாங்கள் மவுனம் சாதித்து விடுகிறோம்.

இந்தக் கேள்விகள் எவையும் நாங்கள் எழுப்பும் கேள்விகள் அல்ல. நாங்கள் எழுப்பும் கேள்விகளைப் புறக்கணிக்கவே எப்போதும் நீங்கள் விரும்புவீர்கள். இவை உங்களுக்குள்ளிருந்தே எழும் கேள்விகள்.

உங்கள் புண்பட்ட நெஞ்சில் நாங்கள் பாய்ச்சுவது வேல் அல்ல, கொள்கை என்ற ஒரு சொல். இன்று நீங்கள் அனுபவிக்கும் வேதனையிலிருந்து மீள்வதற்கு ஒரே வழி - அந்தச் சொல்லின் முன் சரணடைந்து விடுவதுதான்.

கூச்சப்படத் தேவையில்லை; இந்தச் சரணடைவு கவுரவமானது.

பின் குறிப்பு:

**இக்கட்டுரையில் கஸ்பர், வைகோ, நெடுமாறன் முதலான முக்கியஸ்தர்களை மட்டுமே சந்தர்ப்பவாதத்திற்கும், துரோகத்திற்கும் பிரதிநிதிகளாக காட்டி எழுதியிருக்கிறோம். இவர்களின் பின்னால் எண்ணற்ற தமிழ்த்தேசிய, திராவிட இயக்கம் சார்ந்த அமைப்புகள் ஈழப்போரின் போது அணிதிரண்டு நின்றன. இனவாதத்தை இதயமாகவும், மார்க்சிய-லெனினியத்தை முகப்பூச்சாகவும் அணிந்த 'இடதுசாரி' அணியினரும் இதில் அடக்கம். டூரிங் டாக்கீஸ் விளம்பர வண்டியின் பின்னால் புழுதி கிளப்பிக் கொண்டு ஓடும் சிறுவர்களைப் போல இவர்களில் பலரும் வைகோ, நெடுமாறன் அணியினரின் பின்னால் ஓடினர். ஈழப்போரை நிறுத்த இதுவே காரிய சாத்தியமான தீர்வு என்றும் சாதித்தனர்.**

**பதிலளிக்க வேண்டியவர்கள் இவர்களும்தான். தனியாக பெயர் குறிப்பிடவில்லை என்பதால் தங்களுக்கு இல்லை என்று இவர்கள் கருதிவிடக் கூடாது என்பதற்காகவே இந்த பின் குறிப்பு.**

● சூரியன்



படிப்பகம்

www.padippakam.com

# தினமலர்:

# வருணாசிரமத்தின் மலிவுப் பதிப்பு!

தினமலருக்கு ஆகாதவர்களின் பட்டியல் மிக நீளமானது. பெரியார் இறந்து பல ஆண்டுகள் ஆகிவிட்ட பிறகும் அவரை மட்டம் தட்டி இன்றளவும் செய்திகளை வெளியிடுகின்றது அப்பத்திரிகை. இசுலாமியர்களைத் தீவிரவாதிகளாகச் சித்தரித்து அந்த சமூகத்தையே தமிழ் நாட்டில் அச்சுறுத்தியதில் ஆர்.எஸ்.எஸுக்கு அடுத்த இடம் நிச்சயம் தினமலருக்குத்தான்.

ஈழ ஆதரவாளர்களைப் புலி ஆதரவாளர்களென அரசுக்கு ஆள்காட்டி வேலை பார்த்ததில் தொடங்கி, விவசாயிகளது உரிமைக்காகப் போராடுவோரை நக்சலைட்டுக்கள் எனப் பரப்புரை செய்வது வரை தினமலரது திருப்பணிகள் கணக்கிலடங்காதவை. தங்களது வாசகர்களில் பெரும் சதவீதமானவர்களாக உள்ள அரசு ஊழியர்களின் போராட்டத்தை அவதூறு செய்து, நன்றியுணர்ச்சிக்கு புது இலக்கணம் வகுத்த பத்திரிகை, தினமலர். இந்தியாவுக்கான இலங்கையின் முன்னாள் துணைத்தூதர் அம்சாவை, 'பெருந்தன்மையானவர்' எனச் சொன்ன ஒரே தமிழ் ஊடகமும் தினமலர்தான்.

மேற்கூறிய பிரிவினருக்கெல்லாம் தினமலர் தங்களுக்கு எதிரானது என்பது நன்றாகத் தெரியும். ஆனால் பெரும்பாலான தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட இந்துக்களுக்கு தினமலர் தங்களுக்கும் எதிரி என்பது தெரிவதில்லை. அதன் இந்துத்துவா முகம் எல்லா இந்துக்களுக்கும் ஆதரவான பத்திரிகையைப் போல ஒரு மாய பிம்பத்தைத் தோற்றுவிக்கின்றது. மத மாற்றம் பற்றி ஓலமிடும் செய்திகள், இந்து அமைப்புக்களின் செயல்பாடுகளுக்கு தரப்படும் அதீத முக்கியத்துவம், நிறைந்து வழியும் கோவில், குளம் பற்றிய செய்திகள் என்பன போன்ற செயல்களால் இது இந்துக்களுக்கான பத்திரிகையாகப் பலருக்கும் தோன்றுகிறது.

உண்மையில் அதன் பார்ப்பன சிந்தனை, வாரமலரின் கதைகளில் கூட பிரதிபலிக்கின்றது. 'டி.வி.ஆர் நினைவுச் சிறுகதைப் போட்டி' ஒன்று ஆண்டுதோறும் வாரமலரில் நடத்தப்படுகின்றது. அதில் சாதிக் கொடுமை, இட ஒதுக்கீடு பற்றி வந்த மூன்று கதைகளின் சுருக்கத்தை மட்டும் பாருங்கள்.

1. இட ஒதுக்கீட்டால் பயனடைந்த ஒரு குடும்பத்தின் வாரிசுகள் இட ஒதுக்கீடு பற்றித் தங்களது குடும்ப நண்பர் ஒருவருடன் விவாதிக்கின்றார்கள் (மதிப்பெண் எதிர்பார்த்த அளவு கிடைக்காமல் இருப்பினும், தனக்கு இட ஒதுக்கீட்டில் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்து விடும் என ஒரு வாரிசு சொல்வதில் இருந்து விவாதம் துவங்குகின்றது). குடும்ப நண்பரோ, தாழ்த்தப்பட்டவர்களை முன்னேற்றுவதற்காக அரசு இட ஒதுக்கீட்டை பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வழங்கி வருவதாகவும், இட ஒதுக்கீட்டால் பயனடைந்த ஒரு தலைமுறை தங்கள் வாரிசுகளையும் அந்த ஒதுக்கீட்டில் பலனடைய வைப்பதால் பலருக்கும் அந்த வாய்ப்பு கிடைக்காமல் போவதாகவும் கவலைப்படுகின்றார். உடனே மனம் திருந்துகிறார்கள் அந்த இளைஞர்கள். அந்தக் குடும்பத்தில் பன்னிரெண்டாம் வகுப்பு முடித்த மாணவர், தான் இட ஒதுக்கீட்டை நாடாமல் பொதுப்பிரிவில் என்ன படிப்பு கிடைக்குமோ அதைப் படிக்கப் போவதாகச் சொல்வதுடன் கதை சுபமாக முடிகின்றது. (2008-இல் முதல் பரிசு பெற்ற கதை இது).

2. ஒரு கிராமப்புறப் பள்ளியில், தாழ்த்தப்பட்ட பிரிவு மாணவர்களைத் தொடர்ந்து கழிவறையைச் சுத்தம் செய்யச் சொல்கின்றார்கள் ஆசிரியர்கள். மாணவர்கள் தங்களது வீட்டில் இது பற்றி முறையிடுகின்றார்கள். பெற்றோர்கள் திரண்டுவந்து ஆசிரியர்களுடன் வாக்குவாதம் செய்கின்றார்கள். மாணவர்களுடைய படிப்பு பாழாகி விடுமோ என்று அஞ்சி, ஊருக்குப் போய் பதில் நடவடிக்கையை முடிவு செய்யலாமென பெற்றோர்கள் திரும்புகின்றார்கள். மறுநாள் தலைமை ஆசிரியர் தனது அலுவலகத்தைத் திறக்கும்போது சகிக்க முடியாத துர்நாற்றம் வீசுகின்றது. எல்லா வகுப்பறைகளும் இதே மாதிரி அசிங்கம் செய்யப்பட்டிருப்பதாக மற்ற ஆசிரியர்களும் குற்றம் சாட்டுகிறார்கள். இதனை யார் செய்திருப்பார்கள் என யூகித்த தலைமை ஆசிரியர் காவல் துறைக்கு தகவல் சொல்லக் கிளம்புகின்றார்.

முந்தைய நாட்களில் கழிவறையைச் சுத்தம் செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட மாணவர்கள், தாமாகவே முன்வந்து பள்ளியைச் சுத்தம் செய்வதாகக் கூறுகின்றார்கள். பின்னர், (இளகிய மனம் படைத்தவர்கள் தமது கண்களைத் துடைத்துக்கொள்ளத் தயாராக இருக்கவும்) இந்தச் செயலால் மனம் திருந்திய தலைமையாசிரியர் அவர்களை இனி இந்த வேலையைச் செய்ய வேண்டாம் என்று சொல்லி விட்டு, பள்ளியைச் சுத்தம் செய்ய ஆட்களை அழைத்து வருமாறு தமது ஊழியரைப் பணிக்கிறார். (கடந்த ஆண்டு இரண்டாம் பரிசு பெற்ற கதை இது).

3. ஒரு கிராமத்தின் சலவைத் தொழிலாளியின் குடும்பத்தில், தனது மகளை சலவைக்கான அழுக்குத் துணிகளை ஊராரிடம் வாங்கி வருமாறு பணிக்கிறாள் தாய். சலித்தபடியே துணி வாங்கச் செல்லும் மகள் (பள்ளியிறுதி

**எல்லோரும் சமம் என்றாகிவிட்ட பிறகு (தினமலர் கணிப்பின்படி) அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராவதைத் தடுப்பது எது? கே.ஆர். நாராயணன் குடியரசுத் தலைவரான போது, திருப்பதி தேவஸ்தானம் இனி தாங்கள் விரும்புபவர்களுக்கு மட்டும்தான் பூர்ணகும்ப மரியாதை தருவோம் என முடிவெடுத்த திமிரின் அடித்தளம் எங்கிருக்கின்றது?**



படிப்பகம்

www.padippakam.com

ஆண்டு படிக்கும் மாணவி), போகும் வழியில் தங்கள் மீதான ஒடுக்குமுறையைப் பற்றி சிந்தித்தபடியே செல்கின்றாள். துணி வாங்கும் வீட்டிலும் அவளது சுயமரியாதையைப் பாதிக்கும் செயல்கள் நடக்கின்றன. (சலவைக்காரப் பெண்ணை வெறும் கையோடு அனுப்பாமல் ஏதாவது பட்சணம் கொடுத்தனுப்பு என்று ஒரு பெண் சொல்வதையும், மீதமான உணவைத் தங்களது தலையில் கட்டும் தந்திரம் எனச் சரியாக கணிக்கிறாள் அப்பெண்).

வீட்டுக்கு திரும்பியவளிடம் அவளது அம்மா, இன்று உன் அத்தை வீட்டிலிருந்து உன்னைப் பெண் பார்க்க வருகிறார்கள் என்று சொல்கின்றாள். மன வளர்ச்சியில்லாத அத்தை மகனை மணக்க விரும்பாமல் தான் விரும்பிய இளைஞனை (அவ்வூர் சுடுகாட்டில் பிணம் எரிப்பவர்) மணந்து கொண்டு அந்த ஊரிலேயே வசிக்கிறாள் அப்பெண். கதையின் துவக்கத்தில் குறிப்பிட்ட அவளது வாழ்வியல் சிரமங்களைப் பற்றி மேலதிகத் தகவல்கள் இல்லாமல் முடிகின்றது கதை. (கடந்த ஆண்டு பிரசுரத்திற்கு தேர்வான ஆறுதல் பரிசு பெற்ற கதை இது).

பரிசுக்கான கதைகளைக் கவனியுங்கள். ஒடுக்குமுறைகளால் பாதிக்கப்பட்ட கதை நாயகர்கள் யாரும் தங்களுக்கான நியாயத்தை உரத்துக்கூட கேட்கவில்லை. ஒரு முறைக்கு மேல் இட ஒதுக்கீடு எதற்கு? என்ற தினமலரின் கருத்தை சொல்வதால்தான் முதல் கதை பரிசுக்குரியதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றது. மற்ற கதைகளும் 'விதித்ததை ஏற்றுக்கொள்' என நமக்குப் பாடம் நடத்துகின்றன.

கதையை கதையாக மட்டும் பார் என அறிவுரை சொல்லும் ஆட்களை செருப்பால் அடிப்பது போல ஒரு கருத்தைச் சொல்லி, தான் யார் என்பதை வெட்ட வெளிச்சமிட்டுக் காட்டியிருக்கிறது தினமலர். 2009, நவம்பர் 8-ம் தேதி வாரமலரின் ஞானாந்தம் பகுதியில் ''எந்த ஒரு மனிதனும், தான் பிறந்த குலத்திற்குத் தகுந்த குணங்களையே கொண்டிருப்பான். அவரை போட்டால் துவரை முளைக்குமா?'' என நேரடியாக மனுதர்ம நஞ்சினைக் கக்குகிறது தினமலர். அதை விளக்க வைரம் ராஜகோபால் சொன்ன ஒரு கதையின் சுருக்கம் இது.

ஒரு ஞானியைக் கைது செய்கின்றான் அரசன் (அவர் பிச்சையெடுத்த குற்றத்திற்காக). அவர் ஒரு பெரிய ஞானி என அறிந்து, அவரிடம் பல விசயங்களைக் கேட்டு தெளிவு பெறுகின்றான். அவர் தன் அறிவை நிரூபிக்கும் ஒவ்வொரு தருணத்திலும் கூடுதலாக ஒரு பட்டை சாதம் தினமும் தர உத்தரவிடுகின்றான் அரசன். ஒருநாள் அரசன் தான் எப்படிப்பட்டவன் எனச் சொல்லும்படி ஞானியிடம் கேட்கிறான். ஞானியோ தயங்கியபடி ''நீங்கள் ஒரு சமையல்காரனுக்கு பிறந்தவர்.. ராஜாவுக்கு பிறந்தவரல்ல'' என்கின்றார்.

இதைத் தனது தாயிடம் கேட்கிறான் அரசன். தாயும் நீ சமையல்காரனுக்கு பிறந்தவன்தான் என ஒப்புக்கொள்கிறாள். அந்த ஞானியிடம் ''இதை எப்படி கண்டுபிடித்தீர்கள்'' எனக் கேட்கிறான் அரசன். ''நீ ராஜ குலத்தில் பிறந்தவனெனில், எனக்கு பொன்னையும் பொருளையும் தரச் சொல்லியிருப்பாய். சமையல்காரனுக்கு பிறந்தவன் என்பதால், பட்டை சாதம் தரச் சொன்னாய்'' என்கிறார் ஞானி. (சில விதிவிலக்குகள் இருக்கலாம் என்றும் எச்சரிக்கையாகச் சொல்லி வைக்கிறார் வைரம். ஜெயேந்திரனை பார்த்துவிட்டு, 'எல்லா பிராமணனும் ஸ்த்ரீ லோலனோ' என யாரும் நினைத்துவிடக் கூடாதில்லையா?)

இந்து ஆதரவு எனும் போர்வையில் தனது பார்ப்பனச் சிந்தனையை வாசகர்கள் மீது திணிப்பதில் தினமலர் ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கின்றது. தினமலரின் நீண்டகால வாசகர்கள் பலர் இனியும் இட ஒதுக்கீடு எதற்கு, திறமைக்கு முன்னுரிமை தர வேண்டும். சாதிக்கு அல்ல, சாதீய வேறுபாடுகள் மறைந்து விட்டதால் பொருளாதார ரீதியில் பின்தங்கியிருப்பவருக்கு இட ஒதுக்கீடு கொடு என்ற சிந்தனையோட்டத்தில் இருப்பதைக் காண முடிகின்றது.

தான் ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்தவள் எனப் புதியவர்களுடன் அறிமுகமாகும் போதே சொல்லி விடுவேன் என்கிறாள் என் தோழி (அப்புறமாக அவர்கள் தெரிந்து கொண்டால் பழகுவதில் வேறுபாடு காட்டுவார்களோ என்ற அச்சத்தினால்). தாழ்த்தப்பட்டவர் எனச் சுலபமாக அடையாளம் காட்டும் தனது பெயரை மாற்றிக் கொண்டிருக்கிறார் நான் அறிந்த ஒரு பொறியியல் பட்டதாரி.

இவை எல்லாம் எங்கோ ஒரு மூலையில் நடப்பவை அல்ல, தொழில் நகரமான கோவையில் நடந்தவை. தனிக்குவளை போய் டிஸ்போசபிள் கப் வந்தது தான் சாதி வேறுபாட்டைக் களைவதில் நாம் கண்ட முன்னேற்றம். கிராமப்புறப் பகுதிகளில் முரட்டுத்தனமாக வெளிப்படும் சாதியம் நகர்ப்புறங்களில் நாசூக்கான வழிகளில் வெளிப்படுகின்றது, அவ்வளவுதான்.

இந்த வெளிப்பூச்சு சமத்துவத்தை இட ஒதுக்கீட்டுக்கு எதிரான ஆயுதமாக்கும் தினமலர்தான், பக்தியின் பின்னால் நின்று வர்ண வேறுபாட்டை நியாயப்படுத்துகின்றது. ''பாம்பையும் பார்ப்பானையும் கண்டால் பார்ப்பானை முதலில் அடி'' என்றார் பெரியார். அப்போது எத்தனை பிராமணர்கள் தாக்கப்பட்டார்கள்? ஆனால் பசு ஒரு தெய்வம் எனத் தொடர்ந்து செய்யப்பட்ட பிரச்சாரத்தால் வட மாநிலத்தில் செத்த மாட்டை அறுத்த தலித்துகள்

**ராஜ ராஜனுக்குப் பிறகு வந்த சோழ அரசர்கள், பார்ப்பனரல்லாத மக்களைப் படிப்படியாக தஞ்சை நகரை விட்டு வெளியேற்றினார்கள், இது வரலாறு. ஆனால் இன்றைக்கும் எமது மக்களையும், எமது மொழியையும் வழிபாட்டில் தொடங்கி இசை வரை ஒதுக்கி வைக்கும் வழக்கத்தை என்ன செய்வது? ''போராடு!'' என்றனர் பெரியாரும், அம்பேத்கரும். ''அடுத்த ஜென்மம் வரை காத்திரு!'' என்கிறது தினமலர்.**



படிப்பகம்

www.padippakam.com

எரித்துக் கொல்லப்பட்டார்கள். வார்த்தைகளின் பின்னால் இருப்பவனின் நோக்கம்தான் பின்பற்றுபவனின் செயல்பாட்டைத் தீர்மானிக்கின்றது.

ராஜ ராஜனுக்குப் பிறகு வந்த சோழ அரசர்கள், பார்ப்பனரல்லாத மக்களைப் படிப்படியாக தஞ்சை நகரை விட்டு வெளியேற்றினார்கள், இது வரலாறு. ஆனால் இன்றைக்கும் எமது மக்களையும், எமது மொழியையும் வழிபாட்டில் தொடங்கி இசை வரை ஒதுக்கி வைக்கும் வழக்கத்தை என்ன செய்வது? ‘‘போராடு!’’ என்றனர் பெரியாரும், அம்பேத்கரும். ‘‘அடுத்த ஜென்மம் வரை காத்திரு!’’ என்கிறது தினமலர்.

ஐ.ஐ.டி இட ஒதுக்கீடு தொடர்பான வழக்கில் ’’இரண்டாயிரம் ஆண்டு காத்திருந்தவர்களால் ஒரு ஆண்டு காத்திருக்க முடியாதா?!’’ என ஒரு நீதிபதியைக் கேட்க வைத்தது எது? மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் ஆலய நுழைவுப் போராட்டம் நடந்தபோது, மீனாட்சி செத்து விட்டாள் எனக் கூறி அர்ச்சகர்களை வெளிநடப்பு செய்ய வைத்தது எது? சிறீரங்கம் உஷாவைத் தவிர மற்ற எல்லா சௌபாக்கியங்களும் சிறையில் ஜெயேந்திரனுக்கு தரப்பட்டது. தன்னை எதிர்த்தவனைக் கொலை செய்ய சூத்திரனை நியமித்த ஜெயேந்திரன், சிறையில் தனக்கான சமையலுக்கு மட்டும் பிராமணனை நியமிக்கச் சொன்னது ஏன்?

எல்லோரும் சமம் என்றாகிவிட்ட பிறகு (தினமலர் கணிப்பின்படி) அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராவதைத் தடுப்பது எது? கே.ஆர். நாராயணன் குடியரசுத் தலைவரான போது, திருப்பதி தேவஸ்தானம் இனி தாங்கள் விரும்புபவர்களுக்கு மட்டும்தான் பூர்ணகும்ப மரியாதை தருவோம் என முடிவெடுத்த திமிரின் அடித்தளம் எங்கிருக்கின்றது?

தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த தினமலருடைய வாசகர்கள் அல்லது தினமலரது கருத்துடன் உடன்படுபவர்கள் மேலே உள்ள கேள்விகளுக்கு விடை காண முற்படுங்கள். அதுதான் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கான முதற்படி. அதை விட்டுவிட்டு வாரமலரின் கதை நாயகர்களைப் போல கையைக் கட்டிக் கொண்டு, ‘‘நானே கக்கூசை கழுவுறேன் சாமி’’ என்றால், நமது பிள்ளைகளுக்கும் துடைப்பம்தான் மிஞ்சும்.

● வில்லவன்

# 1984 சீக்கியர் படுகொலை: சர்தார்ஜி மட்டும் உயிரோடிருந்திருந்தால்...

இந்திராஜி கொலை செய்யப்பட்டதையொட்டி, நமது நாட்டில் சில கலவரங்கள் நடைபெற்றன. எல்லோரும் அப்பொழுது மிகவும் ஆத்திரத்தில் இருந்தனர் என்பதை நாம் அறிவோம். மொத்தத்தில் இந்தியாவே குலுங்கியது போல் இருந்தது. ஆனால், ஒரு பெரும் மரம் விழும் பொழுது பூமி அதிர்வது இயற்கையானதே!‘

**(ராஜீவ் காந்தி, நவம்பர் 19, 1984, தனது முதல் பொதுக்கூட்ட உரையில்)**

காங்கிரசைப் பொருத்தவரை இதனை நாம் மறந்து விட வேண்டும், ஒரு விபத்தாக கருத வேண்டும். ‘இப்பொழுதாவது மறந்து விடுங்கள். குறைந்தபட்சம் நாங்கள் மன்னிப்புக் கேட்டு விட்டோம். உங்கள் ஆளை பிரதமராக்கி விட்டோம்’ என்கிறார்கள். நாங்கள் கூறும் பதில் என்னவென்றால், 21 ஆண்டுகள் கழித்து நீங்கள் மன்னிப்புக் கோருகின்றீர்கள். இந்திய சட்டத்தின் கீழ், கொலைக் குற்றத்துக்கான தண்டனைக்கு பதிலாக, மன்னிப்பு வழங்கப் படுவதில்லை. எங்களுக்கு வேண்டியது, நியாயம்!

**(ஹெ.எஸ்.பூல்கா)**

‘மக்கள் புயலடித்து செத்திருந்தால் அது வேறு விவகாரம்; ஆனால், ஒரு படுகொலையை எப்படி மறக்க முடியும்? குறிப்பாக நியாயம் வழங்கப் படாத போது...’

**– ஜர்னைல் சிங், சீக்கியர் படுகொலையில் தலைமை தாங்கியதாக குற்றம் சாட்டப்பட்ட காங்கிரசு அரசியல்வாதிகளுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கிய போது, அதனை எதிர்த்து நிதியமைச்சர் சிதம்பரத்தை நோக்கி செருப்பை வீசியவர்...**

●●●

ஒட்டுமொத்த டெல்லியிலும், இக்கட்டிடம் மிக அதிகமான சிரமங்களையும், நினைவுகளையும் சுமந்து நிற்கும் கட்டிடம். இருந்த போதிலும், நீங்கள் அதனை கடந்து செல்லும் வேளையில் அதனை தலை திருப்பி பார்க்க மாட்டீர்கள். ஏனெனில், நாடு முழுதும் விரவிக் கிடக்கும் அரசு உருவாக்கிய ஆயிரக்கணக்கான நகர்ப்புற கூண்டுகளிலிருந்து, ஒழுங்கற்ற, அழுக்கடைந்த அடுக்குமாடிக் குடியிருப்புகளிலிருந்து இக்கட்டிடத்தை வேறுபடுத்தும் அம்சம் எதுவுமில்லை. அரசின் அலட்சியம், காணும் ஒவ்வொன்றிலும் விரவிக் கிடக்கிறது..

வண்ணம் வெளிறிய சுவர்கள், உதிரும் காரைகள், ஆங்காங்கே தொங்கி நிற்கும் மின்சார வயர்கள், வெளிச்சமற்ற, மாசடைந்த அறைகள்... சிறிய வரண்டாக்களில் காய்ந்து கிடக்கும் ஆடைகள், உள்ளாடைகள்... குறுகிய சந்துகளில் கிரிக்கெட் விளையாடும் சிறுவர்கள், பள்ளியிலிருந்து யூனிஃபார்மோடு வீட்டு வேலைக்கு ஓடும் சிறுமிகள், சமையலிலிருந்தும், சுத்தம் செய்வதிலிருந்தும் சிறிதுநேர விடுதலை பெற்று ஆங்காங்கே கூடிநின்று பேசும் பெண்கள்...

கால் நூற்றாண்டுக்கு முன்பு 1984-ல், திலக் விகாரிலுள்ள இந்தக் கவனிப்பாரற்ற கட்டிடத்தில்தான், டெல்லி தெருக்களில் கொடூரமாக படுகொலை செய்யப்பட்ட சீக்கியர்களின் குடும்பங்

**கழுத்தைச் சுற்றி எரியும் டயர்கள் மாட்டப்பட்டு உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டதைப் பற்றி... மரணிக்கும் வரை துடிதுடித்து ஓடியதைப் பற்றி... கத்திகளாலும், துப்பாக்கிகளாலும் கொலை செய்யப்பட்டதைப் பற்றி...**



படிப்பகம்

www.padippakam.com

களைச் சேர்ந்த 450 கணவனை இழந்த பெண்களும், அவர்களது குழந்தைகளும் அரசால் குடியமர்த்தப்பட்டனர். அரசின் ஆணையின் விளைவாக, இக்கட்டிடத்தின் துயரம் படிந்த சுவர்களுக்குப் பின்னே ஒரு விசித்திரமான சமூகம் வளர்ந்தது. ஏராளமான சிறுவர்களும், சிறுமிகளும் தகப்பனின்றி வளர்ந்தார்கள். துவக்கத்தில் எல்லாக் குழந்தைகளும் இதே வாழ்க்கைதான் வாழ்கிறார்களென அவர்கள் நம்பினார்கள்.

பின்னர் தங்கள் தந்தையை, சகோதரர்களை எவ்வாறு இழந்தோம் என்ற கொடூர உண்மையை மெல்ல மெல்ல, ஒவ்வொருவராக, தனித்தனியாக தெரிந்துக் கொண்டார்கள். துயரார்ந்த முறையில், அந்த உண்மைகளை ஏற்றுக் கொள்ளப் போராடினார்கள்; போராடுகிறார்கள். கழுத்தைச் சுற்றி எரியும் டயர்கள் மாட்டப்பட்டு உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டதைப் பற்றி... மரணிக்கும் வரை துடிதுடித்து ஓடியதைப் பற்றி... கத்திகளாலும், துப்பாக்கிகளாலும் கொலை செய்யப்பட்டதைப் பற்றி... கம்புகளாலும், இரும்புக் கம்பிகளாலும் அடித்துக் கொல்லப்பட்டது பற்றி... பக்கத்து வீட்டுக்காரர்களின் துரோகத்தைப் பற்றி... கண்மூடித்தனமான, இரக்கமற்ற வெறுப்பைப் பற்றி...

திலக் விகார் விதவைகள் காலனியின் இந்தக் காற்றோட்டமில்லாத அடுக்குமாடிக் குடியிருப்பின் மூன்றாவது தளத்தில்தான் எழுத்தறிவற்ற, வயதான லட்சுமி கௌர், தனது வாழ்க்கையின் சரி பாதி காலத்தை வாழ்ந்து வருகின்றார். இந்த வீட்டின் இடுகலான அறைகளுக்குள்தான், தான் நேசிக்கும் அனைவரையும் தீவிரமான, அணையாத உறுதியுடன் அவர் வளர்த்தெடுத்தார். 1984 படுகொலையிலிருந்து தப்பிப் பிழைத்தவர்களுக்கிடையில், அவரது வாழ்க்கையை சிதைத்த அனைத்திற்கும் மத்தியில் அவரது உறுதி நிலைத்து நின்றது.

•••

ஆல்வார் எனும் பஞ்சாப் கிராமத்தில் பிறந்த லட்சுமி கௌருக்கு பதின்மூன்று வயதானபோது சுந்தர் சிங் எனும் இளைஞரைத் திருமணம் செய்து வைத்தனர். திருமணம் முடிந்த சில நாட்களிலேயே சுந்தர் சிங் பிழைக்க வழி தேடி டெல்லியை நோக்கிப் பயணமானார்.

மங்கோல்புரியில் உள்ள 'சேரிமக்கள் மறுவாழ்வு காலனி'யில், தனது குடும்பத்துக்கென ஒரு குடிசையைக் கட்டினார். துவக்கத்தில் கைவண்டியில் காய்கறிகள் விற்றார். பின்னர் கொஞ்சம் காசு சேர்ந்தவுடன், தனது இளம் மனைவி லட்சுமி கௌரை டெல்லிக்கு அழைத்துக் கொண்டு வந்தார். இருவருமாக ஒரு கறிக்கடையைத் துவக்கினார்கள். தமது கணவரை சர்தார்ஜி (பஞ்சாபியரை மரியாதையோடு குறிக்கும் சொல்) என்று லட்சுமி கௌர் அழைத்து வந்தார். சிறு மார்க்கெட்டில் உள்ள தனது கடையில் இறைச்சியைத் தொங்க விட்டு, எடைபார்த்து நாள்முழுவதும் விற்று, வேலை செய்வார் சர்தார்ஜி.

சிறிது காலத்தில் தொழில் வளர வளர, லட்சுமியும் சர்தார்ஜிக்கு துணையாக ஆடுகளைத் தோலுரிக்கக் கற்றுக் கொண்டார். இந்த வேலை செய்த அனுபவம் 1984-ல் மனிதர்கள் தோலுரிக்கப்பட்ட பொழுது, தன்னை நிலை குலைய விடாமல் தடுத்ததில் ஒரு வகையில் உதவி செய்தது என அவர் நினைவு

அன்று மாலை இறந்து போன தலை வரை எண்ணி லட்சுமி தனது வீட்டில் அடுப்பைக் கூட பற்ற வைக்கவில்லை. சர்தார்ஜிக்கோ இப்படுகொலையை எத்தகைய உணர்வால் எதிர்கொள்ள வேண்டுமென்றே புரியவில்லை. ஏனெனில், அமிர்தசரஸில் உள்ள சீக்கியர் பொற்கோவிலில் படைகளை அனுப்பி அதன் புனிதத்தை கெடுத்ததில் இந்திராகாந்திக்கும் பங்குண்டு என்பதை அவர் அறிவார்.

என்னவாக இருந்த போதிலும், தங்களுக்கு வீடு தந்த தலைவருக்கு நன்றி செலுத்தும் விதமாக அன்று ஒரு நாள் கடையை அடைக்க வேண்டும் என லட்சுமி கண்ணீரோடு கூறினார். அவரது வார்த்தைகளைக் கேட்டு தானும் கண்ணீர் வடித்த சர்தார்ஜி, ஆச்சரியத்தோடும், அன்போடும் கூறினார்.



கூர்கின்றார். ஏனெனில் தனது கணவரும், சகோதரர்களும் படுகொலை செய்யப்பட்ட பின்னரும் கூட அவர் ஏழு சீக்கியர்களை மறைத்து வைத்து, அவர்களது உயிரைக் காப்பாற்றினார். குறைந்தபட்சம் இரத்தம் அவருக்கு பழகிப் போயிருந்தது.

ஒரு மதிய நேரத்தில் 'இந்திரா காந்தி கொலை செய்யப்பட்டு விட்டார்!' எனக் கூக்குரலிட்டவாறு காலனிக்குள் மக்கள் ஓடி வந்த பொழுது, அவரது வாழ்க்கை தலைகீழாக மாறியது. அந்த நாள் அக்டோபர் 31, 1984. பல சேரிகளிலிருந்தும் விரட்டியடிக்கப்பட்ட தங்களைப் போன்ற ஏழை மக்களுக்கு, மங்கோல்புரியில் பட்டாவோடு வீடு கட்டிக் கொள்ள வழி ஏற்படுத்தித் தந்த பிரதமர் கொல்லப்பட்டதை எண்ணி லட்சுமி போன்றோர் வருந்தினர்.

''எழுதப் படிக்கத் தெரியாத இந்தப் பெண் எல்லா விசயங்களையும் எனக்கு எப்படி புரிய வைக்கிறாள்!'' எல்லோரும் வீட்டிலிருக்க, கும்பல்கள் மங்கோல்புரிக்குள் நுழைந்தன.

பெரும்பாலும் ஆயுதமேந்திய வெளியாட்கள்தான் கும்பல்களில் இருந்தனர். ஆனால், காலனியில் உள்ள பலரும் கூட இவர்களோடு இணைந்து கொண்டனர். ஒவ்வொரு வீட்டிலிருந்தும் சீக்கிய ஆண்களையும், இளைஞர்கள், சிறுவர்களையும் வெளியே இழுத்துப் போட்டு தாக்கத் துவங்கினர். அவர்கள் தப்பிச் செல்வதைத் தடுப்பதற்காக, காலனியிலிருந்து வெளியேறுவதற்கான அனைத்து வழிகளிலும் தீ வைத்தனர்.

மொத்தக் குடும்பமும் பாதிப்புக்குள்ளாவதை சர்தார்ஜி தடுக்க விரும்பி




படிப்பகம்

www.padippakam.com

னார். எனவே அலை அலையாக கும்பல்கள் தனது வீட்டை நெருங்கத் துவங்கியவுடன், அருகிலிருந்த காவல் நிலையத்தை நோக்கி ஓடுவதென முடிவெடுத்தார். ஆனால், பாதி வழியிலேயே அவரது தலையில் கட்டைகளால் ஒரு கும்பல் அடிக்கவே அவர் கீழே விழுந்தார். இருந்த போதிலும் கூட்டத்தை நோக்கி கற்களை வீசியவாறு அவர் தப்பியோடினார்.

இந்த வேளையில்தான் மங்கோல் புரி காவல் நிலைய போலிஸ்காரர்கள் அவரை சுற்றி வளைத்து, எரியும் டயரை அவரது கழுத்தில் கட்டி விட்டனர். அவர் தனது கடைக்கு அருகில், காவல் நிலையத்தின் எதிரில் உடல் எரிய நிலை குலைந்து விழுந்தார். மூன்று இரவுகளுக்கும், மூன்று பகல்களுக்கும் தொடர்ந்த வெறியாட்டத்தில், லட்சுமியின் ஏழு சகோதரர்களில் ஐவர் படுகொலை செய்யப்பட்டனர்.



சில வெறியர்கள் லட்சுமியின் வீட்டிற்குள் புகுந்து, அவரது மூத்த மகனை கட்டையால் அடிக்கத் துவங்கினர். அச்சிறுவனது தலையில் கடுமையாக அடித்தனர். லட்சுமி இடையில் புகுந்து அடிகளை வாங்கி, அவனைப் பாதுகாக்க முயன்றார். கலவரக்காரர்களிடம் அவனை விட்டு விடுமாறு கெஞ்சி மன்றாடினார். சிறுவன் மயங்கிச் சரிய, அவன் இறந்ததாக எண்ணி விட்டுச் சென்றனர்.

லட்சுமி அவனை அவசர அவசரமாக கையிலேந்தி கழிவறைக்குள் மறைத்து வைத்தார். பின்னர் அவனுக்கு உணவெடுத்துச் சென்ற பொழுது, அவன் தலை வலிக்கிறதென அழத் துவங்கினான். நான்கு நாட்கள் கழித்து பஞ்சாபி பாக் எனும் இடத்திலுள்ள நிவாரண முகாமிற்கு அவர்கள் சென்றடைந்த பொழுது, அவனுக்கு காய்ச்சல் வந்து, ஒரு கை செயலிழந்தது. அவனது வாழ்நாள் முழுதும் அவன் ஊனமான கையுடன் தத்தி தத்தி நடக்கிறான்.

லட்சுமியின் பக்கத்து வீட்டுக்காரர்கள் யாரும் அவரது உதவிக்கு வரவில்லை. அந்த இரவில் தாழ்த்தப்பட்ட துப்புரவுப் பணியாளர் ஒருவர் மாத்திரம் உணவோடு வந்து அவரது குழந்தைகளுக்கு அதனை வழங்கினார். ''கவலைப்படாதீர்கள் லட்சுமிஜி, நீங்கள் என் சகோதரி போன்றவர்'' என லட்சுமியைத் தேற்றினார்.

லட்சுமி நினைவு கூர்கிறார்: ''அவர் எங்கிருந்தோ தெய்வம் போல வந்தார். எங்களுக்கு உணவு தந்து, ஆறுதல் சொல்லி விட்டு மறைந்து விட்டார். அவரது பெயரோ, முகவரியோ எதையும் அவர் சொல்லவில்லை...'' அதற்கு முன்பும், பின்பும் ஒருபோதும் அவரை மீண்டும் அவர்கள் சந்திக்கவில்லை.

மூன்று நாட்களுக்கு தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணம் இருந்த நிலையில், காலனிக்குள்ளாகவே, அவர்கள் மறைந்திருந்தனர். 1984 நவம்பர் 3-ஆம் தேதியன்று அதிகாலை நேரத்தில் ராணுவம் காலனிக்குள் நுழைந்தது. ஏறத்தாழ எல்லா சீக்கியர்களது வீடுகளும் சாம்பலாகிக் கிடந்தன. தப்பி பிழைத்த பெண்களையும், குழந்தைகளையும் தமது பச்சை நிற வாகனங்களில் ஏற்றி நிவாரண முகாமுக்கு அழைத்துச் சென்றனர். ஒன்றரை மாதம் அவர்கள் அங்கே தங்கியிருந்தனர். பின்னர் பிறர் தயவில் வாழ்வது அலுத்து, மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக வெளியேறினார்கள். லட்சுமி தனது குழந்தைகளோடு தனது கிராமத்திற்கு சென்றார்.

ஆல்வாரில் இருந்த பொழுது, 1984 தாக்குதல்களில் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடும், அரசு வேலையும் வழங்கப்படுவதாக கேள்விப்பட்டார். வயதான பெற்றோருக்கு பாரமாக இருக்க விரும்பாமல், இரண்டே மாதங்களில் மீண்டும் டெல்லி திரும்பினார். வேறு சில முகாம்களில் தற்காலிகமாகத் தங்கிய பின்னால், 1985 துவக்கத்தில் நான்கு மாதங்கள் கழித்து, திலக் விகாரில் அவருக்கு ஒரு தொகுப்பு வீடு வழங்கப்பட்டது. அக்கட்டிடம் 1984 படுகொலைக்கு முன்பே,சேரிகளிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களை குடியமர்த்துவதற்காக கட்டப்பட்டது. எனினும், தற்பொழுது அதிகாரிகள் சீக்கியப் படுகொலைகளில் கணவனை இழந்த சில பெண்களுக்கும் இங்கே வீடுகளை அளித்தார்கள்.

லட்சுமி தனது கணவரின் கொலைக்கு இழப்பீடாக வழங்கப்பட்ட பத்தாயிரம் ரூபாயைக் கொண்டு தனது குழந்தைகளுக்கு உணவளித்து, உடையளித்து தனது குடும்பத்தைப் பராமரிக்க துவங்கினார். மாதம் 250 ரூபாய்க்கு மிளகாய் பொடி, உப்பு மற்றும் பிற பொடிகள் பாக்கெட் செய்யும் வேலையை லட்சுமி செய்தார். 1986-ல் அவருக்கு அரசு வேலை வழங்கப்பட்டது. கல்வியறிவில்லாத நிலையில், உள்ளூர் அரசு பள்ளியில் பியூன் வேலை மாத்திரமே கிடைத்தது. கடந்த இருபதாண்டுகளுக்கும் மேலாக, பள்ளியிலிருந்து கிடைக்கும் வருவாய் தான் அவரது மொத்த குடும்பத்திற்கும் சோறு போட்டு வருகிறது.

லட்சுமி தமது கணவரின் மறைவுக்குப் பின் காவல்துறையிடம் புகார் அளித்தார். அவரது கணவரின் மரணச் சான்றிதழ் மட்டும் அவருக்கு வழங்கப்பட்டது. ஆனால், அவரது புகாரின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. யாரும் சர்தார்ஜியை படுகொலை செய்த போலிஸ்காரர்கள் மீது வழக்கு தொடுக்கவோ, கும்பல்களோடு இணைந்த பக்கத்து வீட்டுக்காரர்கள் மீது வழக்கு தொடுப்பதற்கு உதவவோ முன் வரவில்லை. அவர் வருத்தத்தோடு கேட்கிறார்: 'இந்திரா காந்தியைக் கொன்ற சீக்கியர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டு விட்டது. பின்னர், ஏன் எங்களைப் போன்ற அப்பாவி ஏழை சீக்கியர்கள் இன்னும் வதைபட வேண்டும்?'

ஆனால், இன்னமும் அவருக்கு யார் மீதும் எந்தக் காழ்ப்புணர்வுமில்லை. ''நான் ஒரு எழுதப் படிக்கத் தெரியாத



படிப்பகம்

www.padippakam.com

வள். ஆனால் எல்லோர் உடலிலும் அதே இரத்தம்தான் ஓடுகிறதென நம்புகிறேன். நான் யாரையும் வெறுப்பதில்லை. ஆனால், அக்கொலைகாரர்கள் அப்பாவிகளைக் கொல்வதற்கு ஏன் வெட்கப்படவில்லை என ஆச்சரியப்படுகிறேன்.''

2002-ல் குஜராத்தில் இசுலாமியர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதை அவர் கேள்விப்பட்டார். ''சீக்கியரோ இசுலாமியரோ, ஒரு குறிப்பிட்ட மதத்தின் மக்களைக் குறிவைப்பது சரி என நான் கருதவில்லை. அடிப்படையில் எல்லோரும் மனிதர்கள்தான். ஏன் ஒருவர் தாக்கப்பட வேண்டும்? இந்த விசயங்களுக்காக ஏன் ஏழை மக்கள் கொலை செய்யப்பட வேண்டும்? குண்டுவெடிப்பில் செத்தாலும் சரி, கலவரங்களில் செத்தாலும் சரி, எந்த ஒரு மனிதரின் வலியையும் என்னால் உணர முடிகின்றது. அவர்களது பயத்தையும், அதிர்ச்சியையும் உணர முடிகின்றது.''

திலக் விகாரில் கால் நூற்றாண்டுக்கும் மேலாக, தனது குழந்தைகளை வளர்த்து நல்ல மனிதர்களாக உருவாக்கும் ஒரே இலட்சியத்துடன் அவர் வாழ்ந்து வருகிறார். தன்னைப் போல எழுத்தறிவற்றவர்களாக அவர்கள் உருவாகி விடக் கூடாதென உறுதியோடிருந்தார்.

உடல் ஊனமும், துயரார்ந்த நினைவுகளும் வாட்டி வதைக்க, அவரது மூத்த மகனால் ஒருபோதும் படிக்க முடியவில்லை. தனது இளைய மகனையும், மகளையும் அவர் அருகிலிருந்த அரசுப் பள்ளிக்கு அனுப்பினார். ஒரு தகப்பன் இல்லாமல் அவர்கள் வாழ்க்கையில் நிலை தடுமாறி விழுந்து விடுவார்கள் என எப்போதும் கவலை கொண்டார். அதனால், ஒரே நேரத்தில் அவர்களுக்கு தந்தையாகவும், தாயாகவும் வாழ்ந்தார்.

காலம் செல்லச் செல்ல அவமானத்தினாலும், இயலாமையினாலும் உருவான ஒரு இரகசியம் கணவனை இழந்த அப்பெண்களின் காலனியைச் சுற்றி வளைக்கத் துவங்கியது. மிகப் பெரும்பாலானோர் கல்வியறிவில்லாத நிலையில், உலகைத் தனியாக எதிர்கொண்டு பழக்கமில்லாத நிலையில், தமது குழந்தைகளைத் தன்னந்தனியாக வளர்ப்பது சாத்தியமற்றதாயிருந்த நிலையில், தனித்து நின்ற அப்பெண்களுக்கு வாழ்க்கை கடுமையானதாக இருந்தது. சிலருக்கு அரசு வேலை கிடைத்தது. சிலர் வீட்டு வேலைகளுக்குச் சென்றார்கள். ஆனால், செலவுகள் கூடிக் கொண்டே சென்றன.

எங்கே, எப்பொழுது தொடங்கியதென யாருக்கும் தெரியாது. ஆனால், காலப்போக்கில் போதை மருந்து விநியோகத்திற்கு மெல்ல மெல்ல பெயர் போன இடமாக அக்காலனி மாறிப் போனது.

வாழ்வதற்கான தவிப்பினால், அங்கிருந்த சில பெண்கள்தான் அல்லது அவர்களது உறவினர்கள்தான் போதை மருந்து கும்பலுடன் இணைந்தனர் என்று சொல்லப்படுகிறது. அவர்களது பிள்ளைகள் வளர்ந்த பின்னால், அதே போதை மருந்துக்கு அடிமையாகவும் செய்தார்கள். போதை மருந்துடனான நெருக்கம் தமது பிள்ளைகளின் வாழ்க்கையை அழித்து விடும் என்பதை அப்பெண்களால் அப்பொழுது உணர முடியவில்லை.

**''நான் ஒரு எழுதப் படிக்கத் தெரியாதவள். ஆனால் எல்லோர் உடலிலும் அதேஇரத்தம்தான் ஓடுகிறதென நம்புகிறேன். நான் யாரையும் வெறுப்பதில்லை. ஆனால், அக்கொலைகாரர்கள் அப்பாவிகளைக் கொல்வதற்கு ஏன் வெட்கப்படவில்லை என ஆச்சரியப்படுகிறேன்.''**

இன்று அக்காலனியின் பெரும்பாலான பெண்கள் தங்கள் மகன்களைப் பற்றி கவலைப்படுகிறார்கள். பலர் தங்கள் தாயாரை விட்டு விலகிச் சென்றுவிட்டார்கள். போதை மருந்துகளை உட்கொள்ளுகிறார்கள்; விற்கிறார்கள். சிலர் அதிகப்படியாக உட்கொண்டு இளம் வயதில் செத்தும் போகின்றார்கள்.

தனது மகன்களும், அவர்களது மகன்களும் கூட இந்த போதை மருந்துகளுக்கு பலியாகி விடுவார்களோ என்ற பயம்தான் லட்சுமியை கடுமையாக பிடித்தாட்டியது. வறுமையிலும், போராட்டத்திலும் கழிந்த இந்தக் கால் நூற்றாண்டு கால வாழ்வில் தனது ஒரே வெற்றியாக அவர் கருதுவது, தனது மகன்கள் அத்தகைய படுகுழியில் வீழவில்லை என்பதைத்தான்.

துவக்கத்தில், அவரது மூத்த மகன் தலையில் விழுந்த பலமான அடிகளிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக மீண்டான். ஆனால், அவ்வப்பொழுது கட்டுக்கடங்காத ஆத்திரத்திற்கும், மனச் சிதைவிற்கும் ஆளானான். ஆனால் இந்நிலை தொடர்ந்து நீடிக்கவில்லை. லட்சுமி அவனுக்கு திருமணம் செய்து வைத்தார். ஒரு ஆலையில் வேலையும் கிடைத்தது. ஆனால், 2002-ல் நடந்த ஒரு சாலை விபத்தில் அவனது இளைய மகனின் கால்கள் நொறுங்கிப் போயின. காயமுற்ற தனது மகனைக் கண்டதும், அவனது நிலையில்லாத மனநிலை அடியோடு புரண்டது.

அன்று வீட்டிலிருந்த அனைத்துப் பொருட்களையும் அவன் உடைத்து நொறுக்கினான். அதன் பின்னர் அவன் மீளவேயில்லை. அவன் வீட்டிலேயே அடைபட்டுக் கிடக்கிறான். சமையலறைக்கும், மிஞ்சியிருக்கும் ஒரே அறைக்கும் இடையே தத்தித் தத்தி நடந்த வண்ணமிருக்கிறான். சம்பந்தமில்லாமல் ஏதாவது பேசிய வண்ணமிருக்கிறான். லட்சுமியின் இளைய மகன் பொறுப்பற்றவனாகவும், சோகமானவனாகவும் இருக்கிறான். எப்பொழுதும் படுக்கையிலேயே கிடந்து, நாட்களைக் கழித்துக் கொண்டிருக்கிறான்.

லட்சுமியின் வளர்ந்த மகளும், மருமகளும்தான் வீட்டு வேலை செய்து, சம்பாதித்து வருகிறார்கள். அவர்களது வருமானத்தில்தான் அவரது மகன்கள், அவர்களது மனைவிகள், குழந்தைகள் முதலான பெரிய குடும்பம் தனது வயிற்றைக் கழுவிக் கொள்கின்றது.

எல்லாவற்றையும் விட, லட்சுமி இன்னமும் தனது கணவர் சர்தார்ஜியை இழந்து தவிக்கிறார். 'அவர் இருந்திருந்தால், நான் இன்று இந்த நிலைமைக்கு ஆளாகியிருக்க மாட்டேன். கண் பார்வை மங்கும் இந்த வயதில் போராடவும், சீரழிந்து போய் விட்ட எனது பிள்ளைகளின் வாழ்வைக் காணவும் நேர்ந்திருக்காது. சர்தார்ஜி மட்டும் உயிரோடிருந்திருந்தால்...'

**(ஹர்ஷ் மந்தேர், (நவம்பர் 22, 2009, தி இந்து) எழுதிய கட்டுரையின் சுருக்கப்பட்ட வடிவம்)**

**மொழிபெயர்ப்பு: வாணன்**



படிப்பகம்

www.padippakam.com

# 8 எம்.எம். ஹாலிவுட் திரைப்பட விமரிசனம்:

# பாலியல் வக்கிரங்கள் – ஹாலிவுட் முதல் காஞ்சிபுரம் வரை!

**வே**று யாருக்கும் தெரியாமல், உங்கள் கைபேசியில் காஞ்சிபுரம் தேவநாதனின் வீடியோ கிடைத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? அனுப்பியவன் மீது புகார் கொடுப்பீர்களா, அந்தக் கணமே அதனை அழித்து விடுவீர்களா, அல்லது ஒரே ஒரு முறை பார்த்தால்தான் என்ன என்று தடுமாறுவீர்களா? அறம், ஒழுக்கம், விழுமியங்கள் என்ற காரணங்களின் அடிப்படையில் சிந்தித்துப் பதிலளிக்கக் கூடிய நிலையில் நீங்கள் இருந்தால், பதிலளிப்பதில் சிரமமிருக்காது.

எனினும், இன்றைய சூழலில் பலரால் இதற்கு நிச்சயமான ஒரு பதிலைச் சொல்லிவிட இயலாது. கைபேசிகள் எனப்படுபவையே கையடக்கமான நீலப்படத் திரையரங்குகளாக மாறிக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், மேற்படி கேள்வியே கூட கொஞ்சம் கட்டுப்பெட்டித்தனமானதாகவும், காலத்தால் பின்தங்கியதாகவும் சிலருக்குத் தோன்றலாம்.

ஷகீலாக்களின் காலம் முடிந்து கொண்டிருக்கிறது. நாம் தேவநாதன்களின் காலத்தில் நுழைந்து விட்டோம். தொலைக்காட்சிகளில் கூட சீரியல்களின் நடிப்பு திகட்டிப்போய், அவற்றின் இடத்தை 'ரியாலிடி ஷோ'க்கள் மெல்ல ஆக்கிரமித்து வரும் காலம் இது.

அடுத்தவன் வீட்டுக்கதவின் சாவித்துவாரத்தில் கண் வைத்துப் பார்ப்பதை அநாகரிகமாகக் கருதும் பொது ஒழுக்க நெறியே போய்விட்டதென்று கூறிவிட முடியாது. அதேநேரத்தில் சாவித்துவாரத்தில் காமெராவை வைத்துப் படம் பிடித்து, அதை மொத்த சமூகமும் உட்கார்ந்து பார்க்கும் புதிய ரசனை வளர்ந்து வருவதையும் மறுக்க முடியாது. இந்த இரசனையைக் காட்டிலும் முக்கியத்துவம் வாய்ந்தது, இந்தக் கலைக்கு சூட்டப்பட்டிருக்கும் பெயர்தான்- ரியாலிட்டி ஷோ.

காதல், படுக்கையறைக் காட்சிகள், அடிதடி, கொலை ஆகியவற்றை நடிப்பில் பார்த்துப் பார்த்துத் திகட்டிப் போன ஒரு மனிதன், ஒரு பாலியல் உறவை, வல்லுறவை, சித்திரவதையை, கொலையை அவற்றை உண்மையாகவே நிகழ்த்தி, அதனை ரியாலிட்டி ஷோவாகப் படம் பிடித்துப் பார்க்க முடியாதா என்று ஏங்குகிறான். இப்படிக்கூட ஒரு மனிதன் சிந்திக்க முடியுமா என்று நீங்கள் நினைத்தால், முடியும் என்று கூறும் திரைப்படம் ஒன்றை சமீபத்தில் பார்க்க நேர்ந்தது. கதையின் களம் - வேறெந்த நாடு, அமெரிக்காதான்.

•••

1995இல் வெளிவந்த எட்டு மில்லி மீட்டர் திரைப்படச்சுருள் என்பதைக் குறிக்கும் 8 எம்.எம் ஹாலிவுட் திரைப்படத்தை ஜோயல் ஷுமேக்கர் இயக்க நிக் கோலஸ் கேஜ் முதன்மைப் பாத்திரம் ஏற்று நடித்திருக்கிறார்.

**கதைச் சுருக்கம்:** பணக்காரச் சீமாட்டியான திருமதி கிறிஸ்டியானியின் கணவர் முதுமை காரணமாக இறக்கிறார். மரணத்துக்குப் பின் அவரது இரகசிய லாக்கரை உடைத்துப் பார்த்த போது வழமையான ஒரு கோடீசுவரனுக்கே உரிய பத்திரங்கள், விலையுயர்ந்த பொருட்கள் ஆகியவற்றோடு, அந்த லாக்கரில் ஒரு திரைப்படச்சுருளும் இருக்கிறது.

வயது முதிர்ந்த அந்தச் சீமாட்டி, படச்சுருளைத் திரையிட்டுப் பார்க்கிறாள். அந்தப் படத்தில் உள்ளாடைகளுடன் இருக்கும் ஒரு பதின்வயது இளம் பெண்ணை வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கி கொடூரமான முறையில் கொலை செய்கிறான் ஒரு முகமூடி அணிந்த மனிதன். இந்தப் படத்தைப் பார்த்து அதிர்ச்சியடைகிறாள் அந்தச் சீமாட்டி.

அந்தப்படத்தில் வரும் கொலை உண்மையாய் இருந்துவிடக்கூடாதே என்று அவள் பதறுகிறாள். அந்தப் பெண் நலமாக இருக்கிறாளா என்பதை அறிந்து கொள்ளவும் விரும்புகிறாள். இப்படி ஒரு படத்தை தனது கணவன் எதற்காக இரகசிய லாக்கரில் வைத்திருக்க வேண்டும் என்ற கேள்வியும் அவளை நிம்மதி இழக்கச் செய்கிறது. இது குறித்து புலனாய்வு செய்து கண்டுபிடிக்க முடிவு செய்கிறாள். அதற்காக டாம் வெல்லஸ் எனும் தனியார் துப்பறிவாளன் நியமிக்கப்படுகிறான்.

'ஸ்னஃப்' என்று அழைக்கப்படும் பாலியல் கொடூரக் கொலைகளை சித்தரிக்கும் இத்தகைய படங்களெல்லாம் வெறும் நடிப்பு என்றும், இது ஒரு நகரப் புறத்து மாயை என்றும் சொல்கிறான் துப்பறிவாளன் வெல்லஸ். சீமாட்டி திருப்தி

**காதல், படுக்கையறைக் காட்சிகள், அடிதடி, கொலை ஆகியவற்றை நடிப்பில் பார்த்துப் பார்த்துத் திகட்டிப் போன ஒரு மனிதன், அவற்றை உண்மையாகவே நிகழ்த்தி, படம் பிடித்துப் பார்க்க முடியாதா என்று ஏங்குகிறான். இப்படிக்கூட ஒரு மனிதன் சிந்திக்க முடியுமா என்று நீங்கள் நினைத்தால், முடியும் என்று கூறும் திரைப்படம் ஒன்றை சமீபத்தில் பார்க்க நேர்ந்தது.**



படிப்பகம்

www.padippakam.com




யடையவில்லை. எனவே, உண்மையைக் கண்டுபிடிப்பதாக வாக்கு கொடுக்கிறான்.

முதலில் படத்தில் இருக்கும் பெண் யாரென்பதை காணாமல் போனவர்களின் பட்டியலை வைத்து கண்டுபிடிக்கிறான். அவளது வீட்டிற்கு சென்று அந்தப் பெண்ணின் தாயார் ஜானட் என்பவளைச் சந்திக்கிறான். தனது மகள் மேரி ஆனி மாத்தீவ்ஸ், ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு நாள் கடிதம் எழுதிவைத்துவிட்டு வீட்டை விட்டு வெளியேறிவிட்டதாகக் கூறுகிறாள் தாய்.

அந்தக் கடிதத்தில் தான் ஒரு ஹாலிவுட் நட்சத்திரமாக மாறப்போவதாகவும், அதற்காகத் தனது காதலுடனுன் சேர்ந்து முயற்சி செய்யப்போவதாகவும் குறிப்பிட்டிருக்கிறாள் மேரி ஆனி. வெல்லஸ் அந்தக் காதலனை கண்டுபிடிக்கிறான். அவர்கள் காதல் அப்போதே உதிர்ந்து போய்விட்டதையும், ஆனி மட்டும் தனியாக ஹாலிவுட் சென்றதையும் அறிகிறான்.

கனவுகளைச் சுமந்தவாறு வாழ்க்கையைத் தொலைப்பதற்கு ஆண்டுதோறும் கோடம்பாக்கத்திற்கு வருபவர்களே பல்லாயிரம் பேர். ஹாலிவுட் என்பது உலகத்துக்கே கோடம்பாக்கம். எனில், அதை நோக்கிப் படையெடுப்பவர்களின் எண்ணிக்கையை மட்டுமல்ல அதன் பரிமாணத்தையும் புரிந்து கொள்ளலாம். அந்த மாய உலகத்தில் ஆனியைத் தேடுவது எங்கனம்?

கன்யாஸ்தீரிகள் இல்லமொன்றில் ஆனி ஒரு மாதம் தங்கியிருந்ததைக் கண்டுபிடித்து, அங்கே இருந்த அவளது உடமைகளையும் பெற்றுக்கொள்கிறான். வெல்லஸ் அவளுடைய டைரியில் இருந்த தொலைபேசி எண்களை வைத்து அவளது தடத்தை பின்தொடர்கிறான்.

அந்தப்படம் 92ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது என்பதைக் கண்டு பிடிக்கும் வெல்லஸ், அதே ஆண்டில் இறந்துபோன சீமாட்டியின் கணவனது வங்கிக் கணக்கிலிருந்து ஒரு மில்லியன் டாலர் பணம் எடுக்கப்பட்டிருப்பதையும் சீமாட்டியின் உதவியுடன் கண்டுபிடிக்கிறான். இதிலிருந்து அந்தப்படம் சீமாட்டியின் கணவனுக்காகத்தான் எடுக்கப்பட்டிருக்கிறது என்பது உறுதியாகிறது.

ஹாலிவுட்டில் போர்னோ கடை ஒன்றில் (ஆபாச புத்தகங்கள், சி.டிக்கள் விற்கும் கடை) வேலை செய்யும் மாக்ஸ் கலிபோர்னியா என்ற இளைஞனைப் பிடித்து, அவன் உதவியுடன் ஹாலிவுட்டிற்குள் இயங்கும் அந்த இரகசிய உலகத்திற்குள் நுழைகின்றான் வெல்லஸ்.

ஆபாசப்படங்கள், புத்தகங்கள், பணத்திற்கேற்ப நம்பகத்தன்மை கூடும் கொடூர ஆபாசப்படங்கள், கடைகள், தரகர்கள், விலைமாதர்கள் என அந்த இருண்ட உலகம் விரிகிறது. ''இனி நீ பார்க்கவிருக்கும் காட்சிகளை உன் கண்களிலிருந்து எக்காலத்திலும் அகற்றவே முடியாது'' என்று கூறி வக்கிரப் பாலுறவின் உலகத்துக்குள் வெல்லஸை அழைத்துப் போகிறான் மாக்ஸ்.

சித்திரவதை செக்ஸ், சாட்டையடி செக்ஸ், குழந்தைகள் செக்ஸ் என்று எண்ணிப்பார்க்கவே முடியாத வக்கிரங்களின் உலகம் விரிகிறது. இயல்பான மன நிலையில் நுழையும் எவரையும் விரைவிலேயே வெறி கொண்டவர்களாக மாற்றும் இந்த உலகில்தான் ஆனி சிக்கியிருக்கிறாள் என்பது தெளிவாகிவிட்டது.

செலிபிரிட்டி பிலிம்ஸ் எனும் உப்புமா கம்பெனியின் முதலாளி எடி போலி என்பவனே ஆனிக்கு நட்சத்திர ஆசை காட்டி ஏமாற்றியிருக்கிறான் என்பதை பல முயற்சிகளுக்குப் பிறகு வெல்லஸ் தெரிந்து கொள்கிறான். அவனை வைத்து கொடூர ஆபாசப்படங்



படிப்பகம்

www.padippakam.com

களை இயக்கும் வெல்வெட், அந்தப்படங்களில் முகமூடி அணிந்து கொண்டு நடிக்கும் மெஷின் ஆகியோரையும் வெல்லஸ் தனது புலனாய்வின் மூலம் அறிகிறான்.

உண்மையான பாலியல் வல்லுறவையும் உண்மையான கொலையையும் சித்தரிக்கும் ஒரு ரியாலிட்டி படத்தைத் தயாரிப்பதற்கு இவர்களிடம்தான் சீமாட்டியின் கணவன் பணம் கொடுத்திருக்கிறான். இந்தக் கும்பல் ஆனியை ஏமாற்றி இந்தப் படத்தில் நடிக்க வைத்து, பின்னர் கொலை செய்திருக்கிறது என்பதை வெல்லஸ் கண்டுபிடிக்கிறான். இதனை ஆதாரபூர்வமாக நிறுவுவதற்கான முயற்சியில் இறங்குகிறான். இயக்குநர் வெல்வெட்டை தொடர்பு கொண்டு தனக்கு பலான படம் ஒன்று எடுக்கவேண்டுமென கேட்கிறான்.

இதற்குள் வெல்லஸ் தங்களது கொலைப்படத்தை கண்டுபிடித்து விட்டான் என்பதை அந்த கயவர் கும்பல் புரிந்து கொள்கிறது. வெல்லஸை பதற்கான நிவாரணத்தொகை. ''எங்களை மறப்பதற்கு முயற்சி செய்'' என்று மட்டும் அந்தக் கவரின் மேல் எழுதியிருக்கிறாள் அந்தச் சீமாட்டி.

கைவசம் இருந்த ஆதாரமான படச்சுருள் எரிக்கப்பட்டு, அதை பார்த்த ஒரே சாட்சியான சீமாட்டியும் இறந்திருக்கும் நிலையில் வெல்லஸ் செய்வதறியாது திகைக்கிறான். அதே சமயம் இத்தகைய படுபாதகச்செயலை சாதாரண சினிமா படம் போல எவ்வித குற்றவுணர்வும் இல்லாமல் எடுத்திருக்கும் அந்த மூவர் கும்பலை விட்டுவிடவும் அவனுக்கு மனம் ஒப்பவில்லை. அவர்களை கொல்வதென முடிவு செய்து அதற்கு ஆனியின் தாய் ஜேனட்டிடம் ஒப்புதல் பெறுகிறான். அந்தப் படத்தின், அதாவது அந்தக் கொலையின், தயாரிப்பாளர், இயக்குநர், நடிகன் ஆகிய மூவரையும் தனித்தனியே கொல்கிறான் வெல்லஸ்.

**இ**ந்த இரகசிய உலகத்துக்குள் காலடி வைத்த கணத்திலிருந்து ஒரே ஒரு கேள்விதான் வெல்லஸை துன்புறுத் மூடியைப் பிய்த்தெறிகிறான் வெல்லெஸ்.

ஒரு திரைப்படத்துக்காக யாரோ ஒரு சின்னஞ்சிறு பெண்ணுக்கு போதை ஊசி போட்டு, அவளைத் துடிக்கத் துடிக்க வன்புணர்ச்சிக்கு ஆளாக்கி, மெல்ல, நிதானமாகக் கொலை செய்த அந்த மெஷினிடம் ''ஏன் இதைச் செய்தாய்?'' என்று கேட்கிறான் வெல்லெஸ். ''ஒரு காரணமும் இல்லை. எனக்குப் பிடித்திருக்கிறது. செய்தேன்'' என்று பதிலளிக்கிறான் மெஷின்.

முகமூடி இல்லாத மெஷினை வெல்லெஸ் நிதானமாக வெறித்துப் பார்க்கிறான். வழுக்கை விழுந்த, கண்ணாடி அணிந்த ஒரு சராசரி மனிதன். அவன் உண்மைப் பெயர் ஜார்ஜ். வெல்லெஸுடைய பார்வையின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட மெஷின், அவனிடம் ஏளனமாகக் கேட்கிறான், ''எப்படி எதிர் பார்த்தாய்? ஒரு மிருகம் போல இருப்பேன் என்றா?''

•••

**ஒரு திரைப்படத்துக்காக யாரோ ஒரு சின்னஞ்சிறு பெண்ணுக்கு போதை ஊசி போட்டு, அவளைத் துடிக்கத் துடிக்க கொலை செய்த அந்த மெஷினிடம் ''ஏன் இதைச் செய்தாய்?'' என்று கேட்கிறான் வெல்லெஸ். ''ஒரு காரணமும் இல்லை. எனக்குப் பிடித்திருக்கிறது. செய்தேன்'' என்று பதிலளிக்கிறான் மெஷின். குஜராத் வன்முறையாளர்கள் பேசுவதைக் கேட்கும்போது நமக்கு ரத்தம் கொதிக்கிறது. இந்த வன்முறையாளர்களின் பதிலைக் கேட்கும்போதோ ரத்தம் சில்லிடுகிறது.**

அழைத்து வந்த அந்த இளைஞனைச் சித்திரவதை செய்து, வெல்லஸிடம் இருக்கும் படச் சுருளையும் கைப்பற்றித் தீ வைத்து அழிக்கிறது. அந்த இளைஞனும் கொலை செய்யப்படுகிறான். கடுமையாக தாக்கப்பட்ட வெல்லஸ், அவர்களிடமிருந்து தப்பிக்கிறான். சீமாட்டியைத் தொடர்பு கொண்டு, அவளிடம் உண்மைகளை கூறி, அடுத்த நாளே நாம் போலீசிடம் போக வேண்டும் என்று சொல்கிறான்.

ஆனால் சீமாட்டியோ அடுத்த நாள் தற்கொலை செய்து கொள்கிறாள். தனது கணவனின் வக்கிர வெறிக்காக ஒரு இளம் பெண் கொலை செய்யப்பட்டிருப்பதை அவளால் தாங்க முடியவில்லை. ஒரு கவரில் வெல்லசுக்கான ஊதியம், இன்னொரு கவரில் கொல்லப்பட்ட பெண் மேரி ஆனியின் தாய்க்குச் சேர்ப்

துகிறது. இவ்வளவு கொடூரமாக, வக்கிரமாக, இரக்கமற்றவர்களாக சில மனிதர்கள் இருக்க முடியுமா- என்பதுதான் அந்தக் கேள்வி. நம்பமுடியாததாகவும் அதே நேரத்தில் மறுக்க முடியாததாகவும் இருக்கும் இந்த எதார்த்தம், உண்மை என்று ஒப்புக் கொள்ள முடியாமலும், பொய் என்று நிராகரிக்க முடியாமலும், முன்னும் பின்னும் அலைக்கழித்து, இரம்பம் போல இரசிகனையும் அறுக்கிறது.

படத்தின் இறுதியில், மேரி ஆனியை வன்புணர்ச்சிக்கு ஆளாக்கி, கொல்லும் அந்தத் திரைப்படத்தின் நடிகனான மெஷினை, வெல்லெஸ் கொலை செய்யும் காட்சி இப்படி அமைந்திருக்கிறது. கொலை செய்வதற்கு முன், அவனது முகத்தைப் பார்த்துவிட வேண்டும் என்ற வெறியில், அவனுடைய முக

**ஒ**ரு கிரிமினல் குற்றத்தைத் கண்டுபிடிக்கும் புலனாய்வாளனின் பின்னால்தான் இத்திரைக்கதையே செல்கிறது என்ற போதிலும், ஒரு துப்பறியும் படம் தோற்றுவிக்கும் திகில் உணர்ச்சியை இது நம்மிடம் தோற்றுவிக்கவில்லை. மாறாக இப்படம் சித்தரிக்கும் உலகமும் அதன் மனிதர்களும்தான் நம்மைத் திகிலில் உறைய வைக்கின்றனர்..

பாலியல் வல்லுறவு, கொலை, பிணத்தைப் புணர்தல், வயிற்றைக் கிழித்து கருவை சிதைத்தல்.. என வன்முறையின் காணச்சகியாத கோரங்களையெல்லாம் சமீப காலங்களில் நாம் கண்டிருக்கிறோம். போஸ்னியாவின் வக்கிரங்களுக்குக் காரணம் மதவெறி-நிறவெறி; இலங்கையில் இனவெறி; குஜராத்தில் மதவெறி. பல்லாயிரம் பேரைப் பலி கொண்ட இத்தகைய வன்முறைகளைக் காட்டிலும், மேரி ஆனியைச் சிறுகச் சிறுகக் கொலை செய்த அந்த வன்முறையைக் காட்டிலும், நம்முடைய இரத்ததைச் சில்லிட வைப்பது, ''ஏன் செய்தாய்'', என்ற கேள்விக்கு மெஷின் கூறும் பதில்தான்: ''ஒரு காரணமும் இல்லை. எனக்குப் பிடித்திருக்கிறது, செய்தேன்.''

அந்தப் பதில் திமிர்த்தனமாகக் கூறப்பட்ட பதில் அல்ல. யாரோ ஒரு அப்பாவிப் பெண்ணைப் படுகொலை செய்த தனது செயலை மனிதத்தன்மையற்ற செயலாக அவன் கருதவே



படிப்பகம்

www.padippakam.com

இல்லை. எனவேதான், தன்னுடைய செயலுக்காக சக மனிதனுக்கு விளக்கமளிக்க வேண்டிய அவசியமோ, ஏதோ ஒரு நியாயம் கற்பிக்க வேண்டிய அவசியமோ இருப்பதாகக் கூட அவன் நினைக்கவில்லை. எனக்குப் பிடித்திருந்தது, செய்தேன். என்பதை அவன் வெகு இயல்பாகக் கூறுகிறான். அவனுடைய பதிலில் காணப்படும் இந்த இயல்புத் தன்மைதான் மனிதர்கள் என்ற முறையில் நம்மைக் குலைநடுங்கச் செய்கிறது.

செத்துப்போன அந்தக் கோடீசுவரன், இலட்சக்கணக்கில் செலவு செய்து இப்படி ஒரு கொடூரத்தைப் படமெடுக்கச் செய்திருக்கிறானே, ஏன் செய்தான்? அவனுக்குப் பிடித்திருந்தது. செய்தான்.

யாரோ ஒரு பெண்ணை காதலிப்பதாகச் சொல்லி ஏமாற்றி, அவளுடன் உறவு கொண்டு, அதனைப் படமெடுத்து, பிறகு அதனைக்காட்டி மிரட்டியே அவளை மீண்டும் மீண்டும் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கும் குற்றங்கள் பற்றி அன்றாடம் படிக்கிறோமே, அந்த இளைஞர்கள் ஏன் அப்படிச் செய்கிறார்கள்? அவர்களுக்குப் பிடித்திருக்கிறது. செய்கிறார்கள். மற்றப்படி கசக்கி எறியப்பட்ட அந்தப் பெண்கள் மீது அவர்களுக்கு வேறு எந்த விரோதமும் கிடையாது.

''ஏன் முஸ்லிம்களைக் கொன்றோம்'' என்று குஜராத் வன்முறையாளர்கள் பேசுவதைக் கேட்கும்போது நமக்கு ரத்தம் கொதிக்கிறது. இந்த வன்முறையாளர்களின் பதிலைக் கேட்கும்போதோ ரத்தம் சில்லிடுகிறது.

எனக்குப் பிடித்திருக்கிறது என்பதைத் தவிர தனது செயலுக்கு வேறு விளக்கம் எதுவும் சொல்லத் தேவையில்லை என்பதாக ஒரு மனிதனின் விழுமியங்கள் மாறுவதென்பது, வெறும் பாலியல் வேட்கை அல்லது வெறி தொடர்பான பிரச்சினை அல்ல. பாலியல் வேட்கை தோற்றுவிக்கும் பலவீனமான தருணங்கள் மட்டுமே இந்த மாற்றத்தை ஒரு மனிதனிடம் ஏற்படுத்தி விடுவதில்லை.

அரசியல் சமூக வாழ்வின் வெவ்வெறு தளங்களில் வெவ்வேறு விதமாக இந்த மாற்றம் துரிதகதியில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. முறுக்கிப்பிழிந்தபின் ஒதுக்கித் தள்ளப்படும் சக்கையாகவும், பல் குத்தியபின் விட்டெறியப்படும் குச்சியாகவும் தொழிலாளர்களைக் கருதுகின்ற முதலாளிகளை எடுத்துக் கொள்ளுங்களேன். அவர்களுக்கு அந்தத் தொழிலாளர்கள் மீது தனிப்பட்ட எந்தப் பகையுணர்ச்சியும் கிடையாது. அதேபோல, வீசியெறியப்பட்ட அந்தத் தொழிலாளிகளுக்கு என்ன நேரும் என்று சிந்திக்கும் இரக்கமும் அவர்களுக்குக் கிடையாது. பல்லைக் குத்தியபின் குச்சியை வீசியெறிவது என்ற ஏற்பாடு அவர்களுக்குப் பிடித்திருக்கிறது. அவ்வளவே.

நுகர்ந்துவிட்டுத் தூர எறியும் பண்டமாக மட்டுமே சக மனிதனையும் கருதப் பயிற்றுவிக்கும் இந்தச் சமூக அமைப்பின் முலையில் ஞானப்பால் குடித்து வளரும் மனிதன், மெஷினைப் போலப் பேசுவது வியப்புக்குரியதல்ல.

யாரோ ஒரு அப்பாவிப் பெண்ணைக் கொலை செய்து விட்டு, எனக்குப் பிடித்திருந்தது செய்தேன் என்று மெஷின் கூறும் பதில் நம் ரத்தத்தை உறையவைக்கலாம். ஆனால் இதே வகையான பதில்கள், இதிலிருந்து வேறுபட்ட பல சந்தர்ப்பங்களில், பல உதடுகளிலிருந்து அலட்சியமாக உதிர்வதை நாம் கேட்காமலா இருக்கிறோம்?

மெஷினுக்கு முகமூடி தேவைப்பட்டிருக்கிறது.

உண்மையைக் கேள்விப்பட்டவுடனே தற்கொலை செய்து கொள்ளும் மனைவியைப் பெற்றிருக்கின்ற காரணத்தினால்தான், அவளிடமிருந்து ஒளிந்து கொள்வதற்கு, அந்தக் கோடீசுவரக் கிழவனுக்கு ஒரு லாக்கர் தேவைப்பட்டிருக்கிறது. பக்தர்களுடைய கண்களிலிருந்து மறைந்து கொள்ளும் பொருட்டுத்தான் தேவநாதனுக்கும் கருவறை தேவைப்பட்டிருக்கிறது.

சில நூறு பக்தர்களுக்குப் பிடிக்காது என்று கருதி எந்தக் காட்சியை மறைப்பதற்கு தேவநாதன் முயன்றானோ, அந்தக் காட்சி பல ஆயிரம் ரசிகர்களுக்குப் பிடித்தமான எதார்த்தக் காட்சியாக (Reality show) இருந்திருக்கிறது என்ற உண்மை, இப்போது தேவநாதனுக்குப் புரிந்திருக்கும்.

தான் முகமூடி அணிந்து நடித்த போதிலும், தன்னுடைய படத்தைப் பார்க்கும் ரசிகர்கள் முகமூடி அணிவதில்லை என்ற உண்மை மெஷின் என்று அழைக்கப்பட்ட ஜார்ஜுக்கு ஏற்கெனவே தெரிந்திருக்கிறது. அதனால்தான் முகமூடி கிழிக்கப்பட்ட மறுகணமே வெல்லஸிடம் மிக ஏளனமாக அந்தக் கேள்வியைக் கேட்கிறான் மெஷின்: என்ன எதிர்பார்த்தாய்? ஒரு கொடிய மிருகம் போல இருப்பேன் என்றா?

**தனது விருப்பங்கள், தெரிவுகள், செயல்கள் ஆகியவை சக மனிதர்கள் மீது ஏற்படுத்தும் பாதிப்புக்கு, தான் விளக்கமளிக்கத் தேவையில்லை என்ற கருத்து, துவக்கத்தில் ஒரு ஆணவம் போலத்தான் வெளிப்படுகிறது. அதுவே மெல்ல மெல்ல வளர்ந்து அவனுடைய இயல்பாகவும், பண்பாடாகவுமே மாறும் போது அந்த மனிதன் 'மெஷின்' ஆகிவிடுகிறான்.**

இது எளிமைப் படுத்தலோ, பொதுமைப்படுத்தலோ அல்ல. தனது விருப்பங்கள், தெரிவுகள், செயல்கள் ஆகியவை சக மனிதர்கள் மீது ஏற்படுத்தும் பாதிப்புக்கு, தான் விளக்கமளிக்கத் தேவையில்லை என்ற கருத்து, துவக்கத்தில் ஒரு ஆணவம் போலத்தான் வெளிப்படுகிறது. அதுவே மெல்ல மெல்ல வளர்ந்து அவனுடைய இயல்பாகவும், பண்பாடாகவுமே மாறும்போது அந்த மனிதன் 'மெஷின்' ஆகிவிடுகிறான்.

எனினும் மெஷின் முகமூடி அணிய வேண்டியிருக்கிறது. சட்டத்தின் கரங்களிலிருந்து தப்பிக்கும் காரணத்துக்காக மட்டுமல்ல, இன்னமும் இந்தச் சமூகத்தில் மனிதர்களே பெரும்பான்மையாக இருப்பதன் காரணமாகத்தான் மெஷினுக்கு முகமூடி தேவைப்பட்டிருக்கிறது.

நீங்கள் என்ன எதிர்பார்த்தீர்கள், ஹாலிவுட் திரைப்பட விமரிசனத்தையா? காஞ்சிபுரம் கைபேசிகளில் ஓடிய படங்களுக்கு இந்த விமரிசனம் பொருந்தவில்லையா? காஞ்சிபுரத்துக்கும் ஹாலிவுட்டுக்கும் என்ன வேறுபாடு? காஞ்சிபுரம் அமெரிக்காவில் இல்லை என்பதைத் தவிர.

● பாலன்



படிப்பகம்

www.padippakam.com

# தில்லி சிதம்பரம் முதல் தில்லைச் சிதம்பரம் வரை...

# மூலதனத்தின் இராமாயணம்!

ஆபரேசன் கிரீன் ஹன்ட்டுக்கும் சிதம்பரத்துக்கும் இடையிலான தொடர்பு என்ன என்று கேட்டால், இந்தக் கேள்வியே அபத்தம் என்று நீங்கள் கருதக்கூடும். 'கிரீன் ஹன்ட்' என்றழைக்கப்படும் இந்த நக்சல் வேட்டையைத் வழி நடத்துபவரே உள்துறை அமைச்சர் சிதம்பரம்தான் என்பதை நாம் அறியாமல் இல்லை. நாம் இங்கே குறிப்பிடுவது உயர்திணைச் சிதம்பரமான உள்துறை அமைச்சரை அல்ல, அஃறிணைச் சிதம்பரமான தில்லையை - அதாவது தீட்சிதர்களை!

பண்டங்களால் மனிதர்கள் ஆளப்படும் இந்தக் காலத்தில், அதிகாரத்தின் குறியீடுகளும் அஃறிணைப் பெயர்களால் அழைக்கப்படுவது ஆச்சரியத்துக்குரியதல்ல. தில்லியைப் போல தில்லையும் அதிகாரத்தின் ஒரு குறியீடு.

தில்லை நடராசர் கோயிலின் நிர்வாகத்தை அறநிலையத்துறையின் ஆளுகையின் கீழ் கொண்டு வந்ததன் மூலம், தங்களது மத நம்பிக்கையிலும், மத உரிமையிலும் தமிழக அரசு அத்துமீறி நுழைந்து ஆக்கிரமித்திருக்கிறது என்பது தீட்சிதர்களின் குற்றச்சாட்டு.

கோயிலுக்குச் சொந்தமான 2500 ஏக்கர் நிலம், இந்தியாவில் மட்டுமின்றி இலங்கை வரை பரவியிருக்கும் கோயிலின் சொத்துகள், இடுகாட்டுச் சாம்பல் பூசித் திருவோடேந்தித் தாண்டவமாடும் பெருமானின் தலைக்கு மேலே தகதகக்கும் பொன்னோடு, அவரது உடல் மீது வேயப்படும் ஆபரணங்கள் உள்ளிட்ட கிலோக் கணக்கிலான நகைகள், பக்தர்கள் செலுத்தும் காணிக்கைகள்... இன்ன பிற சிவன் சொத்துகள் அனைத்தும் தங்கள் குலத்துக்கே சொந்தம் என்றும், பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள மேற்படி 'அறங்கள்' அத்தனைக்கும் தாங்களே 'பரம்பரை அறங் காவலர்கள்' என்றும் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்திருக்கிறார்கள் தீட்சிதர்கள்.

மேற்படி சொத்துக்களுக்குப் பாரம்பரிய உரிமை கொண்டாடும் தீட்சிதர்களிடம் அதற்கான பட்டாவோ, பத்திரமோ, பகவான் எழுதிக் கொடுத்த பவர் ஆஃப் அட்டார்னியோ கிடையாது. எனினும் இந்த லவுகீக உடைமைகள் அனைத்தும் தங்களுடையவை என்பது அவர்களுடைய 'ஆன்மீக நம்பிக்கை' யாக இருக்கிறது.

நடராசனின் ஆக்ஞைப்படி 3000 தீட்சிதர்கள் கைலாசகிரியிலிருந்து கிளம்பி சிதம்பரம் வந்ததாகவும், ஊர் வந்து சேர்ந்தபின் தலையை எண்ணிப்பார்த்த போது, 2999 தீட்சிதர்கள் மட்டுமே இருந்ததாகவும், ''காணாமல் போன அந்த ஒரு தீட்சிதன் நானே'' என்று நடராசப் பெருமானே அறிவித்ததாகவும் ஒரு



கதையை தீட்சிதர்கள் சொல்கிறார்கள். இந்தக் கதைப்படி தில்லை நடராசனும் ஒரு தீட்சிதனாகி விடுகிறான். எனவே, தீட்சிதர்களால், தீட்சிதர்களுக்காகப் பராமரிக்கப்படும் தீட்சிதருடைய கோவிலே தில்லைக் கோயில் என்று ஆகிறது.

ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்புள்ள லவுகீக சொத்துக்களுக்கு மத நம்பிக்கையின் பெயரால் ஒருவர் உரிமை கோர முடியுமா, சட்டம் இதை அனுமதிக்குமா - என்று நீங்கள் சிரிக்கலாம். ஒரு இந்தியக் குடிமகன் மதத்தை நம்புவதற்கும், கடைப்பிடிப்பதற்கும் உரிமை வழங்குகின்ற இந்திய அரசியல் சட்டத்தின் பிரிவுகள் 25, 26 இன் கீழ் தான் இந்த பாரம்பரிய உரிமையை இத்தனை காலமும் தீட்சிதர்கள் நிலைநாட்டி வந்திருக்கிறார்கள். இப்போதும் அதே சட்டப்பிரிவுகளின் கீழ்தான் தமிழக அரசின் அதிகாரத்தை உச்சநீதிமன்றத்திலும் கேள்விக்குள்ளாக்கியிருக்கிறார்கள். இது தில்லைச் சிதம்பரத்தின் கதை.

இனி தில்லி சிதம்பரத்திடம் வருவோம். சிதம்பரத்தின் காட்டு வேட்டைப் படைகள் கைப்பற்றத் துடிக்கும் முதல் இடம் ஒரிசாவிலுள்ள நியாம்கிரி மலை. இந்த நியாம்கிரி மலையின் பாரம்பரியக் காவலர்கள் டோங்கிரியா கோண்டு என்ற இனத்தைச் சார்ந்த பழங்குடி மக்கள். டோங்கர் என்ற ஒரியச் சொல்லுக்கு மலை என்று பொருள். அது மட்டுமல்ல, இந்த வட்டாரத்திலிருந்து வெட்டியெடுக்கப்படும் கற்களும்கூட கோண்டலைட் கற்கள் என்றே அழைக்கப்படுவது இம்மக்களுடைய பாரம்பரிய உரிமைக்கான 'கல்வெட்டு' ஆதாரம்.

எனினும் அம்மக்கள் தம்மை 'ஜார்னியாக்கள்' என்றே அழைத்துக் கொள்கிறார்கள். அந்த மலைகளில் நிறைந்திருக்கும் வற்றாத நீர்ச்சுனைகளே (ஜரனா) தங்கள் வாழ்வின் ஆதாரம் என்பதனால், தங்களை அந்த நீர்ச்சுனைகளின் புதல்வர்களாகவே அவர்கள் கருதிக் கொள்கிறார்கள். பூமித்தேவனும் (தரணி பெனு) நியாம் தேவனும் (நியாம் பெனு) தான் இம்மக்களின் வழிபாட்டுக்குரிய தெய்வங்கள்.

நியாம்கிரி மலை இம்மக்களுடைய உடலின் நீட்சி. தம் சொந்தக் கைகளுக்கும் கால்களுக்கும் யாரும் பத்திரப் பதிவு செய்து வைத்துக் கொள்வதில்லை என்பதால், தங்கள் மலைக்கும் இவர்கள் பட்டாவோ பத்திரமோ வைத்திருக்கவில்லை. அந்த மலை - அவர்களால் பேணப்படும் உடல், அந்த மலைதான் அவர்களுக்குச் சோறு போடும்



படிப்பகம்

www.padippakam.com

பொருள், அந்த மலையேதான் அவர்களது வழிபாட்டுக்குரிய ஆவி.

தங்களது பொருளாயத உரிமைகளையும், ஆன்மீக உரிமைகளையும் பிரித்துப் பார்ப்பதற்கோ, இந்திய அரசியல் சட்டத்தின் எந்ததெந்தப் பிரிவுகள் எவற்றைப் பாதுகாக்கின்றன என்று தீட்சிதர்களைப் போல, விவரமாக தெரிந்து வைத்திருப்பதற்கோ அவர்களுக்கு அவசியம் ஏற்பட்டதில்லை. சொல்லப் போனால் அப்படிப்பட்ட ஒரு அரசியல் சட்டம்தான் தங்களைப் 'பாதுகாத்துக் கொண்டிருக்கிறது' என்ற உண்மையே அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை - சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டும் புல்டோசர்கள் நியாம்கிரி மலைக்கு விஜயம் செய்யும் வரை.

இது உலகமயமாக்கலின் காலமல்லவா? இம்மண்ணின் பூர்வகுடிகளை விடவும், வெளிநாட்டில் குடியேறிய இந்தியர்களுக்குத் தாய்நாட்டுப் பாசம் தலைவிரித்து ஆடும் காலமல்லவா? லண்டனில் குடியேறிய இந்தியரான அனில் அகர்வால் என்ற உலகப்பணக் காரரும் நியாம்கிரி மலையில் தனது கடவுளைத் தரிசித்து விட்டார்.

பருவமழையின் நீரைப் பருகி, கடற்பஞ்சு போல அதனைச் சேமித்து வைத்து, அச்சேமிப்பில் விளைந்த அடர்ந்த காடுகளை ஆகாயத்தில் கரங்களாய் நீட்டி, மேகத்தின் நீரை மண்ணில் இறக்கி, வற்றாத அருவிகளையும், சுனைகளையும் வழங்கிய வண்ணம் அந்த மலைக்குள் மறைந்திருக்கும் **கடவுள்** யாராக இருக்கும் என்ற அவரது ஆன்மீகத் தேடலுக்கு அறிவியல் அளித்த விடை - **பாக்சைட்.** இந்தக் கடவுளின் அறங்காவலராக உடனே பொறுப்பேற்க விரும்புகிறார் அகர்வால்.

தங்களது கடவுளான நியாம்கிரி மலைக்கு ஆடு கோழி அறுத்து பலியிடுவது டோங்கிரியா கோண்டு இன மக்களின் வழிபாட்டு முறை. கடவுளைத் தனக்குப் பலியிட்டுக் கொள்வது அகர்வாலின் வழிபாட்டு முறை. மலையின் மேற்பரப்பில் நிரம்பியிருக்கும் பாக்சைட் தாதுவுக்காக, அந்த 40 கி.மீ. நீள மலைத் தொடரின் தலையை மட்டும் அவர் சீவ விரும்புகிறார். பழங்குடி மக்களின் கடவுளரைத் தின்று செரிக்கும் இந்த வழிபாட்டு முறைக்குப் பொருத்தமான ஒரு பெயரை, அவர் தன்னுடைய நிறுவனத்திற்கு ஏற்கெனவே சூட்டியிருக்கிறார் - 'வேதாந்தா மைனிங் கார்ப்பரேசன்.' இதனைத் தற்செயல் என்பதா, இறைவன் செயல் என்பதா?



வேதங்களின் அந்தமாக ஆதிசங்கரன் கண்டறிந்த தத்துவம் 'அகம் பிரம் மாஸ்மி' (நானே பிரம்மமாக இருக்கிறேன்). எனினும் நாம் காணும் இந்தப் பிரம்மம், எல்லைகள் கடந்த என்.ஆர்.ஐ பிரம்மம். மூலதனம் என்ற பெயரால் அழைக்கப்படும் பிரம்மம்.

'பிரம்மம் சத்யம், ஜெகன் மித்யா'! ''பிரம்மமே மட்டுமே உண்மையானது, உலகம் என்பது வெறும் மாயத்தோற்றம்'' என்பது சங்கரனின் தத்துவ விளக்கம். இந்த விளக்கத்தை மூலதனத்தின் மொழிக்குப் பெயர்த்தோமாகில், நாம் காணும் புதிர்கள் யாவும் நொடியில் விலகுகின்றன. இல்லாத மாயைகளான வீடுகளின் மீது, எழுதிக்கொடுக்கப்பட்ட பத்திரங்களே சத்தியமாக மாறியதும், பின்னர் அந்த அசத்தியங்களைச் சத்தியமாக மாற்றும் முயற்சியில் இந்த மாய உலகம் இன்னமும் மல்லுக்கட்டிக் கொண்டிருப்பதும் ஆதிசங்கரனின் தியரியை நிரூபிக்கவில்லையா என்ன?

**''அப்பழங்குடி மக்களால் கடவுளாக வழிபடப்படும் மலையைத் தகர்ப்பது, அவர்களது மத நம்பிக்கையையே தகர்ப்பதாகும்'' என்ற வாதத்தை நீதிபதிகளின் அறிவியல் உணர்ச்சியால் அங்கீகரிக்க இயலவில்லை. இருப்பினும், யாருக்கும் உதவாத ராமேசுவரத்தின் மணல்திட்டுகளை உச்சநீதி மன்றம் புனிதமாகக் கருதியதென்றால் அதற்குக் காரணம், அந்த நம்பிக்கை ஸ்ரீராமபிரான் தொடர்பானது என்பதுதான்.**

நியாம்கிரியின் தலையில் நிறைந்திருக்கும் அடர்ந்த காடுகளை அழிக்க சுற்றுச்சூழல் சட்டம் தடையை ஏற்படுத்தியதால், உலகப்புகழ் பெற்ற அத்வைதிகளான ஜே.பி. மார்கன் நிறுவனத்தினரை வைத்து, நியாம்கிரியில் 'இருக்கின்ற காட்டை இல்லை' என்று எழுதி வாங்கினார் அகர்வால். உண்டென்றால் அது உண்டு, இல்லை என்றால் அது இல்லை!

அடுத்த தடை, பழங்குடி மக்களின் நிலத்தை நேரடியாகப் பன்னாட்டு நிறுவனத்துக்கு எழுதிவைக்க அரசியல் சட்டத்தின் ஐந்தாவது அட்டவணை தோற்றுவித்த இடையூறு. அட்டவணையையே நீக்குவதற்கு அவகாசம் தேவையென்பதால், தனது இந்திய அவதாரமான ஸ்டெரிலைட் நிறுவனத்தின் பெயரில் சுரங்கம் தோண்டுவதாக அறிவித்தார் அகர்வால். ஆமோதித்தது உச்சநீதிமன்றம்.

காடுகளை அழித்து சுரங்கம் தோண்டினால், சூழலியல் பேரழிவு நிகழும் என்று உச்சநீதிமன்றம் நியமித்த வல்லுநர் குழுவே ஆட்சேபித்தது. ''காடு தானே, புதிதாக வளர்த்துக் கொள்ளலாம்'' என்று அந்த ஆட்சேபத்தையும் ஒதுக்கி விட்டு, 200 இலட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள பாக்சைட் தாதுவைத் தன்னகத்தே வைத்திருக்கும் நியாம்கிரி மலையை அகர்வாலுக்கு வழங்குவ



படிப்பகம்

www.padippakam.com

தாக, ஆகஸ்டு 2008-இல் தீர்ப்பளித்துவிட்டது, கே.ஜி.பாலகிருஷ்ணன், அஜித் பசாயத், கபாடியா என்ற மூன்று நீதிபதிகள் அடங்கிய குழு.

வனவிலங்குகளைப் பராமரிக்க 105 கோடி, பழங்குடி மக்களை முன்னேற்றுவதற்கு 12.2 கோடி, பழங்குடி மக்களுக்கான பள்ளி, மருத்துவமனைகளை பராமரிக்க அகர்வாலின் இலாபத்தில் 5 சதவீதம் - நியாம்கிரியின் தலையைச் சீவும் பாவத்துக்கு உச்சநீதிமன்றம் பரிந்துரைத்துள்ள பரிகாரம் இது. கொலைக் குற்றத்துக்குப் பரிகாரமாக கோயிலுக்கு நெய்விளக்கு! இவ்வளவு மலிவானதொரு பரிகாரத்தை ஒரு பார்ப்பனப் புரோகிதனின் வாயிலிருந்து கூட யாரும் வரவழைத்திருக்க முடியாது.

''அப்பழங்குடி மக்களால் கடவுளாக வழிபடப்படும் மலையைத் தகர்ப்பது, அவர்களது மத நம்பிக்கையையே தகர்ப்பதாகும்'' என்ற வாதத்தை நீதிபதிகளின் அறிவியல் உணர்ச்சியால் அங்கீகரிக்க இயலவில்லை. வளர்ச்சித் திட்டத்துக்கும் வல்லரசாவதற்கும் தடையாக ஈசனே வந்து நிற்பினும், குற்றம் குற்றமே என்றுரைக்கும் நக்கீரன் பரம்பரையல்லவா, நம் நீதிபதிகள்!

இருப்பினும், அந்தக் கடவுள் எந்தக் கடவுள், அந்த நம்பிக்கை யாருடைய நம்பிக்கை என்பதைப் பொருத்தும் நாட்டாமையின் தீர்ப்பு வேறுபடுகிறது. மரகதமலையாக ஒளிரும் நியாம்கிரி மலையைக் காட்டிலும், யாருக்கும் உதவாத ராமேசுவரத்தின் மணல்திட்டுகளை உச்சநீதிமன்றம் புனிதமாகக் கருதியதென்றால் அதற்குக் காரணம், அந்த நம்பிக்கை ஸ்ரீராமபிரான் தொடர்பானது என்பதுதான். நியாம்கிரி தொடர்பான வழக்கில் தங்களையும் இணைத்துக் கொள்ளுமாறு கேட்ட பழங்குடி மக்களிடம் ''உங்களுக்கும் இந்த வழக்குக்கும் என்ன சம்மந்தம்?'' என்று கேட்டார்கள் நீதிபதிகள். ஆனால் இந்தக் கேள்வியை சிதம்பரம் வழக்கில் தலையிட்ட சுப்பிரமணியசாமியிடம் நீதிபதிகள் கேட்கவில்லை.

அதுமட்டுமல்ல, புனிதமான கைலாசத்திலிருந்து புறப்பட்டு வந்ததாக தீட்சிதர்கள் சொல்லிவரும் கதையை எந்த நீதிமன்றமும் அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்தியதில்லை. வெள்ளைக்காரன் காலம் தொட்டு எல்லா நீதிமன்றங்களும் அந்தக் கதையைக் கேட்டுத்தான் தீட்சிதர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பெழுதி வருகின்றன. அதனால்தான் உச்ச நீதிமன்றத்தின் தாழ்வாரங்களில் தில்லை



தீட்சிதர்கள் நம்பிக்கையுடன் உலவுகிறார்கள். நியாம்கிரி பழங்குடிகளோ, தங்களிடம் ஒரு வார்த்தைகூடக் கேட்காமல் தங்கள் தலைவிதியைத் திருத்தி எழுதிவிட்ட, உச்சநீதிமன்றத்தின் வாயிலில் அமர்ந்து கண்ணீர் வடிக்கிறார்கள்.

வர்க்க நலனும் சாதி உணர்வும் மத உணர்வும் ஒன்றுகலக்கும் இந்த திரிவேணி சங்கமத்தின் சுழலில், மதநம்பிக்கை முடியும் இடம் எது, வர்க்கநலன் துவங்குமிடம் எது, சாதி உணர்வு ஊடாடும் இடம் எது என்று கண்டறிய முடியாமல், ஒன்று பிறிதொன்றாய்த் தோற்றம் காட்டி நம்மை மயக்குகிறது.

நியாம்கிரி வழக்கில் ஸ்டெரிலைட்டுக்கு ஆதரவாகத் தீர்ப்பெழுதிய மூன்று

**தண்டகாரண்ய காடுகள் இந்த வேட்டையின் களமாகியிருப்பதும் வரலாற்றின் விதியே போலும்! போர்க்களம் தண்டகாரண்யத்தின் காடுகளெங்கும் விரிய, விரிய, இராமாயணக்கதைகள் நம் நினைவில் நிழலாடுகின்றன. கிறிஸ்துவுக்குப் பின், 20 நூற்றாண்டுகள் முன்னோக்கி நடந்து, இதோ, இராமாயண காலத்தை எட்டிவிட்டோம்.**

நீதிபதிகளில் ஒருவரான கபாடியா, ''நான் ஸ்டெரிலைட்டின் பங்குதாரர்'' என்று வெளிப்படையாகவே அறிவித்துக் கொண்டார். இந்திராவோ தீட்சிதர்களின் சொத்துரிமையைக் காக்க எம்ஜியாரிடம் இரகசியமாகத் தலையிட்டார். தமிழ்பாடும் வழக்கில் தீட்சிதர்களுக்கு ஆதரவான இடைக்காலத் தடையாணையை இரகசியமாக வழங்கிய உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி ஷா, தீட்சிதர்களுக்கும் தனக்குமிடையிலான உறவை சிதம்பர இரகசியமாகவே பேணினார். தீர்ப்புகள் கிடக்கட்டும், வாய்தாக்களின் பின்னாலும் வர்க்க நலன் உண்டு என்பதை சிதம்பரம் வழக்கின் 20 ஆண்டு உறக்கம், தனது குறட்டைச் சத்தத்தின் மூலம் நமக்குத் தெளிவுபடுத்தியது.

2004-ஆம் ஆண்டு வரை வேதாந்தா நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக இருந்த ப.சிதம்பரம், பின்னர் நிதி அமைச்சராக அவதரித்து அனில் அகர்வாலுக்கு வேண்டியதைச் செய்து கொடுத்தார். 2009-இல் அவரே உள்துறை அமைச்சராக உடுப்பணிந்து வந்து, இதோ கலிங்கத்தின் மீது படை நடத்திக் கொண்டிருக்கிறார்.

தீட்சிதர்களின் கைலாசக்கதை என்ற மத நம்பிக்கையை, தனி உடைமை என்ற ஆயிரம் கால் மண்டபம் தாங்கி நிற்கிறது. சிவன் சொத்தில் குலம் வளர்த்த செட்டியார்கள், பிள்ளைவாள்கள், ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களின் கட்டளைதாரர்கள், ஆதீனங்கள், ஆடல்வல்லானின் சந்நிதியில் மகளுக்கு அரங்கேற்றம் நடத்த வரும் அதிகாரிகள், அமைச்சர்கள் .. அனைவரும் இந்த நம்பிக்கையின் கால்கள். அதனால்தான் கைலாசக் கதையைக் கேட்டுக் கைகொட்டிச் சிரிக்காமல், ''ஹரஹர மகாதேவா'' என்று கன்னத்தில் போட்டுக் கொள்கின்றனர்.

ஆனால் டோங்கிரியா கோண்டு மக்களின் நம்பிக்கையையும் அவர்களது கடவுளையும் தாங்கி நிற்க அவர்களிடம் தனிஉடைமை இல்லை. அம்மக்கள் நியாம்கிரி மலையின் உண்மையான அறங்காவலர்களாக இருந்தார்கள். எனவேதான் ஒரு வெகுளிச் சிறுமியைத் தரையில் வீழ்த்தி, வல்லுறவு கொள்ளும் கயவனைப்போல, அந்தப் பழங்குடிப் பொதுவுடைமைச் சமூகத்தின் மீது, தனியுடைமையின் புல்டோசர்கள் வெறியுடன் படர்ந்து எறி இறங்குகின்றன. அவர்களுடைய கடவுளான நியாம்தேவனுக்கோ தூக்குதண்டனை விதித்து தீர்ப்பெழுதி விட்டது உச்ச நீதிமன்றம்.



படிப்பகம்

www.padippakam.com

தங்களுடைய கடவுளின் தலை சீவப்படுவதைக் காணமாட்டாமல் துடிக்கிறது மனித குலம் பெற்றெடுத்த அந்த மழலைச் சமுதாயம்!

•••

'ஆபரேசன் கிரீன் ஹன்ட்' - காட்டு வேட்டை என்று இதனைத் தமிழில் மொழிபெயர்க்கலாம். காடுகளை வேட்டையாடுவது, அவற்றுக்குக் காவலிருக்கும் பழங்குடிகளை வேட்டையாடுவது, அதற்குத் தடையாக இருக்கும் நக்சல் பாரிகளை வேட்டையாடுவது என்ற மூன்று நோக்கங்களையும் உள்ளடக்கிய இந்தச் சொற்றொடர், பாரதப் பாரம்பரியத்தில் ஊறி உப்பிய மூளையிலிருந்து மட்டுமே பிறந்திருக்க முடியும்.

தண்டகாரண்ய காடுகள் இந்த வேட்டையின் களமாகியிருப்பதும் வரலாற்றின் விதியே போலும்! போர்க்களம் தண்டகாரண்யத்தின் காடுகளெங்கும் விரிய, விரிய, இராமாயணக்கதைகள் நம் நினைவில் நிழலாடுகின்றன. கிறிஸ்துவுக்குப் பின், 20 நூற்றாண்டுகள் முன்னோக்கி நடந்து, இதோ, இராமாயண காலத்தை எட்டிவிட்டோம்.

அங்க, வங்க, கலிங்க, கோசல, விதேக, மகத மன்னர்களின் இரதங்கள் உருண்ட பாட்டைகளின் மீது டாடா, எஸ்ஸார், மிட்டல், அகர்வால், பிர்லா, அம்பானிகளின் புஷ்பக விமானங்கள் தரையிறங்குகின்றன. வசிட்டனும் விசுவாமித்திரனும் கௌதமனும் துர்வாசனும் யாக்ஞவல்கியனும் வனாந்திரங்களில் அமைத்திருந்த பர்ணசாலைகள் 'விருந்தினர் மாளிகை' என்ற பெயர் தாங்கி மினுக்குகின்றன. வாயிலில் காக்கிச் சீருடையும் கதாயுதமும் தரித்த அனுமன்கள் காவல் நிற்கின்றன.

''இலங்கைத் தீர்வுதான் நமக்கு வழிகாட்டி'' என்று கூறி பக்திப் பரவசத்துடன் தெற்கு நோக்கி நமஸ்கரிக்கிறார் சட்டிஸ்கார் டி.ஜி.பி விசுவ பந்து தாஸ். இராம சைன்யம் என்ற பழைய பெயர் அரக்கர்களின் மனதில் அச்சத்தைத் தோற்றுவிப்பதில்லை என்பதால், பாம்புப்படை, கீரிப்படை, கருந்தேள்படை என்று குல மரபுச் சின்னங்கள் தாங்கிய படைகள் அணி வகுத்து நிற்கின்றன. சுக்ரீவனின் சேனைகூட, 'சல்வா ஜுடும்' என்று ராட்சஸ மொழியில் பெயர் மாற்றம் பெற்றுவிட்டது.

இராவண வதம் முடியும் வரை முடிசூட்டு விழாவுக்குக் காத்திருக்க முடியாதென முனகும் வீடணர்களுக்காக, விதவிதமான திரிசங்கு சொர்க்கங்களும் இந்திரப் பதவிகளும் ஆர்டரின் பேரில் தயாராகின்றன. போரில் அரக்கர் குலப் பெண்களையும், முதியவர்களையும், குழந்தைகளையும் கூட வேட்டையாட வேண்டியிருக்கும் என்பதால், அதற்கேற்ப தர்ம சாத்திரங்களைத் திருத்தி எழுதிக் கொண்டிருக்கிறார்கள், சிதம்பரம், மன்மோகன், அலுவாலியா, புத்ததேவ், பட்நாயக் முதலான முனிபுங்கவர்கள்.

போர் முழக்கத்தையும் கீழ்க்கண்டவாறு திருத்தி அமைத்திருக்கிறார் திருவாளர் சிதம்பரம். இது தேவர் குலத்தைக் காக்க அசுரர்கள் மீது நடத்தப்படும் போர் அல்ல; அசுரர் குலத்தை முன்னேற்றும் நோக்கத்துக்காகவே அசுரர்கள் மீது தொடுக்கப்படும் போர். அவர்களுக்கு வீடுகளை வழங்குவதற்காகப் பூமியைப் பறிக்கும் போர்; வேலையை வழங்குவதற்காகத் தொழிலைப் பறிக்கும் போர்; சோறு போடுவதற்காக வயல்களை அழிக்கும் போர்; பிரம்ம ஞானத்தை அறிமுகப்படுத்துவதற்காக அவர்களுடைய தெய்வங்களைச் சம்காரம் செய்யும் போர்.

**ஒரு வெகுளிச் சிறுமியைத் தரையில் வீழ்த்தி, வல்லுறவு கொள்ளும் கயவனைப்போல, அந்தப் பழங்குடிப் பொதுவுடைமைச் சமூகத்தின் மீது, தனியுடைமையின் புல்டோசர்கள் வெறியுடன் படர்ந்து எறி இறங்குகின்றன. தங்களுடைய கடவுளின் தலை சீவப்படுவதைக் காணமாட்டாமல் துடிக்கிறது மனித குலம் பெற்றெடுத்த அந்த மழலைச் சமுதாயம்!**

இதோ, நியாம்கிரியின் புதையலின் மீது, அதன் மதிப்பே தெரியாத ஒரு கோண்டு இனப்பெண், சுள்ளிக் கட்டைச் சுமந்து நடக்கிறாள். அவளுடைய கருமைநிறக் கழுத்தில் கிடக்கும் பித்தனை வளையங்களில் வியர்வைத்துளி வழிந்து மின்னுகிறது. கைகளின் அசைவில் அவளது வளையல்கள் எழுப்பும் இரும்பின் ஒலி இசையாய் எழும்புகிறது. அந்தக் கானகத்தின் வண்ணங்கள் அனைத்தையும் வரித்துக் கொண்ட வண்ணத்துப் பூச்சியாய் அவள் ஆடை அசைகிறது.

''ராமா, அதோ.. அவள்தான். எடு வில்லை, பூட்டு பாணத்தை''! என்று ஆணையிடுகிறான் விசுவாமித்திரன். ''ஒரு பெண்ணைக் கொல்வதற்கா நான் வித்தை பயின்றேன்?'' என்று தயங்கித் தடுமாறுகின்றன சிப்பாயின் விரல்கள். ''இவள் பெண்ணல்ல, தாடகை! நம் தர்மத்தை அழிக்க வந்திருக்கும் அரக்கி! சுடு....!'' என்று உறுமுகிறார் சிதம்பரம்.

சுள்ளிக்கட்டு சரிந்து சிதறுகிறது. மிரட்சியும் கோபமும் உறைந்த அவளது கருவிழிகள் நிலைகுத்தி நிற்கின்றன. வேதாந்தத்தின் வெடிமருந்துக் குச்சிகள் நியாம்தேவனின் மார்பைப் பிளந்து எறிகின்றன.

இந்தப் போர்க்களத்திலிருந்து வெகு தூரத்தில் அயோத்தி நகரின் அமைதிச் சூழலில் தவமிருந்து கொண்டிருக்கிறான் சம்பூகன் என்றொரு 'சூத்திரன்'. அவன் கேட்க விழையும் வரம் என்னவாக இருக்கக் கூடும்? ஒரு துண்டு நிலம் அல்லது ஒரு வேலை அல்லது மூன்று வேளைச் சோறு அல்லது ஒரு வீடு?

சிதம்பரத்தின் காட்டு வேட்டையை சம்பூகன் அறியமாட்டான். ஆயுதம் ஏந்திப் போரிடும் அரக்கர்களின் மார்பை மட்டுமே அண்ணல் இராமபிரானின் பாணங்கள் குறிவைக்கும் என்ற அரண்மனைப் பொய்யைத் தவிர, இந்தப் போரைப்பற்றி வேறு எதையும் அவன் அறியமாட்டான். தாடகை வதம் அவனுக்குத் தெரியாது. வாலி வதமும் தெரியாது. தன் முன்னே தோன்றக்கூடிய இறைவனிடம், தான் கேட்க விழையும் வரங்களைத் தவிர, வேறு எதன் மீதும் கவனம் செலுத்த அவனது தவம் இடம் கொடுக்கவில்லை. ''தவமிருத்தல் மட்டுமல்ல, வரம் கேட்பதும் குற்றமே'' என்று தரும சாத்திரத்தின் ஷரத்துகள் திருத்தப் பட்டு விட்டதையும் அவன் அறியமாட்டான்.

நியாம்கிரியின் தலையைக் கொய்த வேதாந்தத்தின் கொடுவாள், உன் கழுத்தையும் குறிவைக்கும் என்பதைச் சம்பூகனுக்குப் புரிய வைத்தால் தவம் கலைத்து அவனும் வாளேந்தக்கூடும்.

ஏந்துவானாயின், இந்த முறை ஆரண்ய காண்டத்துடன் இராமாயணம் முடியவும் கூடும்.

● மருதையன்



படிப்பகம்

www.padippakam.com

# வெண்மணிச் சரிதம்

அரவம் திரியவும் அஞ்சிடும் முன்பனி
கறவை மாடும் கண்திறவா அதிகாலை
சேவல் கூவும் முன்னே
பண்ணையின் கொம்பூதும்.
மடையின் கை நீரள்ளி முகம் கழுவி
வயலுக்கு ஓட வேண்டும்
கூலி விவசாயி.

இரண்டாவது கொம்பொலிக்கு
நெஞ்சுக் கலயம் உடையும் வண்ணம்
கஞ்சிக் கலயத்துடன்
ஓட வேண்டும் பெண்கள்!

கழனிக்குள் இறங்கியவுடனேயே
''ஓ'' வெனும் ஓசையெழுப்பி,
உழைக்கத் தொடங்கியதை
நிலவுடமையாளனின் உலை மனதில்
பதிய வேண்டும் உழைக்கும் மக்கள்.

நாற்றங்கால் சேற்றுத் தண்ணீரில்
உச்சிக்கு வந்த
கதிரவன் தட்டுப்படும்போதே
சோற்றுக் கலயத்தை
தொட அனுமதியுண்டு!
வெறும் வயிற்றில் துடித்து விழும்
வியர்வையின் சூடு பட்டு
வயல் நண்டு துடித்தோடும்.

களைத்த விரல்களுக்கு
பழஞ்சோறு இதமாகும்!
ஓரிரு பருக்கைகளுக்கு
உதடுகள் தடுமாறும்!
பட்டமிளகாயும், உப்பும்
பரிதாபப்பட்டு நீராகாரத்தில் விழுந்த
சூரியனும் தொட்டுக்கை.

சூரியனிருக்கும் வரை செய்யும்
''கொத்து வேலை'' எப்போதாவது...
அரிக்கேன் விளக்கொளியில்
கண்ணெரியும் வேலை எப்போதும்.
நீளும் வேலையின் முடிவில்
நிலவு காய்த்து விடும்!
அல்லி மலர்ந்து குளம்
ஆவியிழந்து விடும்.

வேலை முடிந்ததும் நேரே
குடிசைக்கு போகவியலாது!
பண்ணையார் வீட்டில் பல
'வெட்டிவேலை' கூப்பிடும்.
வரப்பு காயாமல் வைத்தவன்
பிள்ளை தாய்ப்பாலுக்கு ஏங்கி,
உதடுகள் காய்ந்து வெடித்திடும்.

படியாள் வீட்டு அடுப்புச் சாம்பலும்
பண்ணை வயலுக்கே சொந்தம்!
கூலி விவசாயி குடிசையில்
படர்ந்த சுரைக்காயும்
பண்ணையார் அடுப்படிக்கே சொந்தம்!
இதைவிடக் கொடுமை,
பண்ணையடிமைகள் முதலிரவும்
பண்ணையார் படுக்கைக்கே சொந்தம்!

இமைகளை நிமிர்த்தி..
எதிர்த்துப் பார்த்தால்
''சவுக்கடியும்'', ''சாணிப்பாலும்''
தண்டனை -
இதுதான் அன்றைய நிலப்பிரபுத்துவ
தஞ்சை.

•••

தஞ்சைத் தரணியெங்கும்
தனிப்பெரும் கோயில்கள்..
திருத்தலப் பெருமை பேசும்
தடித்தடி சாமிகள்..
எல்லையில்லா சக்தி கொண்டதாய்
சொல்லப்படும்,
எந்தவொரு தெய்வமும்
பண்ணையாதிக்க பாதகத்திற்கெதிராய்
புல் ஒன்றையும் புடுங்கக் காணோம்!

**படியாள் வீட்டு**
**அடுப்புச் சாம்பலும்**
**பண்ணை வயலுக்கே**
**சொந்தம்!**
**கூலி விவசாயி**
**குடிசையில்**
**படர்ந்த சுரைக்காயும்**
**பண்ணையார்**
**அடுப்படிக்கே சொந்தம்!**

விவசாயத் தொழிலாளர்
விளைவித்த உபரியில்
கோயிலும், கூத்தியாளுமாய்
சாமியும் கும்மாளமடித்தது
நிலப்பண்ணைகளோடு.

மண்டையோட்டில் பசியாறும்
மகேசனுக்கே
இரவு, பகல் பாராது படியளந்தனர்
அண்டை வெட்டும்
விவசாயத் தொழிலாளர்.
இந்த லட்சணத்தில்,
உலகுக்கே படியளக்கிறானாம் ஈசன்!

உண்மையில்..
அவனது உமையம்மையின்
உண்டைக் கட்டிக்கும்
உழைத்துக் கொட்டுபவன் கூலி விவசாயி.

கட்டிய மனைவிக்கு சோறுபோட
வக்கில்லாதவனுக்கு கட்டிய கோயில்கள்
எத்தனை.. எத்தனை..

பொறிதட்டிப் போய்
உழைப்பாளர் பிடுங்கிவிட்டால்
எனும் பயத்தில் கட்டிய கதைகள்
எத்தனை.. எத்தனை..

சிவன் சொத்து குல நாசமாம் - பல
குலங்களை அழித்தே சிவனுக்கு சொத்து!
எனும் உண்மையை
விவசாய நிலம் பேசும்!

எல்லோர்க்கும் ஈசனல்ல - இவன்
பொல்லாத பண்ணைகட்கு
காவல் நின்று
ஏழை விவசாயிகள் மேல்
ஏவப்பட்ட அல்சேசன்.

கடவுளின் பெயரால் இனாம்தார்,
பிரம்மதேயம் எனும் பெயரில்,
ஏக்கர் கணக்கில் நிலங்களை வளைத்து,
''கலம் கலமாய்'' கூலி விவசாயி
குலங்களை அறுத்து,
பண்ணையடிமைகள் உழைப்பை
வெண்ணையாய் நக்கின
பார்ப்பன நகங்களும்,
சூத்திர மடங்களும்.

வெள்ளம், புயலால்
விளைச்சல் குறைந்தால்,
கூலி விவசாயி அளக்கும்
வாரம், குத்தகை
அளவு குறைந்தால்
கூலியின்றி அவர்
வயிற்றிலடித்த மடங்கள்.
கோபுரத்தினின்று அவர் விழுந்து செத்த
சைவக் கொலைகள்!

இசைவான நெல்லளக்காத
குற்றத்திற்காக
கசையடிகள் கொடுத்திட்ட
காட்சிகளை காட்டிநிற்கும்
சோழமண்டல சிற்பங்கள்!



படிப்பகம்

www.padippakam.com

தஞ்சை வடபகுதி:
தருமபுரம், திருப்பனந்தாள்,
அகோபில சங்கரமடம்,
தஞ்சை தென்பகுதி:
மதுக்கூர், பாப்பன்காடு சிக்கவலம்
ஜமீன்தார்கள்

தஞ்சை நடுப்பகுதி:
வடபாதி மங்கலம், நெடும்பலம்
கோட்டூர், வலிவலம், குன்னியூர்
பூண்டி, உக்கடை, கபிஸ்தலம்
எங்கும் பண்ணையாதிக்கத்தின்
கொடும் பலம்.

கபிஸ்தலமும் குன்னியூரும்
காங்கிரசுப் பண்ணைகள்.
வடபாதியும், நெடும்பலமும்
நீதிக்கட்சி பண்ணைகள்.

ஏழை கூலி விவசாயிகள்
சுயமரியாதைக்காக
எந்தத் 'திராவிடமும்'
பேரியக்கம் கண்டாரில்லை.
தாழ்த்தப்பட்ட விவசாய வர்க்கத்திற்காக
'தலித் தம்பிரான்களும்'
ஓரியக்கம் விண்டதில்லை.
எதிர்த்துக் கேட்டதில்லை..

'பார்ப்பன, சூத்திர' பண்ணையும்
என ஏங்கிக் கிடந்த கழனியெங்கும்
செங்கொடி இயக்கம் துளிர்த்தது!
சேற்றினில் நடுங்கிய கைகளில் ஒரு..
சிவப்புத் திமிர் முளைத்தது.

''அடித்தால் திருப்பி அடி!
ஏண்டி என்றால்.. ஏண்டா எனக் கேள்!
சாதி சொன்னால் மோதி நட!
உழுபவர்க்கே நிலம் சொந்தம்
உழைப்பவர்க்கே அதிகாரம்!''
எனக் கம்யூனிச இயக்கம்
கற்றுக் கொடுத்தது...
களத்தில் விளைந்தது.

சுகந்தை என்றும், அமிஞ்சி என்றும்
பள்ளு என்றும், பறை என்றும்
பழிக்கப்பட்ட உழைக்கும் வர்க்கத்தை
அதே ஊரில் தோழர் என்று
நிமிர வைத்தது.

அகந்தை கொண்ட
ஆதிக்க சாதியுணர்வை அடியறுத்து
விவசாய சங்கமாய்
ஒன்றிணைத்தது.

தென்பரை சேர்ந்தது
விதை நெல்லாய் கம்யூனிசம்...
தஞ்சைக் கழனியெங்கும்
நடவு செய்தார் சீனிவாச ராவ்.

விடுமோ பண்ணைகள்,
அவர் தலைக்கு விலை வைத்தனர்.

அவரோ..
தலைமறைவான போதும் ஊருக்கு
பல தலைகளை
உருவாக்கிக் கொண்டே போனார்!

நெற்பயிர் காத்தது
அவர் ரகசிய பயணம்
வரப்பின் நெருஞ்சியும் இளகிடும்
அவர் இரவின் கால் தடம்...
நீளும் வர்க்கப் போராட்டத்திற்கு
நிலவும் ஒத்துழைத்து,
அவரை ஆற்றுப்படுத்திய பல
அமாவாசைக் கூட்டங்கள்.

களப்பால் குப்பு, தனுஷ்கோடி,
மணலூர் மணியம்மை.. இன்னும்
பெயர்கள் பலவாய்
காய்த்தன செந்நெல்.
''சங்கையே நெறித்த போதும்
விவசாய சங்கமே உயிரெ''ன
காவிரிப்படுகை கனன்று முழங்கிற்று.

வேறு வழியின்றி
கூலியுயர்வு, கொத்தடிமைத் தடை,
வாடா, போடி, சவுக்கடி,
சாணிப்பால் நிறுத்தம் எனப்
பண்ணைகள் கொஞ்சம் பதுங்கின.

சோழநாடு சோறுடைத்து
என்பதென்ன சிறப்பு!
ஆங்கே கம்யூனிசம்
நிலப்பண்ணைகள் அதிகாரமுடைத்தது
உழைக்கும் வர்க்கத்தின் உயிர்ப்பு!

நேற்று வரை
தன் நிழல் திரும்பிப் பார்க்கவே
தயங்கி நடந்த சேரிகள்
பண்ணையை நிமிர்ந்து
கேள்வி கேட்பதும்
பணிதல் மறந்து, சுயமரியாதையாய்
வாழ்ந்து பார்ப்பதும்

கூலி உயர்வை விட,
கொதிப்பேற்றியது ஆண்டைகளுக்கு.

தாழ்த்தப்பட்டவர்
என்பதற்காய் மட்டுமல்ல,
அரைலிட்டர் கூலி
அதிகம் கேட்டாரென்பதற்காய் அல்ல
தம்மை எதிர்க்கும் அரசியல் சக்தியாய்
ஆனது கண்டு,
சாதியால் தகர்க்க முடியாத
செங்கொடி அமைப்பாய்..
உழைக்கும் மக்கள் எழுந்தது கண்டு
கலக்கமடைந்தனர் நிலப்பிரபுக்கள்.

வேரோடிய கம்யூனிசத்தின்
போராட்ட அழகோடு
பூத்துக் கிடந்தது வெண்மணி.
தீராத வன்மத்துடன்
அதைத் தீக்கிரையாக்க
தருணம் பார்த்தன பண்ணைகள்.
தோதாக அதன் கால்களுக்கு
செருப்பாய் கிடந்தன
தேசிய, திராவிடக் கட்சிகள்..

•••

ஆயிரத்து தொள்ளாயிரத்து
அறுபத்து எட்டு
திசம்பர் இருபத்தைந்தாம் நாள் இரவு
அய்யோ!
ஆம்பல் பூத்த எங்கள் கீழவெண்மணி
சாம்பல் பூத்தது.
இரிஞ்சூர் கோபாலகிருஷ்ண நாயுடு
எனும்
பண்ணைமிருகம் ஊரில் நுழைந்தது.

முதலில்.. அவன் கண்ணை உறுத்திய
செங்கொடியை வெட்டிச் சாய்த்தான்.
அவன் வர்க்கமடக்கிய
விவசாய சங்கத்தை திட்டித் தீர்த்தான்





படிப்பகம்

www.padippakam.com



''ஊரையே கொளுத்துங்கடா..
வெட்டிச்சாயுங்கடா''
தீ நாக்கைத் திசைகளில் சுழட்டினான்.

அவன் வெறிப்பார்வைதனைப் பார்த்து
தெருநாய்கள் குரைப்பற்று ஓடியது.
கூடுகள் அடைந்த பறவைகளோ
குஞ்சுகள் கதற, திசை தேடியது
வேலியோரத்து திசம்பூர் பூ
வெந்து பிணமாய் நாறியது.
அய்யய்யோ.. ஏணையில் கிடந்த
பிள்ளையின் குரல்
எரிந்து, கருகி அடங்கியது.

தப்பியோட இராமய்யன் குடிசையில்
தஞ்சமடைந்த நாற்பத்தி நான்கு பேரை
வெளியே தாழிட்டு
குடிசையோடு கொளுத்தினான்
கோபால கிருஷ்ண நாயுடு.

நெருப்புக்கும் இரக்கம் வந்து
நின்று விடுமோ எனப் பயந்து
மேலும், மேலும் எண்ணையை ஊற்றி
எரிதனல் மூட்டினான்.

எரியும் நெருப்பையும் தாண்டி
தன் பிள்ளையாவது பிழைக்கட்டும் என
ஒரு தாய் வெளியில் தூக்கி எறிந்
தாள் குழந்தையை.
இதயமிழந்த இரிஞ்சூர் கும்பலோ
தப்பிய குழந்தையை துண்டாய் வெட்டி,
எரியும் குடிசையில் எறிந்து மகிழ்ந்தது.

வர்க்கப் போருக்கு இனி வாரிசே
இல்லையென
திமிரில் சிரித்தான், இரிஞ்சூர் நாயுடு.

திரும்பச் சிரித்தது உயர்நீதி!
காரோட்டும் கவுரமான கைகள்
இப்படியொரு காரியத்தை
செய்யாதென விடுதலை செய்து,

கொடூரன் கோபால கிருஷ்ண நாயுடுவுக்கு
ஆரத்தி எடுத்தது நீதிமன்றம்.

'கூலி உயர்வு கேட்டான் அத்தான்
குண்டடி பட்டுச் செத்தான்' என
வசனம் பேசிய தி.மு.க. அரசும்
வழக்கை அத்தோடு புதைத்தான்.

இந்த அநியாயத்தை
எந்தத் தெய்வமும் கேட்கவில்லை.
கடைசியில்..
இருஞ்சூர் நாயுடு விதிவலியை
நக்சல்பாரியே முடித்தான்.

•••

நெருப்பினில் வேகாத
வெண்மணிக் கனவை..
புதைத்திட வியலாத
வர்க்கத்தீயை வளர்ப்பவர்க்கு மட்டுமே
வெண்மணி சொந்தம்.

**''அடித்தால் திருப்பி அடி!**
**ஏண்டி என்றால்..**
**ஏண்டா எனக் கேள்!**
**சாதி சொன்னால்**
**மோதி நட!**
**உழுபவர்க்கே நிலம்**
**சொந்தம்**
**உழைப்பவர்க்கே**
**அதிகாரம்!''**
**எனக் கம்யூனிச இயக்கம்**
**கற்றுக் கொடுத்தது...**
**களத்தில் விளைந்தது.**

வெண்மணிச் சமர்க்களத்தில்
போலிக் கம்யூனிஸ்டுகளுக்கு
ஏன் அமர்க்களம்?

போராடி உயிர்நீத்த விவசாயிகளுக்கு
வெண்மணிப் பக்கம் வீர வணக்கம்.
போராடும் விவசாயிகளுக்கு
நந்திகிராமில் துப்பாக்கிச் சூடு.

மிட்டா, மிராசை எதிர்த்தவர்களுக்கு
வெண்மணியில் மலர் வளையம்
டாட்டாகம்பெனியை எதிர்ப்பவர்களுக்கு
மேற்கு வங்கத்தில் சமாதி!

போயசு பண்ணைக்கு புளுக்கை
வேலை செய்யும் இடதும், வலதும்
இருஞ்சூர் பண்ணையை
எதிர்த்துப் போராடிய
தியாகிகள் பெருமையைத் தீண்டுவதா?
போலிக் கம்யூனிஸ்டுகளின்
பாழும் முகத்தில்
காறித் துப்புது செங்கொடி!

இறந்தவர் சாதியை
சொந்தம் கொண்டாடும் பல இயக்கங்கள்!
ஆனால் இறந்தவர் லட்சியம்
சொந்தம் கொண்டாட நக்சல்பாரிகள்!

•••

வெண்மணித் தீ அடங்கவில்லை இன்னும்
ஊரையே கொளுத்துகிறது உலகமயம்..
ஊரை விட்டுத் துரத்துகிறது விவசாயம்..
தப்பித்து தஞ்சமடையும் குடிசைகளை
எரிக்கிறது நகரமயம்..
கைத்தொழில் ஒடித்து, சிறுகடை பிடுங்கி
கொத்தடிமையாக்கும் தனியார் மயம்..
நகரங்கள் தேடி.. நாடுகள் ஓடி
இனியும் தப்பிப் பிழைக்க வழியின்றி
விவசாயிகளை எரிக்கிறது தாராளமயம்..

''இருஞ்சூர் கோபால கிருஷ்ண நாயுடு
இன்னும் சாகவில்லை..

இருங்காட்டுக் கோட்டையில்
ஹூண்டாயாய் சிரிக்கிறான்..
ஆயிரம் வேலிகள் வளைத்து
டாட்டாவாய் நெறிக்கிறான்..
இனாம்தார் அம்பானியாய்
எல்லா பக்கமும் அறுக்கிறான்..
கோக், பெப்சியாய்
நமது குளம், ஆறுகள் குடிக்கிறான்..
குடிசையில் படர்ந்த பூசணி மட்டுமல்ல..
அதன் விதையும் எனக்கேச் சொந்தமென
மான்சாண்டோவாகப் பறிக்கின்றான்..
இனி தப்பிக்க வழியில்லை..
என்ன செய்யப் போகின்றீர்கள்?''

கேட்கிறார்கள் வெண்மணித் தியாகிகள்
வர்க்கப் போராட்டத்தின் வாரிசுகளே
பதில் சொல்லுங்கள்!

● துரை.சண்முகம்



படிப்பகம்

www.padippakam.com

## சிறுகதை:

# மட்டப் பலகை

''செந்தில், இன்னைக்கு முள்ளம் பன்றி ஓவர் சூடு. விஷ் பண்ணா வழக்க மான ஒரு பிளாஸ்டிக் ஸ்மைல் கூடக் காணோம். வேகமா ரூமுக்கு போயி ருக்கு.. பாத்து இருந்துக்க.''

''என்னைக்குதாண்டா அவன் நார் மலா இருந்துருக்கான்? நேத்து கூட ரிசப் சனிஸ்ட குதறி எடுத்துட்டான். எந்தப் பக்கம் புடிச்சாலும் குத்திக் கொடைய றாண்டா! சரியான பேரு... முள்ளம்பன் றின்னு யார்ரா வச்சது?''

''முன்னால உன் சீட்ல இருந்துட்டு விட்டா போரும்னு ஓடுனார்ல அந்த சம்பத் வெச்ச பேரு... சரி போய் சிஸ் டத்த ஆன் பண்ணு!''

''யோவ் எங்கய்யா ரமேஷ்?'' எக்சி கியூடிவ் சந்தானத்தின் குரல் அதட்ட லாக விழ தூக்கிவாரிப் போட்ட மாதிரி கம்ப்யூட்டரில் மூழ்கியிருந்த ரகுபதி ''தோ, ஃபாக்ஸ் மெஷின்கிட்ட இருக் காரு!'' என்று பதட்டத்துடன் எழுந்தான். இன்றைக்கு ரமேஷ் தொலைந்தான் என்று, மற்றவர்களின் கைகளும் கீ போர்டில் நடுங்கின.

''யெஸ் சார்!'' ரமேஷ் வணக்கத்து டன் வரவேற்க, ''என்னய்யா ஆளப் பாத் தவுடனே சீன் போடற.. நேத்து படிச்சுப் படிச்சு சொல்லிருக்கேன். அந்தக் கொட் டேசனை முடிச்சுட்டுப் போன்னு.. நீ பாட்டும் மயிராட்டம் ஆறரைக்கெல் லாம் கிளம்பிட்ட.'' வெடுக்கெனத் தலைக்கேறிய கோபத்துடன், மற்றவர் களையும் திரும்பிப் பார்த்துக் கொண்ட ரமேஷ், அவமானத்தால் மனம் குன்றி அதே வேகத்தில் மரத்துப் போனான்.

''இல்ல சார்! ஒர்க்க முடிச்சுட்டேன் பைனலா பிரிண்ட் அவுட் எடுக்கறது தான் பாக்கி'' அவன் பேசி முடிப்பதற் குள், ''நோ எக்ஸ்பிளனேசன்.. டயத் துக்கு நீ எழுந்திருச்சுப் போக இது என்ன கவர்மெண்ட் ஆபீசா? அங்க கூட இப்ப ஆப்பு வெச்சுட்டான். ஃபர்ஸ்ட் யூ ஸ்டி ரிக்ட்லி ஃபாலோ தி டிசிப்ளின்!'' கட்டி வைத்து அடிப்பது போல இருந்தது குரல்.

'பாவி! தினம் எட்டுமணி வரைக் கும் உன் இழவ எடுத்துட்டுத் தான போறேன், நேத்து ஒரு ஒன்றரை மணி நேரம் முன்ன போனதுக்கு இவ்வளவு அவமரியாதையா! இது ஆபிசா இல்லை வதை முகாமா?' எனப் பதி லுக்கு கத்த வேண்டும் போல இருந்தது. மனக்கண்ணில் தோன்றிய வீட்டு நிலை மைகளும், எட்டாயிரம் சம்பளமும் அவனது கோபத்தை இரத்தத்திலேயே வைத்துப் புதைத்தது.

அதோடு எக்சிகியூடிவ் விடுவதா யில்லை.. ரமேஷை சாக்கு வைத்து பொதுவாகப் பேச ஆரம்பித்து விட் டான், ''திஸ் ஜாப் ஈஸ் நாட் கிரியேட்டட் ஃபார் யூ! திஸ் ஆப்பர்ச்சுனிடி இஸ் கிவன் ஃபார் அஸ், மைன்ட் இட் ஜென் டில்மேன்!'' கிரேக்க அடிமைகளிடம் அதன் எஜமானன் சாட்டையைச் சொடுக் கிப் பேசுவது போல இருந்தது அந்தச் சூழ்நிலை. எல்லோரும் ஒரு கணம் பீதி யுடன் திரும்பிப் பார்த்தனர். எக்சிகியூ டிவ் விரும்பியதும் அதைத்தான்.

''ஜென்டில்மேன் எல்லோருக்குமே சொல்றேன்.. படாத பாடுபட்டு பத்து வருசத்துல கம்பெனியை வளர்த்திருக் கோம்.. கம்பெனியோட குரோத்துக்கு ஏத்த மாதிரி உங்க குவாலிட்டியும் இருக் கணும்.. தலைக்கு, உடம்புக்கு ஏத்த மாதிரி கைகளும் வளரணும் இல் லையா! கம்பெனி டார்கெட்டுக்கு ஏத்த மாதிரி உங்க வொர்க்கிங் கெபாசிட்டி இருக்கணும். உங்க சௌகரியத்துக்காக டோண்ட் டிஸ்டர்ப் அண்ட் டெஸ்ட்ராய் அவர் குரோத்.. புரிஞ்சுக்குங்க. சரியா அஞ்சு மணிக்கு மூட்டையக் கட்டிக் கிட்டு எழுந்திருச்சிரணும். தினம் லேட்டா வரணும்னு உங்க லேசி வொர்க் கிங் கல்ச்சருக்கு இங்க இடமில்லை! இதே மத்த ஆபீசா இருந்தா மூணு பேரை வச்சி வொர்க் லோடு தருவான்! இங்க பத்து பேரை வெச்சிருந்தும், யுவர் ஒர்க் ஈஸ் நாட் சேட்டிஸ்பாக்டரி! சும்மா கம்ப்யூட்டர், பிரிண்டர் மட்டும் புதுசா இருந்தா போதாது.. ப்ளீஸ் பில்டப் யுவர் பிரைன் நியூலி.. அண்டர்ஸ்டேண்ட்!''.

இமைப்பதைத் தவிர வேறு எந்த எதிர்வினையும் புரியாமல் எலக்ட்ரா னிக் குருவிகளைப் போல அசையாமல் கேட்டுக் கொண்டனர் ஊழியர்கள்.

'சே! இப்படி ஒரு பிழைப்புத் தேவையா? என்று தனித்தனியாக மன துக்குள் நொந்துகொண்டனர். ''டூ யுவர் டியூட்டி'' என்று போகும் போதும் ஓர் ஆணியைக் காதுக்குள் அறைந்து விட்டு சென்றான் எக்சிகியூடிவ்.

அவன் நகர்ந்து விட்டதை உறுதி செய்து கொண்டு, மெல்ல முனக ஆரம் பித்தான் ரமேஷ். ''என்ன மனுசன்யா இவன்! ரெண்டு நாளைக்கு முன்ன கூட எட்டு மணிக்கு வந்து ஒரு கொட்டே சனைக் கொடுத்து அடிக்கச் சொன் னான்.. மறுவார்த்தை இல்லாமல் செஞ்சு கொடுத்துட்டு, எட்டே முக்காலுக்குத் தான் கிளம்பினேன்.. வெரி ஃபைன், வெரி ஃபைன்னு தட்டிக் கொடுத்துட்டு.. ''ரமேஷ் ஏன் தெரியுமா உன்கிட்ட வந்து வேலையைக் கொடுக்கிறேன். நீ சின்சி யரா செய்வ. ஒர்க்கும் நீட்டா இருக்கு வெரிகுட்னு'' சொல்லிட்டுப் போனாய்யா! இன்னிக்கு வந்து என்னமா பேசுறான் பாத்தியா.. ரொம்ப பயங்கரமான ஆளுப்பா!''


''பின்ன, என்னதாம்பா நீ புரிஞ்சு வச் சிருக்க.. பெரிய்ய படிப்பெல்லாம் படிச் சுருக்கீங்க! இது கூடவா புரியல. எனக் குத் தெரியாது அந்த ஆளப் பத்தி...

> **'பாவி! தினம் எட்டுமணி வரைக்கும் உன் இழவ எடுத்துட்டுத் தான போறேன், நேத்து ஒரு ஒன்றரை மணி நேரம் முன்ன போனதுக்கு இவ்வளவு அவமரியாதையா! இது ஆபிசா இல்லை வதை முகாமா?' எனப் பதிலுக்கு கத்த வேண்டும் போல இருந்தது.**



படிப்பகம்

www.padippakam.com



எத்தன வருஷமா இந்த ஆபிஸ்ல பியூனா குப்ப கொட்டறேன். எல்லாம் அப்படித்தாம்பா.. காரியம் ஆவணும்னா வயித்துப்புள்ள நழுவுற மாதிரி பேசுவான். காரியம் முடிஞ்சதுன்னு வெச்சுக்க, கொரங்குப் புடிதான்! நான்தான் நாலு எழுத்து படிக்காத ஆளு... இங்க வந்து மாட்டிக்கிட்டேன்னு பாத்தா! ஹூம்! படிச்சுவங்களுக்கும் இதே கதிதானா? நானாவது பத்து வார்த்தைக்கு ஒரு வார்த்தை எதுத்துப் பேசுவேன். எதுத்துக் கேட்டுக் கேட்டுதான், இப்ப நைட் லேட்டானா சாப்பாடு துட்டு தர்றானுவ.. இப்புடியே இருந்தா எதுவும் பேசாம தலைய குனிஞ்சுகினு கம்ப்யூட்டர் கேம்ஸ் ஆட வேண்டியதுதான். அழுவுற புள்ளதான் பால் குடிக்கும். ஹூக்கும்!'' அலட்சியமாகச் சொல்லிவிட்டு நகர்ந்தார் பியூன்.

''பார்ரா! பியூனுக்குக் கூட நாம எளக்காரமாப் போயிட்டோம். என்னமா பேசிட்டுப் போறான் பாரு.. நாம கல்லுடைக்கிற மாதிரி கொத்தடிமை வேலையாட்டம் கீ போர்டை அடிக்கிறோம். அவன் என்னடான்னா கம்ப்யூட்டர் கேம்ஸ் ஆடறோம்னு நக்கல் பண்ணிட்டு போறான், எல்லாம் நம்ம விதிடா''

''டோண்ட் வொர்ரி ரமேஷ், நாம வேற என்ன பண்ண முடியும்? எல்லார் கிட்டயும் போயி சொல்லிக்கிட்டு இருக்காத. எவனாவது போட்டு வேற குடுத்துருவான். மெல்ல வேற ஜாப் ஆப்பர்சுனிட்டிய தேடிக்கிட்டு இந்த நரகத்த விட்டு ஓட வழி பாத்துக்க வேண்டியது தான். பியூன் சொல்றதுலயும் தப்பில்ல! இப்படியே ஆத்திரத்த அடக்கி அடக்கி ஆறு வருஷம் வேலை பாத்தம்னு வெச்சுக்க! பி.பி. எகிறி மேலோகம் போக வேண்டியதுதான். நெட்ல வேற எடத்தப் பாப்போம்'' அவர்களுக்குள் சமாதானம் தேடிக் கொண்டு, வேலையில் மூழ்கினார்கள்.

•••

''என்னய்யா ஆபிசு இது, குறுக்குத் தடுப்பு வெய்யுன்னு வாயால சொல்லிட்டா போதுமா? சொன்ன சாமான்கள வாங்கித் தரல, எப்புடி வேலை செய்யறது? அதுக்குதான்



படிப்பகம்

www.padippakam.com

கையில காச குடு நான் பாத்துக்குறேன்னேன்.. பாரு! கல்லு இருநூறு சொன்னா, நூத்தம்பதுதான் வந்துருக்கு என்ன! எம் பல்லை வச்சுப் பூசறதா? மணலும் பத்தல, கலவ எப்படி போடறது? அப்புறம் கொத்தனார் சரியா போடலன்னு எங்களக் குத்தம் சொல்ல வேண்டியது!'' எரிச்சலாய் பேசிக்கொண்டே கரணையில் எடுத்த சிமெண்ட் கலவையை செங்கல்லின் முகத்தில் கோபமாய் வீசினார் கொத்தனார்.

''அந்தாளு, யாரையும் நம்ப மாட்டாருப்பா! நம்ப என்னாத்த சொன்னாலும் அவுரா ஒரு எஸ்ட்டிமேட் போடுவாரு. நமக்கென்ன இருக்குறத வெச்சு பூசி வுடு.. ஆன வரைக்கும் வேலயப் பாரு!..'' பியூன் கொத்தனாரை மெல்ல பதப்படுத்தினார்.

''எஸ்ட்டிமேட் போட அவரு என்ன கொத்தனாரா? தெரிஞ்ச வேலைய செய்யணும்.. இப்ப நான் போயி அது என்ன சொன்ன... எச்சு கூட்டியா எதையோ கூட்டியா, அந்த வேலைய நான் போய் செஞ்சா ஒத்துக்குவியா? நான் கொத்தனாரு. தோதா பொருள் என்ன வேணும்னு எனக்குதான் தெரியும். அதப்போயி நீ மாத்திப் போட்டா எப்படி? நல்ல ஆளுய்யா அந்த ஆளு, இங்க கொண்டாந்து என்ன இழுத்துட்ட பாரு! உன் மூஞ்சிக்காக பாக்குறேன்.. எங்களுக்கென்ன இந்த மடம் இல்லன்னா எத்தனையோ சந்த மடம்.. இந்த சிமெண்ட் வேற... உன் ஆபிசரு மூஞ்சிய மாதிரியே... எங்கனாச்சும் ஒட்டுதா பாரு.. இது என்ன வாங்குனதா? எங்காவது அள்ளிக்கிட்டு வந்ததா?''

''யோவ்! நீ வேற. அவரு ஆபிசுக்கே எச்சிகியூட்டிவ்யா! நீ பாட்டுக்கும் மானாங்கானிக்குப் பேசுற.. அந்தாளு வந்துற கிந்துற போறான்.. ஏதேது என் வேலைக்கும் உல வெச்சுருவ போலருக்கே! பேசாம சும்மாங்கானிக்கும் செஞ்சுட்டுப் போயா!..'' பியூன் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்.

''நீயே சொல்லு.. சொன்னா சொன்ன மாதிரி நடக்கணும். முட்ட வுடுற கோழிக்குதான் நோவு தெரியும்! வேண்டிய பொருள் இல்லாம வேல செய்யறது எவ்வளவு கஷ்டம் தெரியுமா?.. மாணிக்கம், உனக்குத் தெரியாது. இவனுங்கெல்லாம் பேச்சுலயே வெண்ணை எடுக்குற பசங்க.. ச்சீப்பா முடிக்கணும், வேலையும் டாப்பா இருக்கணும்னா எப்படி?''

கலவையைக் கிளறுவதை விட பக்கத்தில் நின்று பேச்சு கொடுத்தால், கொத்தனார் வாயை கிளறிக்கொண்டே இருப்பார் என்ற பயத்தில், ஏதாவது விபரீதமாக நடந்து விடப் போகிறது என்ற பதட்டத்தில், ''பாத்துக்கிட்டே இரு! இதோ வந்துர்றேன்'' என்று நழுவிச் சென்றார் பியூன்.

மணி ஆறு ஆனது. ''என்ன வொர்க் ஃபினிஸ்சா'' என்று ஆவலுடன் வந்த எக்சிகியூடிவ், கொத்தனார் பொருட்களை ஓரங்கட்டுவதைப் பார்த்து அதிர்ச்சியானார், ''என்ன கொத்தனார் எல்லாத்தையும் ஏறக் கட்டீங்க?''

''பின்னே, மணி என்ன ஆகுது?''

கைக்கடிகாரத்தை ஸ்டைலாகத் திருப்பிய எக்சிகியூடிவ் ''என்ன ஜஸ்ட் சிக்ஸ், ஆறுதான் ஆகுது'' என்றார்.

> **''இப்படியெல்லாம் ஒரேயடியா வேல பாத்தா, ஒரேயடியா எங்க கதையும் முடிஞ்சுரும்! சும்மா நீ குடுக்குற துட்டுக்காக பொழுதுக்கும் நாங்க சாக முடியாது சார். நாங்களும் மனுஷங்கதான். போய் மத்த வேலைய பாக்கணும். இங்கேர்ந்து நா இப்ப சிங்கபெருமாள் கோயில் போயாகணும்.. நாங்க என்ன சிட்டியிலியா குடியிருக்கோம்..**

''ஆறாகுதல்ல அவ்வளவுதான்! வேல டைம் முடிஞ்சு போச்சு சார்! இனிமே நாளைக்குதான்.''

''எல்லாம் முடிஞ்சுருச்சு, ஜஸ்ட் கால் வாசி சுவர்தானே! இன்னிக்கே பூசிட்டா வேலயும் முடிஞ்சுரும். ஆபிசும் நாளைக்குப் பாக்க நீட்டா இருக்கும்...'' குரலைத் தாழ்த்தி எக்சிகியூடிவ் பேசினான். எப்பொழுதும் பிறரை அதட்டியே வேலை வாங்கிப் பழகிய எக்சிகியூடிவ் இப்படி தாழ்ந்து பேசியதை, ஆவலுடன் பார்த்தும் பார்க்காத மாதிரி ரசித்துக் கொண்டிருந்தனர் ஊழியர்கள்.

''சார்! இதோ பாருங்க! கோடி ரூபா கொட்டிக் கொடுத்தாலும் ஆறு மணிக்கு மேல வேலை செய்யறதில்ல! மனுசன்னா ஒரு அளவுக்குதான்.. ஒரு டயத்துக்குதான் வேலை.. கல்லா மண்ணா ஒரே எடத்துல குந்திக் கெடக்க... நாளைக்கு ஆஃப் டேல வேல முடிஞ்சிரும், யோவ் மணி கரணைய கழுவு..'' பேசிக் கொண்டே தனது எண்ணத்தை அமல்படுத்திக் கொண்டிருந்தார் கொத்தனார்.

''ஏம்ப்பா! இதுக்குப் போயி இன்னொரு நாளா? வேண்ணா ஓவர்டைம் மாதிரி சேத்து துட்டு வாங்கிக்க. சாப்பாட்டுக்காசும் தர்றேன்.. ஒரேயடியா முடிச்சுடலாம்ல?'' இதம்பதமாக கொத்தனாரை இணங்க வைக்க முயற்சியெடுத்தான் எக்சிகியூடிவ்.

''இப்படியெல்லாம் ஒரேயடியா வேல பாத்தா, ஒரேயடியா எங்க கதையும் முடிஞ்சுரும்! சும்மா நீ குடுக்குற துட்டுக்காக பொழுதுக்கும் நாங்க சாக முடியாது சார். நாங்களும் மனுஷங்க தான். போய் மத்த வேலைய பாக்கணும். இங்கேர்ந்து நா இப்ப சிங்கபெருமாள் கோயில் போயாகணும்.. நாங்க என்ன சிட்டியிலியா குடியிருக்கோம்.. வேற என்ன சார். பேசிக்கிட்டே! நாளைக்கு வர்ட்டா? இல்ல கணக்க முடிச்சுக்கிட்டா?''

''என்னப்பா இப்படி ரஃபா பேசற? சரி வேலயத் தொடங்கியாச்சு.. நாளைக்கு வா வா..'' சலித்துக் கொண்டு எச்சரிக்கையாய் வார்த்தையை விட்டார் எக்சிகியூடிவ். மற்ற ஊழியர்கள் தன்னைப் பார்க்கிறார்களா என்பதைக் கவனித்துவிட்டு வேகமாக அறைக்குள் சென்று விட்டான் எக்சிகியூடிவ்.

''அவங்களுக்கென்ன, வேல முடிஞ்சா போதும்.. மத்தவனும் மனுஷன்தானேன்னு நெனச்சாதானே.. இன்னிய பொழுதுக்கும் நாம வேலை செஞ்சாலும், எந்த மொதலாளியும் திருப்திப் பட மாட்டான். நீ வாடா மணி..'' என்று சித்தாளைக் கூப்பிட்டவாறு மட்டப்பலகையை ஒரு ஓரமாக எறிந்தார் கொத்தனார். உணர்ச்சி பெற்றது போல அதுவும் துள்ளிப்போய் ஓரமாய் விழுந்தது.

கம்ப்யூட்டர் மவுஸை வெறுப்புடன் வருடியபடி, மட்டப் பலகையையே ஆசையுடனும், ஏக்கத்துடனும் பார்த்துக் கொண்டிருந்தன ஊழியர்களின் விழிகள்.

● **துரை. சண்முகம்**



படிப்பகம்

www.padippakam.com

மனிதவாழ்வை மறுக்கும் முதலாளித்துவக் கொடுங்கோன்மைக்கு

## மார்க்சிய-லெனினியமே ஒரே மாற்று
## மக்களிடம் கொண்டு செல்லும் கீழைக்காற்று


### புதிய வெளியீடுகள்...




**அராஜகவாதமா?**
**சோசலிசமா?**
**- ஸ்டாலின்**
**விலை ரூ. 45.00**




**கட்சத்தீவு:**
**மறைக்கப்படும் வரலாறு**
**பறிக்கப்படும் மீனவர் உரிமைகள்**
**-டி.அருள் எழிலன்**
**விலை ரூ. 10.00**




**ஆப்பிரிக்கர்கள்**
**கண்டுபிடித்த**
**இருண்ட ஐரோப்பா**
**- கலையரசன்**
**விலை ரூ. 50.00**




**இலங்கை**
**தேசியஇனப் பிரச்சினையும்**
**தீர்வுக்கான தேடல்களும்**
**- சி.சிவசேகரம்**
**விலை ரூ. 70.00**

## கீழைக்காற்று
**10, அவுலியா தெரு, எல்லீசு சாலை,**
**சென்னை-2. ✆:044-28412367**

### ம.க.இ.க.வின்
### புதிய வெளியீடுகள்...




**ம.க.இ.க.வின் பாடல்கள்**
**நான்கு தொகுப்புகளாக**
**விலை தலா ரூ.30.00**




**துரோகிகளின் மௌனத்தில்**
**துடிக்கும் முள்ளிவாய்க்கால்**
**விலை ரூ.20.00**

## புதிய கலாச்சாரம்
**இரா. சீனிவாசன்,**
**16, முல்லைநகர் வணிக வளாகம்,**
**2-வது நிழற்சாலை,**
**(15-ஆவது தெரு அருகில்),**
**அசோக் நகர்,**
**சென்னை - 600 083.**
**தொலைபேசி: 04423718706**
**9941175876**



படிப்பகம்

www.padippakam.com

# காலனிச் சத்தங்கள்

என் செல்ல மகளே!
நீ பிறந்ததில் எனக்கு
மிக்க மகிழ்ச்சி.
உன் தாத்தாவிற்குத்தான்
என் மீது கொஞ்சம் வருத்தம்.
குலசாமி பெயர் விடுத்து,
மரித்தவர்களின் ஊர்ப்பெயரை
உனக்கு சூட்டியதற்காக...

முடிந்தவரை விளக்கிவிட்டு
பிடிவாதமாய்,
வெண்மணி என்றே உனக்கு
பெயரிட்டு விட்டேன்.
என்னைப் பொறுத்தவரை அவர்கள்
மரிக்கவில்லை.

நகர வாழ்வின் விழுமியங்களோடு
சங்கமித்து நிறைய வருடங்கள்
உருண்டோடி விட்டன.
அதன் தொடர்ச்சியாய் - இப்பொழுது
நீயும் வந்து விட்டாய்...
கடந்து வந்த தூரங்களின்
நீளத்தை என்றாவது ஒருநாள்- நீ
கேட்டறிய வேண்டும் என்பதே
என் ஆவல்.

ஏனெனில்,
தழும்புகளற்ற காயங்கள்
என்னிடம் நிறைய உண்டு.
அதை உன்னோடு பகிர்ந்து
கொள்ளும் போது
உனக்குள் ஒரு பண்பு மாற்றம்
நிகழலாம் என்பது என் நம்பிக்கை.

முரண்களின் மூட்டையாக
இருக்கும் இந்த சமூக அமைப்பின்
சிக்கல்களை
அறுத்தெறிவதற்கான ஆயுதமாக...
அந்த நம்பிக்கை
உனக்குள்ளும் ஊடுருவலாம்.

அழகிய ஓவிய
வேலைப்பாடுகளடங்கிய
பீங்கான் குவளைகளில்,
நீயும் நானும்- இப்பொழுது
தேநீர் அருந்திக் கொண்டிருக்கிறோம்,
இவை நாம் எட்டிய
குறைந்தபட்ச வாழ்க்கை.
இது நடந்தது கூட
உடனடி நிகழ்வல்ல,
ஒரு நெடிய போராட்டத்தின்
விளைவு.

பனை மரத்து ஓலைகள்,
செரட்டைகள்,
அலுமினியக் கிண்ணங்கள்...
இவைகள்தான்
உனது முன்னோர்களின்
தேநீர்க் குவளைகள்
அதாவது,
'நாகரிக' சமூகத்தை
தலைகுனியச் செய்திடும்
இருண்ட கணங்கள்.

'மனிதர்களை 'மனிதர்'
நாயினும் கேவலமாய்
நடத்த முடியுமா அப்பா?'
என்று நீ கேட்கலாம்.
ஆம்,
இப்பொழுதும் இந்த வன்கொடுமைகள்
தொடர்கிறது...
புதிய வடிவங்களில்.
நீ எதிர்கொள்ளும்போது
இன்னும் நவீனப்பட்டிருக்கலாம்.

ஆனாலும்,
உன் கல்விக்கூடத்தில்
'தீண்டாமை ஒரு பாவச்செயல்,
தீண்டாமை ஒரு பெருங்குற்றம்,
.....................................' என்று,
நாடே புனித திருவுருவாய்
இருப்பது போல்
வெற்று வார்த்தைகளை
உன்னுள் இட்டு நிரப்புவார்கள்
அப்பொழுது
உண்மையையும், பொய்யையும்



உரசிப் பார்த்துக் கொள்ள
நம் பகிர்தல் உனக்குப் பயன்படலாம்.

என் செல்ல மகளே!
நீ நடை பயில கற்றுக்கொண்ட
தருணங்கள் - உண்மையில்
அழகானவை, அற்புதமானவை.
எல்லா அப்பாக்களையும் போல்
அந்நிமிடங்களை மிகுந்த
ரசனையோடு விழுங்கியுள்ளேன்.
இருக்கட்டும்.

கடைவீதிக்கு சென்ற போதுதான்
உன் அம்மாவின் செல்லக் கத்தல்
ஞாபகத்திற்கு வந்தது.
'குழந்தை இருக்கும் வீட்டில்
பொம்மைகளை விட -
புத்தகங்கள்தான் அதிகமாய் உள்ளது,
அவள் எவற்றோடுதான்
விளையாடுவாள்?'

உனக்கான பொம்மைகள்
விளையாட்டு பொருட்கள்,
நிறைய வண்ணங்கள்
கொஞ்சம் தூரிகைகள்...
எல்லாம் வாங்கி விட்டேன்
குறிப்பாக,
நீ விரும்பிக் கேட்ட
அழுத்தி நடந்தால்
இசை எழுப்பக்கூடிய காலணிகளையும்
கவனமாய் வாங்கிக் கொண்டேன்.

அடுத்த வாரம்
அநேகமாய் நாம் ஊருக்கு
செல்ல நேரிடும்.
அப்பொழுது
மேலத்தெரு வழியாகத்தான்
தாத்தா வீட்டுக்குச் செல்வோம்.

அந்த வழியாக,
உன் கொள்ளுத் தாத்தா,
தாத்தா..., ஏன் நானும் கூட
செருப்பைக் கையில் தூக்கியபடிதான்
கடந்து சென்றுள்ளோம்.

ஆனால்,
நீ என்னோடு வரும்பொழுது,
உன் பிஞ்சுப் பாதங்களால்
மேலத்தெருவில் அழுத்தமாய்
பாதம் பதித்து நடக்க வேண்டும்.
உன் காலணிகளின் அடியிலிருந்து
எழும் இசை
அந்தத் தெருவில் குடிகொண்டிருக்கும்
சாதியத்தின் செவிகளை
துளைத்தெடுக்க வேண்டும்.
செய்வாயா என் செல்ல மகளே!

நீ நடைபயில கற்றுக்கொண்ட
தருணங்களை விட,
அப்போதைய நிமிடங்கள் இன்னும்
அழகானதாய், அற்புதமானதாய்
இருக்கும்.

• முகிலன்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புக்கள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

www.padippakam.com

PUTHIYA KALACHARAM
(Tamil Monthly)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87
Regd. No: TN / CCN / 434 / 09-11

# முகத்தை மூடிக் கொள்கின்ற குழந்தை

இன்று விடுவிக்கப்படாதவர்கள்
மற்றொரு பக்கத்தில்
கம்பிகளுக்குள் நிற்கிறார்கள்.
அவர்களின் இடுப்பில் இருந்த
குழந்தைகள் அழுகின்றன.
இந்தக் குழந்தை
கொண்டாடத் தொடங்கிய மகிழ்ச்சி
முட்கம்பிகளில், மோதிச் சிதறுகிறது.
அம்மா, அப்பாவின் பெயர்கள் தெரிவு
செய்யப்பட்டிருக்கிறதா? என
உறுதி செய்யப்பட்டு,
ஒலிபெருக்கியில் அறிவித்து விட்டு,
குழந்தையை ஒலிபெருக்கியில்
அவர்கள் புன்னகைக்க விட்டார்கள்.

உன்னை வரவேற்பதற்காக சொற்களை
கொண்டு வந்திருக்கிறேன்.
கைளில் கட்டியிருந்த
அடையாள இலக்கை
அவிழ்த்து, உன்னை வெளியில்
அழைத்துச் செல்லுகிறேன்.
குழந்தை முகத்தைப் பொத்திக்
கொண்டு புன்னகைத்துக்
கொண்டிருக்கிறது.
வெளியைப் பற்றி அது அறிந்திராத
கதைகளைக் கேட்டபடி,
உள்ளே அறிந்து வைத்திருந்த
கதைகளையும் தனது மொழியில் சொல்
லத் தொடங்குகிறது.
எல்லோரும் கேட்டபொழுதும்
யாருக்கும் புரிவதாயில்லை.

முள்ளி வாய்க்காலில்
பதுங்கு குழியொன்றில்
ஷெல்களின் இரவில்
பிறந்து மிஞ்சியிருக்கிறவர்களுக்காக
புன்னகையை வளர்த்துக்
கொண்டிருக்கிறது.

இராணுவ தளபதியொருவனின்
சட்டையில்
தூங்கிக் கொண்டிருக்கும்
நட்சத்திரங்களை இழுத்துப் பிடுங்க
அவனது தோள்களை
எட்டிப் பிடிக்கிறது.
அந்த தளபதியும் குழந்தையைப்
பார்த்து சிரிக்கிறான்.
குழந்தை முழுப் புன்னகையையும்
சட்டென நிறுத்துகிறது.

குழந்தைகள் அழும்
சத்தத்திற்கிடையில்
மீளவும் மீளவும் இந்தக் குழந்தையின்
புன்னகை எழும்புகிறது.
அவர்கள் பேசுகிறார்கள்,
உலகத்தைப் பற்றியும்,
வாழ்வைப் பற்றியும்,
குழந்தைகளின் விடுதலை பற்றியும்.
இன்னும் விமானங்களை வானத்தில்
கண்டுகொண்டிருக்கிற குழந்தைகள்
அதிர்வுகளுக்கு அஞ்சி
நிலத்தில் விழுகின்றன.

இந்தக் குழந்தை புன்னகைத்தது
மற்றைய குழந்தைகளுக்காகவும்
அவர்களுடைய
அம்மா, அப்பாக்களுக்காகவும்
மிகவும் பெரிதாய் புன்னகைத்தது.
புகைப்படங்களுக்கு
முகத்தையும் கொடுத்தது.
அவர்கள் சொன்னார்கள்:
''குழந்தையை எங்கள்
உலகத்திலேயே வளர்த்து விடுங்கள்''
என.

இனி, இந்த நாட்டின் குழந்தை எனவும்,
இது பயங்கரவாதத்திற்கு
துணை போயிருந்தது
கண்டுபிடிக்கப்பட்ட போதும்,
மன்னிக்கப்பட்டிருக்கிறது எனவும்,
இறுதி யுத்தத்திற்கு
சில நாட்களின் முன்பாகப்
பிறந்து, ஒரு வாரத்தில்
சரணடைந்தபடியால்
யுத்தக்குற்றங்களை மற்றைய
எல்லோரைவிடவும் மிக குறைவாகவே
செய்திருக்கிறது எனவும்
சொல்லிக் கொண்டிருந்தார்கள்.
குழந்தை மூச்சை அடக்கி வைத்துக்
கொண்டு பார்க்கிறது.

பெயர் பதிவுசெய்யப்பட்ட
புத்தகத்தில் கடைசியாக
குறித்து வைக்கும் பொழுதும்,
வாசலில் வெளியில்
அனுமதிக்கப்படும் பொழுதும்,
மீளவும் பேருந்தில் ஏறுகிறபொழுதும்
பல கோணங்களில்
படம் பிடிக்கப்பட்டது.
செல்லும் முகவரியையும்
சுற்றித்திரியும் எல்லைகளைப்
பற்றியும் மீள ஞாபகப்படுத்தப்பட்டது.
கூப்பிடுகிறபோது எப்பொழுதும்
குழந்தையைக் கொண்டு வருவதற்கு
தயாராக இருப்பதாக குழந்தையின்
தகப்பன் சொல்லுகிறான்.

குழந்தை கைகளை விலக்கி பார்க்கிறது,
குருதி காய்ந்த தெருக்களை.
நான் சொல்லத் தொடங்குகிறேன்
கொண்டு வந்த சொற்களை.
அதன் புன்னகைக்காக
காத்துக்கொண்டிருந்தேன்.
கணவனைத் தேடி மற்றொரு
முகாமிற்கு செல்ல இறங்குகிற
இன்னொரு தாயையும்,
குழந்தையையும் பார்த்து
முகத்தை மூடிக்கொள்ளுகிறது.
கையை விலக்கிய பொழுது,
முகம் சிவந்து போயிருந்தது.

கையில்
அடையாள இலக்கம் கட்டியிருந்த
இடத்தில் குருதி கசிந்திருந்தது.
வீட்டின் முன்,
விறாந்தையில் இருந்தபடி
தனியே குழந்தை மீளவும்
புன்னகைத்துக் கொண்டிருந்தது.

**(விடுதலைப் புலிகளது கட்டாய ஆட்சேர்ப்பிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக திருமணம் செய்து கொண்ட யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு / தம்பதிகளுக்கு பிறந்த இந்தக் குழந்தை 20.09.2009 அன்று கைதடி தடுப்பு முகாமிலிருந்து விடுவிப்பதற்கு காத்துக் கொண்டிருந்ததை வைத்து எழுதப்பட்ட கவிதை).**

**• தீபச்செல்வன்**



படிப்பகம்